சுகாதாரக் கொள்கைகள், திட்டங்களில் பெண்களின் பாலினம் மற்றும் உரிமைகள் குறித்த கண்ணோட்டம்

# arrow

vol. 20 no. 1 2014
(Translated 2014)
issn 1394-4444

## மாற்றத்திற்காகச் செயல்படும் ஆரோ

championing women's sexual and reproductive rights

# வறுமை ஒழிப்பு, உணவு உற்பத்திக்கான அதிகாரம், உணவுப் பாதுகாப்பு முதலியனவற்றைப் பாலியல், இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளுடன் தொடர்புபடுத்துவது




தலையங்கம் 2–8
வறுமை ஒழிப்பு, உணவு உற்பத்திக்கான அதிகாரம், உணவுப் பாதுகாப்பு முதலியனவற்றைப் பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளுடன் தொடர்புபடுத்துவது

சிறப்புக்கட்டுரைகள் 9–12
2015க்கு பின் வரவிருக்கும் வளர்ச்சித் திட்டங்களில் வறுமை, உணவுக்கு உத்திரவாதமின்மை, பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் - இதில் எதை மையப்படுத்துவது - பிலிப்பைன்ஸ் நாட்டினரின் பார்வையிலிருந்து

12–14
உணவு மற்றும் ஊட்டச் சத்திற்கான உரிமைகளும், பெண்களின் பாலியல் இனப்பெருக்க உரிமைகளும் ஒன்றோடு ஒன்று இணைந்ததும் பிரிக்க முடியாததுமாகும்

14–18
வறுமை ஒழிப்பு, உணவு உற்பத்திக்கான அதிகாரத்தைப் பெறுதல், உணவுப் பாதுகாப்பு மற்றும் அனைவருக்கும் பாலியல் மற்றும் இனப்பெருக்க நலச் சேவைகள்: இவ்வனைத்தையும் பெற என்ன செய்யவேண்டும்?

18–22
வறுமை, உணவிற்கு உத்திரவாதமின்மை மற்றும் SRHR பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பலதரப்பட்ட இயக்கங்களின் கூட்டணியைப் பலப்படுத்துதல்

22–26
உலகின் தென்பகுதியிலிருந்து வரும் குரல்கள்
மாற்றத்திற்கான அந்த துணிச்சல் நானு கதானியுடன் நடைபெற்ற உரையாடல்

27–33
மண்டல மற்றும் நாடுகள் அளவில் நடைபெறும் செயல்பாடுகளைக் கண்காணித்தல்

34–41
ஆரோவின் SRHR தகவல் பரிமாற்ற மையத்திலிருந்து கிடைக்கும் ஆதாரங்கள்

41–44
ஆதாரங்கள்

44–47
சொல் விளக்கங்கள்

47–51
தெற்காசிய நாடுகளிலுள்ள உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கான கொள்கைகள் என்னென்ன; அவைகளில் ஆண்-பெண் சமத்துவம் மற்றும் SRHR குறித்த கண்ணோட்டங்கள் இடம் பெற்றுள்ளதா?

52
பதிப்பாசிரியர்கள் குழு


வெளியிடுவோர்
the asian-pacific resource & research centre for women - ஆரோ

தமிழாக்கம் செய்து வெளியிடுவோர் – ரூசக்

RUWSEC

நிதியுதவி
the David & Lucile Packard FOUNDATION

# பிளவுகளை ஒன்றிணைப்போம்

## வறுமை ஒழிப்பு, உணவு உற்பத்திக்கான அதிகாரம், உணவுப் பாதுகாப்பு முதலியனவற்றைப் பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளுடன் தொடர்புபடுத்துவது

வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் (Sexual Reproductive Health and Rights - SRHR) என்பது முன்னேற்றம் குறித்து பணி செய்பவர்கள் மத்தியில் அண்மைக்காலமாகப் பரவலாகப் பேசப்படுகின்ற ஒரு விஷயமாகும். இவைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனியே விவாதங்கள் நடைபெறுகிறது என்ற போதிலும், இம்மூன்றையும் தொடர்புபடுத்துவதற்கான முயற்சிகள் மிகவும் குறைவாகவே நடந்துள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, வறுமை ஒழிப்பு மற்றும் உணவுப் பாதுகாப்புக் குறித்து நடைபெறும் விவாதங்களில் ஆண்-பெண் சமத்துவக் கண்ணோட்டம் என்பது சிறிதளவும் இல்லை. அதாவது, மேற்சொன்ன பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பெண்கள் ஆற்றிவரும் முக்கியப் பங்கு குறித்த பேச்சுக்கள் இவ்விவாதங்களில் அதிகமாக இடம்பெறுவதில்லை.

மனித உரிமை என்பதே இவ்வெல்லா வற்றிற்கும் அடிப்படையானது என்று எண்ணும் போதுதான் இந்த பிரச்சனைகளுக்கு இடையேயுள்ள தொடர்புகளைப் புரிந்துகொள்ள முடியும். அப்புரிதல்தான் சமூகப் பொருளாதார, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அமைதி என எல்லாத் துறைகளிலும் மனித சமூகம், மேம்பாடு அடைவதற்குத் தகுந்த திட்டங்களைத் தீட்ட வழி வகுக்கும்.

இம்மூன்று விஷயங்களுக்கிடையே பல வழிகளில் தொடர்புகள் உள்ளன. அவைகள் அனைத்தையும் இக்கட்டுரையில் எடுத்துரைப்பது என்பது இயலாது. ஏனென்றால், அவற்றை விவரிக்க நிறையப் பக்கங்கள் தேவைப்படும். இருந்த போதிலும், முன்னேற்றம் குறித்து நடைபெறும் விவாதங்களில் மக்களை, அதிலும் குறிப்பாக, பெண்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினர்களை நாம் மையப்படுத்தும் போதுதான் இவைகளுக்கு இடையேயுள்ள தொடர்புகளை நன்கு புரிந்துகொள்ள முடியும். பாலின சமத்துவம் மற்றும் உரிமைகள் அடிப்படையிலான ஒரு பகுப்பாய்வை மேற்கொள்ளும்போது நாம் இப்பிரச்சனைகள் ஒவ்வொன்றிற்கும் என்னென்ன வழிகளில் தொடர்பு உள்ளது என்பதும், அவை எவ்வாறு ஆரோக்கியம் மற்றும் சுகாதாரக் குறைபாடுகளுக்கு வழிவகுக்கிறது என்பதையும் கண்டறியலாம்.

### வறுமையையும் SRHR ஐயும் தொடர்புபடுத்துதல்

வறுமை என்பது வருமானத்தை அடிப்படையாகக் கொண்டது என்ற ஒரு குறுகிய கண்ணோட்டத்தில்தான் பெரும்பாலும் புரிந்துகொள்ளப்படுகிறது. அதனால் வறுமை ஒழிப்புக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் அனைத்தும் வருமானத்தை அதிகரிப்பது என்ற ஒன்றை மட்டுமே மையப்படுத்துகின்றன. பொதுவாக, வறுமை என்பது நாட்டின் நிகர வளர்ச்சி (GDP) மற்றும் 'வறுமைக் கோட்டில் உள்ளவர்கள் வருமானம்'[1] என்ற குறியீடுகளின் மூலம் கணக்கிடப்படுகிறது. பல அறிஞர்களின் கருத்துப்படி[2] வறுமை என்பது சமூகப் பொருளாதார, அரசியல் காரணங்களினால் ஏற்படுகிறது. எனவே, வறுமையை ஒழிப்பதற்கும், அதைக் கணக்கிடுவதற்கும் பல பரிமாண அணுகுமுறை (Multidimensional Poverty Index-MPI) ஒன்று அவசியமாகிறது. பல பரிமாண வறுமைக் குறியீட்டைப் பயன்படுத்தும்போதுதான் தனிநபரின் வருமானம் மற்றும் நுகர்வு என்ற குறுகிய வட்டத்தை விட்டு நம்மால் வெளியே வரமுடியும். மேலும், வறுமையோடு தொடர்புடைய ஆரோக்கியம், கல்வி, வாழ்க்கைத்தரம் போன்ற பல விஷயங்களையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியும். 2013ஆம் ஆண்டிற்கான மனிதவள மேம்பாட்டு அறிக்கையின்படி[3]

ஆதாரக் குறிப்புகள்

1 சர்வதேச அளவீட்டின்படி வறுமைக்கோடு என்பது, நாளொன்றுக்கு ஒரு அமெரிக்க டாலருக்குக் குறைவான தனிநபர் வருமானம் கொண்டவர்கள் என்ற அடிப்படயில் தீர்மாணிக்கப்பட்டது. நாடுகளின் வாங்கும் சக்தி சிறிது அதிகரித்ததைத் தொடர்ந்து, உலக வங்கியானது 2005ஆம் ஆண்டு இதை 1.25 அமெரிக்க டாலராக உயர்த்தியது. இருந்தபோதிலும் இவ்வளவீட்டின்படி வறுமைக்கோட்டிற்கு சற்று மேலாக உள்ளவர்களை ஏழைகள் எனக் கருதப்படுவதில்லை என்பதால் இன்றும் இவ்வளவீடு ஒரு பரந்த அளவிலான விவாதப் பொருளாக உள்ளது.

2 Sen, A. (1999). *Development as freedom.* Barcelona and Oxford: Oxford University Press; Chambers, R. (2005). Participation, pluralism and perceptions of poverty. Paper for the International Conference on Multidimensional Poverty: Brasilia August 29-31 2005); the World Bank. (2000). *World development report 2000/2001.* Attacking Poverty; among others.

3 United Nations Development Programme (UNDP). (2013). *Human development report 2013. The rise of the South: Human progress in a diverse world.* New York: UNDP. http://hdr.undp.org/sites/default/files/reports/14/hdr2013_en_complete.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

1.56 மில்லியன் மக்கள் (104 நாடுகளில்) பல பரிமாண வறுமையில் வாழ்வதாகத் தெரிகிறது. தினசரி 1.25 அமெரிக்க டாலர் மற்றும் அதற்குக் குறைவாக வருமானம் உள்ளவர்கள் என்ற மதிப்பீட்டின்படி 1.14 மில்லியன் மக்கள் வறுமையில் உள்ளனர். எனவே, டாலர் அடிப்படையிலான கணக்கீட்டை விட பல பரிமாண குறியீட்டின்படி வறுமையில் வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. உலகளவில் பல பரிமாண வறுமையில் வாழ்பவர்களில் 51% பேர் தெற்காசியாவில் வசிக்கின்றனர். MPI அளவீட்டை நாம் பயன்படுத்தும்போது வறுமையில் வாழ்பவர்களில், பெரும்பாலானோர் பெண்களும், புறக்கணிக்கப்பட்ட மக்களும்தான் என்பதை எடுத்துரைப்பது எளிது, ஏனெனில், கல்வி மற்றும் தரமான சுகாதார சேவைகளைப் பெறுவதில் அவர்கள் மிகவும் பின்தங்கியுள்ளனர். மேலும், வேலைவாய்ப்பு, அரசியலில் பங்கேற்பது, முடிவெடிப்பது மற்றும் அதிகாரம் மிக்க பதவியை வகிப்பது போன்ற சுதந்திரங்களும் அவர்களுக்கு மறுக்கப்படுகிறது.

வறுமைக்கும் ஆரோக்கியத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. வறுமை என்பது ஆரோக்கியக் குறைபாட்டிற்குக் காரணமாகவும் இருக்கிறது. அதுபோலவே, ஆரோக்கியக் குறைபாடும் வறுமையை ஏற்படுத்துகிறது. 'நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் ஏழைகளுக்கு அதிகமாக உள்ளது. ஆனால் அப்பிரச்சனைக்கு அவர்களால் மருத்துவ உதவியைத் தக்கத்தருணத்தில் பெறமுடிவதில்லை. ஏனென்றால், மருத்துவச் சேவை அமைப்புகள் அவர்களுக்கு எட்டாக் கனியாக உள்ளது'.[4] அதிலும், குறிப்பாக, பெண்கள் நோய்வாய்ப்படும்போது, அவர்களால் மருத்துவச் செலவுகளைச் சமாளிக்க முடிவதில்லை, பாலின பாகுபாடுகளாலும் அதிகம் பாதிக்கப் படுகின்றனர். நேரமின்மை, குடும்ப உறுப்பினர்களைக் கவனித்துக் கொள்வது மற்றும் சமூகப் புறக்கணிப்புகளால் தைரியமற்று இருப்பது போன்ற பல காரணங்களினால் பெண்கள் தங்களின் ஆரோக்கியம் குறித்து முடிவெடுக்க அதிகாரமில்லாத நிலையில் உள்ளனர். உதாரணமாக, மருத்துவச் சேவைகளைப் பெறுவதற்காகும் செலவுகள் அதிகமாக இருப்பதனால், தாய்-சேய் ஆரோக்கியமாக வாழ்வதற்கு அத்தியாவசியமானதாக இருக்கும் அவசரகால மகப்பேறு மருத்துவச் சேவைகளைக்கூட பெண்களால் பெற முடிவதில்லை.

சுகாதார சேவைகளைப் பெற இயலாதது மட்டுமல்லாமல் அடிப்படை வசதி இல்லாத குடியிருப்புக்களில் பெண்கள் அதிகமாக வாழ்கின்றனர். மேலும், கணவரின் மூலம் ஏற்படும் வன்முறைக்கும் அதிகம் ஆளாகின்றனர். இதனால் அவர்களின் ஆரோக்கியமும், SRHR-ம் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக, ஏழைகள் வசிக்கக்கூடிய பகுதிகளில் போதிய துப்புரவு வசதிகள் இருப்பதில்லை. அதாவது, சுத்தமான கழிப்பறை மற்றும் போதிய தண்ணீர் வசதிகள் இல்லாததனால், மாதவிலக்கு சமயங்களில் பெண்கள் மிகவும் சிரமப் படுகின்றனர். அதன் விளைவாக, சிறுநீர்த் தடத்தொற்று (UTI) மற்றும் இனப்பெருக்க தடத்தொற்று (RTI) போன்ற பிரச்சனைகளுக்கு ஆளாகின்றனர். மேலும், போதிய தண்ணீர் வசதிகள் இல்லாதது பெண்ணுறைகள், மற்றும் டயாப்பிராம் போன்ற தற்காலிக் கருத்தடை சாதனங்களைப் பெண்கள் பயன்படுத்துவதையும் பாதிக்கிறது.[5]

ஏழைகளுக்கு நவீன கருத்தடை சாதனங்கள் சரிவரக் கிடைப்பதில்லை. அதனால், நடுத்தர மற்றும் ஏழை நாடுகளின் கிராமப் புறங்களில், கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. மேலும், கருத்தடையை உபயோகிப்பது என்ற சுமையும் பெண்கள் மீதுதான் சுமத்தப்படுகிறது. ஏழைப் பெண்களுக்குத் தேவையில்லாத கர்ப்பம் மற்றும் அதிக எண்ணிக்கையிலான கர்ப்பங்களும் ஏற்படுகிறது. பாதுகாப்பில்லாத கருக்கலைப்பிற்குப் பெண்கள் ஆளாகின்றனர். கருத்தடை முறைகள் சரிவரக் கிடைக்காததினால், குறிப்பாக, பாதுகாப்பான கருக்கலைப்புச் சேவைகளைப் பெறுவதில் பலவிதமான தடைகள் இருக்கக்கூடிய பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பற்ற கருக்கலைப்பிற்குச் சென்று அதனால் மகப்பேறு மரணங்கள் ஏற்படுவதுடன், வாழ்நாள் முழுவதும் உடல்நலக் கோளாறுகளுடன் வாழ வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது.

வறுமையின் விளைவாக ஏற்படும் மற்றொரு பிரச்சனை குழந்தை மற்றும் இளவயது திருமணமாகும்.[6] தெற்காசிய நாடுகளிலுள்ள ஏழைக் குடும்பங்களில் பெண்களுக்கு, இளம் வயதிலேயே திருமணம் நடைபெறுகிறது.

ஆதாரக் குறிப்புகள்

4 CSDH. (2008). *Closing the gap in a generation: Health equity through action on the social determinants of health. Final report of the Commission on Social Determinants of Health.* Geneva: World Health Organisation. www.who.int/social_determinants/final_report/csdh_finalreport_2008.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

5 Ravindran, T.K.S. & Nair M.R. (2012). Poverty and its impact on sexual and reproductive health and rights of women and young people in the Asia-Pacific Region. In *Action for sexual and reproductive health and rights: Strategies for the Asia-Pacific beyond ICPD and the MDGs.* Kuala Lumpur: Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW). www.arrow.org.my/uploads/Thematic_Papers_Beyond_ICPD_&_the_MDGs.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

6 Khanna, T., Verma, R. & Weiss, E. (2013). *Child marriage in South Asia: Realities, responses and the way forward.* Washington DC: International Center for Research on Women (ICRW). www.icrw.org/files/publications/Child_marriage_paper%20in%20South%20Asia.2013.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

பொருளாதார ரீதியாக பெண்களை ஒரு சுமையாகப் பார்ப்பதுதான் இதற்கு முக்கிய காரணம். குழந்தை மற்றும் இளவயதுத் திருமணம் ஆகிய இரண்டும் வறுமையைத் தொடர்ந்து நிலைக்கச் செய்வதற்கான சூழற்சியை ஏற்படுத்துகிறது. போதிய கல்வியறிவைப் பெற முடியாததினால், நல்ல வேலை வாய்ப்புகளையும் இவர்கள் இழக்கின்றனர். இளம் பெண்கள் உடல் ரீதியாக தயாராவதற்கு முன்பே, பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு கர்ப்பமாவதற்கான ஆபத்துகளையும் இது அதிகரிக்கிறது. மேலும், வன்முறை மற்றும் HIV/AIDS உட்பட இதர பால்வினை நோய்த் தொற்றுகளுக்கும் ஆளாகின்றனர். தங்களின் சுய உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள இயலாததினால் உணவு, ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம் குறித்த வசதிகளைப் பெற அவர்களால் முடிவதில்லை.

## வறுமையையும், உணவுப் பாதுகாப்பின்மையையும் தொடர்புபடுத்துதல்

உணவுப் பாதுகாப்பிற்கு நான்கு தூண்களாக இருப்பது, உணவு தாராளமாகக் கிடைப்பது, எளிதில் பெறுவது, நன்கு பயன்படுத்துவது மற்றும் உணவிற்கு உத்திரவாதத்தை ஏற்படுத்துவதுமாகும். அதாவது, நல்லதொரு ஆரோக்கிய வாழ்க்கையை வாழத் தேவைப்படும் சத்தான உணவு, பாதுகாப்பாக எல்லா மக்களுக்கும் போதிய அளவு எல்லா நேரங்களிலும் கிடைப்பதையும் மற்றும் அது அவர்கள் வாங்கக் கூடிய விலையில் கிடைப்பதையும் குறிக்கின்றது.[7]

வறுமைக்கும், உணவுப் பாதுகாப்பின்மைக்கும் நேரடியான ஒரு தொடர்பு இருக்கிறது. வறுமை நிலையிலுள்ள ஒருவர் உணவைப் பணம் கொடுத்து வாங்கும்போது, அவருக்குத் தேவைப்படும் உணவை அவரால் வாங்க இயலாது. உணவுப் பயிர்களை அப்பகுதியில் பயிரிட்டாலும், அவற்றைச் சந்தையில் விற்கவேண்டிய அவசியம் இருப்பதால், நிலமற்ற விவசாயிகளுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின்மை ஏற்படுகிறது. பெரிய நிறுவனங்கள் விவசாயத்துறையில் கால்பதிப்பதனால் இப்பிரச்சனை மேலும், தீவிரமடைகிறது. பெரிய நிறுவனங்களிடம் விவசாயிகள் தங்களின் நிலத்தை இழக்க நேரிடுகிறது. விதைகள் மீதான கட்டுப்பாடு மற்றும் உரிமையையும் அவர்கள் இழக்கின்றனர். ஒரே பயிரையும் தொடர்ந்து பயிரிட வேண்டிய நிர்ப்பந்தமும், உணவுப் பயிர்களை விடுத்து பணப்பயிர்களைப் பயிரிடவேண்டிய சூழ்நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். வளர்ந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் தரம்குறைந்த மாண்ய விலையிலான உணவுப் பொருட்களை வளர்ந்து வரும் நாடுகளுக்குக் கொண்டுவந்து குவிப்பதனாலும், விவசாயிகள் பாதிப்படைகின்றனர். மேற்சொன்ன நிகழ்வுகள் அனைத்தும் பெண் விவசாயிகளை (இவர்களை விவசாயிகள் என்றே கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை) மிகவும் பாதிக்கின்றது. இதற்கு முக்கியக் காரணம் என்னவென்றால், விவசாய உற்பத்திக்கான வள ஆதாரங்கள் மீது அவர்களுக்கு எவ்வித உரிமையுமில்லை. அத்துடன், குழந்தைகளைப் பெற்றெடுத்துப் பராமரிப்பது என்ற கூடுதல் சுமையும் பெண்களுக்கு உள்ளது.

உணவுப் பாதுகாப்பு என்பதில் ஊட்டச்சத்துப் பாதுகாப்பும் உள்ளடங்கியுள்ளது. உணவுப் பாதுகாப்புப் பெற்றுள்ள ஒருவரால் பல்வேறு காரணங்களினால் குறைவான கலோரியுள்ள ஊட்டச் சத்துக்களையே எடுத்துக்கொள்ள முடிகிறது. ஏனென்றால், அவரால் போதிய அல்லது தகுந்த உணவை உட்கொள்ள முடிவதில்லை. உணவு உற்பத்தி அதிகமாக உள்ள காலங்களில் நாம் வாழ்ந்தால்கூட உலகில் 870 மில்லியன் மக்கள், அதாவது எட்டில் ஒருவர் நாள்பட்ட ஊட்டச்சத்துப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் ஆசிய பசிபிக் பகுதியில் மட்டும் 563 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.[8]

## உணவு உற்பத்திக்கான உரிமைக்கும், SRHRக்கும் இடையே உள்ள தொடர்புகள்:

உணவு உற்பத்திக்கான உரிமை என்ற கருப்பொருளானது கடந்த 20 ஆண்டுகளாகவே பழக்கத்தில் உள்ளது என்ற போதிலும், சமீப காலமாகத்தான் இது மிகவும் பிரபலமடைந்து வருகிறது. குறிப்பாக, உணவு மற்றும் விவசாயத்தின் மீது புதிய தாராளமயக் கொள்கைகள் ஏற்படுத்தும் பாதிப்புகளின் காரணமாக இதுபற்றி பரவலாகப் பேசப்படுகிறது. அனைவருக்கும் போதிய உணவு என்ற உரிமையை அடைவதற்கு மிகவும் அடிப்படையாக இருப்பது உணவு பாதுகாப்பாகும்.

உணவு உற்பத்திக்கான உரிமைக்கும் SRHRக்கும் இடையேயான தொடர்புகள் அவ்வளவாகக் கண்டறியப்படவில்லை. மேலும் இவற்றை வறுமையுடன் ஒப்பிட்டுப்

ஆதாரக் குறிப்புகள்

7 UN Food and Agriculture Organisation. (1996). Rome Declaration on Food Security and World Food Summit Plan of Action and World Food Summit Plan. www.fao.org/docrep/003/w3613e/w3613e00.htm என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

8 UN Food and Agriculture Organisation, the International Fund for Agricultural Development and the World Food Programme. (2012). *State of food insecurity in the world 2012. Economic growth is necessary but not sufficient to accelerate reduction of hunger and malnutrition.* Rome: FAO. www.fao.org/docrep/016/i3027e/i3027e.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

பார்ப்பதும் சிரமமாக உள்ளது. நாம் பூரண உடல், மன ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு அவசியமான ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதை உணவுப்பாதுகாப்பு உறுதி செய்கிறது. என்ன உற்பத்தி செய்யப்படுகிறது, அது எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது, அதற்குத் தேவையான வள ஆதாரங்கள் என்னென்ன? என்பதன் மீது நமக்கு அதிகாரம் இருக்கும் போதுதான், நமது ஆரோக்கியத்திற்கு உகந்த உணவுகளை நம்மால் உட்கொள்ள முடியும். சர்வதேச விவசாயத் தொழிலில், உணவு உற்பத்திக்கான அதிகாரத்தை நாம் இழப்பதனால், நாம் எதைச் சாப்பிடுவது என்பதற்கான அதிகாரமும் நமக்கு இருப்பதில்லை.

ஊட்டச்சத்துப் பற்றாக்குறை மற்றும் குறைபாடுகளினால் ஆரோக்கியக் குறைபாடு ஏற்படுகிறது. நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாடுகள், உடல், மன வளர்ச்சியிலும், அதன் செயல்பாடுகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. ஊட்டச்சத்துப் பற்றாக் குறையினால் இரத்தசோகை, நோஞ்சான் மற்றும் சவலை நோய்கள் ஏற்படுகிறது. உலகிலுள்ள கர்ப்பிணிகளில் பாதிபேர் இரும்புச் சத்து பற்றாக்குறையினால் ஏற்படும் இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இப்பெண்கள், அடுத்தடுத்து கர்ப்பமாகும்போது அவர்களின் ஆரோக்கியம் மேலும் மோசமடைகின்றது. இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்களின் உடலில் சேமித்துவைத்துள்ள சிறிதளவு சத்துக்களும் குழந்தையின் வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவர்களுக்கு பிரசவத்தின்போது உதிரப்போக்கு ஏற்பட்டால், அது அவர்களின் உயிருக்கு ஆபத்தாகவோ அல்லது நாள்பட்ட நோய்கள் ஏற்பட்டு வாழ்நாள் முழுவதும் அவதியுறவும் நேரிடுகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் நிகழும் மகப்பேறு மரணத்திற்கு முக்கியக் காரணமாக இருப்பது பிரசவத்திற்குப் பின் ஏற்படும் உதிரப்போக்காகும். பெண் பிள்ளைகள் மத்தியில் காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு அவர்களின் உடல் வளர்ச்சியைப் பாதிக்கிறது. பிரசவ கால சிக்கல்களையும் உண்டாக்குகிறது. மேலும், எடை குறைவான குழந்தைகள் பிறக்கின்றன. நாள்பட்ட ஊட்டச்சத்துக் குறைபாடு குழந்தையின்மைக்கும் வழி வகுப்பதாகத் தெரியவருகிறது. விந்தணு மற்றும் கரு முட்டை உற்பத்தியாவது போன்ற உடலியல் நிகழ்வுகளுக்கு நல்ல ஊட்டச்சத்தும் உடல் ஆரோக்கியமும் அத்தியாவசியமான ஒன்றாக

**ஊட்டச்சத்துப் பற்றாக்குறையினால் இரத்தசோகை, நோஞ்சான் மற்றும் சவலை நோய்கள் ஏற்படுகிறது. உலகிலுள்ள கர்ப்பிணிகளில் பாதிப்பேர் இரும்புச்சத்துப் பற்றாக்குறையினால் ஏற்படும் இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இப்பெண்கள், அடுத்தடுத்து கர்ப்பமாகும்போது அவர்களின் ஆரோக்கியம் மேலும் மோசமடைகின்றது. இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்களின் உடல் சேமித்துவைத்துள்ள சிறிதளவு சத்துக்களும் குழந்தையின் வளர்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இவர்களுக்கு பிரசவத்தின்போது உதிரப்போக்கு ஏற்பட்டால், அது அவர்களின் உயிருக்கு ஆபத்தாகவோ அல்லது நாள்பட்ட நோய்கள் ஏற்பட்டு வாழ்நாள் முழுவதும் அவதியுறவும் நேரிடுகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் நிகழும் மகப்பேறு மரணத்திற்கு முக்கியக் காரணமாக இருப்பது பிரசவத்திற்குப் பின் ஏற்படும் உதிரப்போக்காகும்.**

உள்ளது. உடல் பருமனாவதைத் தடுக்க உணவு உண்பதைத் தவிர்த்தல் மற்றும் உடல் எடையைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள உண்ட உணவை வாந்தி எடுத்தல் போன்ற சில பழக்கங்களை வளரிளம் பருவத்தினர் கடைபிடிக்கின்றனர் என்றும், இதனால் அவர்களுக்கு குழந்தையின்மைப் பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. HIV/AIDS நோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையானது மிகவும் மோசமாக உள்ளது. அவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து விடுவதால், அவர்களின் குடல் பகுதியிலுள்ள மெல்லிய செல்களால் ஊட்டச்சத்துக்களைக் கிரகித்துக் கொள்ளும் திறன் குறைந்துவிடுகிறது.

ஊட்டச்சத்துப் பற்றாக்குறையானது, அதிக உடல் பருமன் என்ற குறைபாட்டிற்கும் வழிவகுக்கக்கூடும். விலை குறைவு என்பதற்காகவும் அல்லது செல்வச் செழிப்பானவர்கள் என்று நாம் அடையாளப் படுத்திக் கொள்வதற்காகவும் அதிக விளம்பரங்களுடன் விற்கப்படும் ஆரோக்கியமற்ற உணவு வகைகளையே நாம் விரும்பி உண்பதற்கு பழகியுள்ளோம். இதுபோன்ற உணவுகளில் கொழுப்பு மற்றும் சர்க்கரை சத்துக்கள் அதிகமாக இருப்பதனால் அவற்றை அதிக அளவில் நாம் உட்கொள்ளும் போது உடல் பருமன், சர்க்கரை, இரத்த அழுத்தம் போன்ற நாள்பட்ட நோய்கள் ஏற்படுகிறது. சர்க்கரை நோயினால் பெண்கள் பாதிக்கப்படும்போது

அதிலும் குறிப்பாகக் கர்ப்பத்தின்போது ஏற்படக்கூடிய சர்க்கரை நோயினால், வயிற்றில் வளரும் குழந்தைக்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதனால் அடுத்த தலைமுறையினரின் ஆரோக்கியமும் பாதிக்கப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்படும்போது கருப்பையில் வளரும் கருவின் வளர்ச்சி குன்றுகிறது. அதனால் கருவின் இயக்கத்தில் பல சிக்கலான மாற்றங்கள் ஏற்படுகிறது. மேலும், அக்குழந்தை பிறந்து வளர்ந்து பெரியவர்களாகும்போதும் நாள்பட்ட நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளையும் இது அதிகரிக்கிறது. ஆசிய-பசிபிக் பகுதியிலுள்ள வளர்ந்துவரும் நாடுகளில் பெரும்பாலானவற்றிலுள்ள மக்கள் பட்டினி மற்றும் அதிக உடல் பருமன் என்ற இரு பிரச்சனைகளாலும் அவதியுறுகின்றனர்.

ஊட்டச்சத்துக் குறைபாடு, பாலியல் ஆரோக்கியத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பாலுறுப்புகளின் செயல் பாடுகளில் குறைபாடு, பாலுணர்வுகள் குறைவது மற்றும் உடலுறவின்போது வலி ஏற்படுவது போன்ற பல பிரச்சனைகளும் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்படுகிறது. ஊட்டச்சத்துப் பற்றாக்குறையினால் சோர்வு மற்றும் உடல்நலக் கோளாறுகள் ஏற்பட்டு, ஓர் ஆரோக்கியமான பாலியல் வாழ்க்கை வாழமுடியாத நிலையும் ஏற்படுகிறது.[9]

நாம் உண்ணும் உணவில் பூச்சி மருந்துகளின் நச்சுத் துகள்கள் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பூச்சி மருந்துகளைத் தொடர்ந்து பயன்படுத்தும்போது அது உணவு உற்பத்தி செய்பவர்களை மட்டுமல்லாது, அவ்வுணவுகளை உட்கொள்பவர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கிறது.
இம்மருந்துகளினால் மார்பகப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாகின்றன.மேலும், தாய்ப்பாலிலும் பூச்சி மருந்துகளின் துகள்கள் காணப்படுகின்றன. விவசாயத்தில் ஈடுபடும் பெண்கள் பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் களைக்கொல்லிகளைப் பயன்படுத்த நேரிடுவதால் கருச்சிதைவு, குழந்தையின்மை, அங்கக்குறைபாடுகளுடன் குழந்தை பிறப்பது மற்றும் புற்றுநோய்களுக்கான ஆபத்துக்களும் அவர்களுக்கு அதிகமாக உள்ளது.[10,11]
இப்பூச்சி மருந்துகள் அடுத்த தலை முறையினரின் ஆரோக்கியத்திலும் பாதிப்பை உண்டுபண்ணுகிறது. அதாவது, பூச்சி மருந்துகளின் தாக்கத்திற்கு நேரடியாக ஆளாகாதவர்களுக்குக் கூட, தலைமுறையைக் கடந்து பாதிப்பை விளைவிக்கிறது.

## ஆண்-பெண் சமத்துவத்திற்கும் இதர காரணிகளுக்கும் உள்ள தொடர்புகள்:

போதுமான ஊட்டச்சத்து மற்றும் உணவைப் பெறுவதில் பாலின சமத்துவம் என்பது ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது குடும்பங்களில் உணவு எப்படி பகிர்ந்தளிக்கப் படுகிறது மற்றும் நுகரப்படுகிறது என்பதிலிருந்து இந்தப் பாகுபாடுகளைத் தெளிவாகக் காணலாம். உதாரணமாக, தெற்காசிய நாடுகளின் பெரும்பாலானவற்றில், வீட்டில் உணவு உட்கொள்வதில் ஓர் அதிகார வரையறை நிலவுகிறது. அதாவது, வீட்டிலுள்ள வயதில் மூத்த ஆண்கள்தான் முதலில் சாப்பிடவேண்டும். அதனைத் தொடர்ந்து இளம் வயது ஆண்களும், ஆண் குழந்தைகளும் சாப்பிட்ட பிறகு, பெண் குழந்தைகளும், பெண்களும் உணவு உட்கொள்வது என்பதுதான் வழக்கமாக உள்ளது. குறிப்பாக, ஏழைக் குடும்பங்களில் பெண் குழந்தைகள் மற்றும் பெண்கள் கடைசியாகச் சாப்பிடும்போது, அவர்களுக்கு மிகக் குறைந்த அளவு உணவே மிஞ்சுகிறது. சத்துள்ள உணவின் பெரும்பகுதியை ஆண்கள் எடுத்துக் கொள்கின்றனர். அதன் விளைவாக தெற்காசிய நாடுகளில் பட்டினி மற்றும் சத்துக் குறைபாடுகள், ஆண்களைவிட பெண்கள் மத்தியில்தான் அதிக அளவில் காணப்படுகிறது.

பாலியல் என்ற விஷயம் முன்னேற்றம் குறித்துப் பேசுபவர்கள் மத்தியில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்துவருகிறது. வறுமையானது போதிய சுதந்திரமில்லாததாலும் மற்றும் சமூகப் புறக்கணிப்புகளாலும் ஏற்படுகிறது என்ற பார்வையில் அணுகும்போதுதான் வறுமையினுடைய பாதிப்புகளுக்கும், பாலியலுக்கும் எப்படி நெருக்கமான தொடர்பு உள்ளது என்பதை ஒருவரால் கண்டறிய முடியும். (மேலும் விவரங்களுக்கு சாம்பர் என்பவரின் வறுமையினால் ஏற்படும் பாதிப்புகள் மாதிரியைப் பார்க்கவும்).[12]

தனிநபருக்கு அவரின் உடல்மேல் உள்ள உரிமையானது வள ஆதாரங்களையும் சேவைகளையும் பெறுவதைத் தீர்மானிப்பதில் முக்கியப்பங்கு வகிக்கிறது. பல பெண்களுக்கும், பாலியல் தொழிலில் ஈடுபடக்கூடியவர்கள் உட்பட பாலியல் ரீதியாக சிறுபான்மையினராக உள்ள குழுவினருக்கும் அவர்கள் யார் என்ற குடியுரிமை கூட வழங்கப்படுவதில்லை.

### ஆதாரக் குறிப்புகள்

9 ARROW & World Diabetes Foundation (WDF). (2012). *Diabetes: A missing link to achieving sexual and reproductive health in the Asia-Pacific region.* Kuala Lumpur: Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW) & Copenhagen: World Diabetes Foundation. www.worlddiabetesfoundation.org/sites/default/files/Arrow_DiabetesAMissingLinktoSRH.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

10 Danguilan, M. (2012). Food for thought: Why millions go hungry in the midst of plenty. In *Proceedings of the Regional Meetings: Beyond ICPD and the MDGs: NGOs Strategising for Sexual and Reproductive Health and Rights in the Asia-Pacific Region and Opportunities for NGOs at National, Regional, and International Levels in the Asia-Pacific Region in the Lead-up to 2014:NGO-UNFPA Dialogue for Strategic Engagement.* Kuala Lumpur: Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW). www.arrow.org.my/APNGOs/Proceedings%20Report_Final.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

11 Tholkappian, C. & Rajendran, S. (2011). Pesticide application and its adverse impact on health: Evidences from Kerala. *International Journal of Science and Technology,* August 2011, 1(2): 56-59pp. www.ejournalofsciences.org என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

12 Jolly, S. (2010). Poverty and sexuality: What are the connections? Sweden: Swedish International Development Agency (Sida). www.sxpolitics.org/wp-content/uploads/2011/05/sida-study-of-poverty-and-sexuality1.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**தனிநபர்களுக்கு அவர்களின் உடல்மேல் உள்ள உரிமையானது வள ஆதாரங்களையும் சேவைகளையும் பெறுவதைத் தீர்மானிப்பதில் முக்கியப்பங்கு வகிக்கிறது. பல பெண்களுக்கும், பாலியல் தொழிலில் ஈடுபடக் கூடியவர்கள் உட்பட பாலியல் ரீதியாக சிறுபான்மையினராக உள்ள குழுவினருக்கும் அவர்கள் யார் என்ற குடியுரிமை கூட வழங்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட சூழலில் போதிய உணவிற்கான உரிமையை அவர்கள் விட்டுக்கொடுக்க நேரிடுகிறது.**

இப்படிப்பட்ட சூழலில் போதிய உணவிற்கான உரிமையை அவர்கள் விட்டுக்கொடுக்க நேரிடுகிறது. உதாரணமாக, இந்தியாவில் உணவுப் பொருட்கள், அரசு மையங்களின் மூலம் மான்ய விலையில் விநியோகிக்கப்படுகிறது. ஆனால் ஒருவர் அச்சேவையைப் பெற, அடையாள அட்டை அவசியமாகிறது. பல ஏழைப்பெண்களுக்கும், பாலியல் ரீதியாக சிறுபான்மையினர்களுக்கும், அடையாள அட்டை இல்லாததினால் இச்சலுகைகளைப் பெற முடிவதில்லை. மேலும், குடும்ப அட்டையும் குடும்பத்திலுள்ள ஆண் உறுப்பினரைத்தான் குடும்பத் தலைவராக அங்கீகரிக்கிறது. அதனால் தனியாக வாழும் பெண்கள், விதவைகள், பிரிந்து வாழ்பவர்கள், இளம் வயதினர் மற்றும் மிகவும் வயதானவர்களுக்கு உணவு மான்யத் திட்டத்தின் பயன்கள் கிடைப்பதில்லை. இப்படி ஒரு பாலினத்தவரை (பெண்களை) மட்டும் புறக்கணிப்பதால், வறுமை மற்றும் பட்டினி ஒழிப்பு, போதுமான ஊட்டச்சத்து உரிமையைப் பெறுவது போன்ற பணிகளில் மோசமான விளைவுகள் ஏற்படுகிறது.

வறுமை, உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு, ஆரோக்கியம் (SRHR உட்பட) போன்றவற்றிற்கிடையேயுள்ள தொடர்புகள் நலிவடைந்த மற்றும் புறக்கணிக்கப்பட்ட மக்கள் மத்தியில் கண்கூடாகத் தெரிகிறது. குறிப்பாக, மாற்றுத்திறனாளிகள், பாலியல் ரீதியாக சிறுபான்மையினர்[13] இடம் பெயர்ந்தவர்கள், பேரிடரால் பாதிக்கப் பட்டவர்கள், கலவரங்கள், சண்டை போன்ற பலவிதமான ஆபத்துகளால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் தெளிவாகத் தெரிகிறது. நல்ல வேலைவாய்ப்பு வசதிகள் இல்லாததும் போதிய உணவு மற்றும் சுகாதாரச் சேவைகளைப் பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மறுபுறம் ஆரோக்கியக் குறைபாடானது நிலையான ஒரு நல்ல வேலை வாய்ப்பைப் பெறமுடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி வாழ்க்கை நடத்துவதைக் கடினமாக்குகிறது.

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள உறுதிமொழிகளையும், கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கங்களைப் பொறுப்பேற்கச் செய்வது

உலகின் குடிமக்களாகிய நம் ஒவ்வொருவருக்கும், ஜாதி, மதம், மொழி, இனம், பாலினம் மற்றும் வயது அடிப்படையில் எவ்வித பாகுபாடுமின்றி, ஒரு நல்ல வாழ்க்கை வாழ்வதற்கும், நல்லதொரு ஆரோக்கியம், போதுமான உணவு, பாதுகாப்பான குடிநீர், வசிப்பிடம், கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியல் பங்கெடுப்பு மற்றும் பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வதற்கான உரிமைகள் உள்ளது. இவ்வுரிமைகள் அனைத்தும் 1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வுரிமைகள் அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்தது. மேலும், ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதது என்றும் அதனால் ஒரு உரிமை மீறப்படும்போது மற்ற உரிமைகளின்மீது அதே அளவு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 1999 இல் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சமூகப் பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைக்கான ஒப்பந்தமும் உணவிற்கான உரிமையை அங்கீகரித்துள்ளது. (International Covenant on Economic Social And Cultural Rights (CESCR)) நமது நாடுகளின் அரசாங்கங்கள் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்டதன் வாயிலாக குடிமக்களுக்கு போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமையை வழங்க தார்மீக கடமைப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் சட்டரீதியாகவும் கட்டுப்பட்டுள்ளன.

மக்கள் தொகையும் முன்னேற்றமும் என்பது குறித்த சர்வதேச மாநாடும் (ICPD) அதன் செயல் திட்டமும் (POA), SRHR என்பதற்கு சிறப்பு அங்கீகாரம் வழங்கியது. ஆசியப் பசிபிக் நாடுகளிலுள்ள அரசாங்கங்கள் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்டதன் வாயிலாக தார்மீக மற்றும் மரபுரீதியாகவும், சில நேரங்களில் சட்டரீதியாகவும் இவ்வுரிமைகளைப் பாதுகாப்பதற்குக் கட்டுப்பட்டுள்ளன. இந்த உத்தரவாதம்

ஆதாரக் குறிப்புகள்

13 Hawkins, K. et al. (2014). *Sexuality and poverty synthesis report.* IDS Evidence Report 53. Brighton: Institute of Development Studies. http://opendocs.ids.ac.uk/opendocs/bitstream/handle/123456789/3525/ER53.pdf?sequence=1 என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

ஒப்பந்தமாகக் காகிதத்தில் தெளிவாக எழுதப்பட்டு இருந்தபோதிலும், பல நாடுகளின் அரசாங்கங்கள் அதன் குடிமக்களுக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறிவிட்டன. அரசாங்கங்களுக்கும் பெரிய நிறுவனங்களுக்கும் இடையே இரகசியத் தொடர்புகள் அதிகரித்து வருவதுதான் இதற்கு முக்கியக் காரணமாகும். அதனால் பல நேரங்களில் அரசின் கொள்கைகள் பெரிய கம்பெனிகளின் விருப்பத்திற்குத் தக்கவாறு உருவாக்கப்படுகிறது. குடிமக்கள் மனித மாண்போடு வாழத் தேவையான உரிமைக்கு உதவுவது மட்டுமல்லாமல், நூற்றாண்டு வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்றுவது எனவும் நமது அரசாங்கங்கள் உறுதி பூண்டுள்ளன. MDG's-ல் வறுமை மற்றும் பட்டினியை ஒழிப்பது, ஆண்/பெண் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், மகப்பேறு நலனை மேம்படுத்துவது மற்றும் HIV/AIDS, மலேரியா போன்ற நோய்களைத் தடுப்பது என்ற பல இலக்குகள் உள்ளன. இவ்விலக்குகளை அடைவதற்கான காலக்கெடுகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. அதாவது ICPDயின் கால வரையரை 2014-லிலும் MDG's 2015லும் முடிவடைகிறது. இந்த இலக்குகளை முழுமையாக அடைய முடியாமல் தோல்வி அடைந்ததற்கான காரணங்கள் என்ன என்பதையும், அத்தோல்விகளைச் சரிசெய்து கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் நாம் பகிர்ந்து கொள்வது அவசியமாகிறது. 2015க்கு பிந்தைய வளர்ச்சித் திட்டப் பணிகளில் இடம்பெற வேண்டிய விஷயங்களை உருவாக்குவதற்கு அவைகள் மிகவும் உதவியாக இருக்கும்.

### மேலும் என்ன செய்யவேண்டும்?

"ஆரோவின் மாற்றத்திற்கான" என்ற இச்செய்தி மடல் சர்வதேச குடிமக்களாகிய நாம் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துரைப்பது மட்டுமல்லாமல் நம் உரிமைகளைப் பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டுகிறது. உணவிற்கான உரிமை என்ற போராட்டத்தில் நம் உடல் மீது நமக்குள்ள அதிகாரம், உணவு மீதான உரிமை மற்றும் வள ஆதாரங்களின் மீதான அதிகாரத்தையும் நாம் விட்டுக் கொடுத்துவிடக் கூடாது. பிரச்சனைகளைத் தனிமைப்படுத்திப் பார்க்காமல் அவைகளுக்கிடையேயுள்ள தொடர்புகள் பற்றிய நமது புரிதலை அதிகரிக்க வேண்டும். அதுபோலவே தனிநபர் மற்றும் நம்முடைய குழுவின் மனித உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள ஒன்றிணைந்து செயல் பட வேண்டும்.

குடிமக்களுக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்புணர்வு நமது அரசாங்கங்களுக்கு உள்ளது. வறுமை ஒழிப்பு, பட்டினி, ஆண்-பெண் சமத்துவம் மற்றும் சமநிலையை அடைதல், அனைவருக்கும் ஆரோக்கிய வசதிகள் கிடைப்பது (SRHR உட்பட) கல்வி மற்றும் நிலையான முன்னேற்றம் தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள கொள்கைகளையும் திட்டங்களையும் திறனாய்வு செய்வதும் அவசியமாகிறது. மேலும் முன்னேற்றத்திற்கான புதிய திட்டங்களை வடிவமைக்கும்போதும், அல்லது நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை உருவாக்கும்போதும் அனைத்துப் பிரிவினரையும் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் மக்கள் அனைவரும் மனித மாண்புடன் வாழத் தேவையான அனைத்து உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நம் இயக்கங்களிடையே உள்ள வேறுபாடுகளை மறந்து வலுவான கூட்டணியை உருவாக்க வேண்டிய ஒரு அவசியமும் உள்ளது.

**நம் உடல் மீது நமக்குள்ள அதிகாரம், உணவு மீதான உரிமை மற்றும் வள ஆதாரங்களின் மீதான அதிகாரத்தையும் நாம் விட்டுக் கொடுத்துவிடக் கூடாது. பிரச்சனைகளைத் தனிமைப்படுத்திப் பார்க்காமல் அவைகளுக்கிடையேயுள்ள தொடர்புகள் பற்றிய நமது புரிதலை அதிகரிக்க வேண்டும். அதுபோலவே நம்முடைய தனிநபர் மற்றும் குழுவின் மனித உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.**

கட்டுரை ஆசிரியர் : டாக்டர் **நரிமா அவின்** (Dr. Narimah Awin)
ஆராய்ச்சியாளர் மற்றும் ஆலோசகர்;
மின் அஞ்சல் : narimahawin@yahoo.com

# 2015க்குப் பின் வரவிருக்கும் வளர்ச்சித் திட்டங்களில் வறுமை, உணவுக்கு உத்திரவாதமின்மை, பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் - இதில் எதை மையப்படுத்தவது

## பிலிப்பைன்ஸ் நாட்டினரின் பார்வையிலிருந்து

ஜினாவிற்கு முப்பத்தி ஆறு வயதாகிறது. இவர் சலவை செய்வது, கல் மண் சுமப்பது மற்றும் பழம் விற்பது போன்ற பல வேலைகளைச் செய்வதன் மூலம் மாதம் சுமார் 3000 பிஸோ சம்பாதிக்கிறார். (70 அமெரிக்கா டாலர்) ஜினாவின் கணவர் ஒரு விவசாய கூலித் தொழிலாளி. அவரின் சம்பாத்தியமும் ஜினாவினுடையதை விடக் குறைவு. ஏனென்றால், ஒரு சில பருவ காலங்களில் மட்டும் அவருக்கு வேலை கிடைக்கும். மேலும், கிராமத்திலுள்ள நிலங்களின் விளைச்சலும் படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது. ஜினாவிற்கு ஐந்து குழந்தைகள் உள்ளனர். அவர்களின் வயது முறையே நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது மற்றும் பதினைந்து ஆகும். இத்தம்பதியினரின் மாத வருமானம், குடும்ப உறுப்பினர்களின் உணவுத் தேவைக்குப் போதுமானதாக இல்லை. இவர்களின் காலை உணவு என்பது காபித்தூள், சர்க்கரை மற்றும் பால்பவுடர் ஆகிய மூன்றும் கலந்த ஒரு பாக்கெட் பொடிதான், ஒரு லிட்டர் சுடு தண்ணீருடன் இந்தப் பொடியையும் சிறிது சர்க்கரையையும் கூடுதலாகச் சேர்த்து நன்கு கலக்கி காபி தயாரித்துப் பருகுவார்கள். இந்த பானத்தைக் குடித்துவிட்டு குழந்தைகள் பள்ளிக்கும், பெற்றோர் வேலையைத் தேடியும் செல்வது வழக்கம். அதிர்ஷ்டவசமாக ஒரு சில நாட்களில் வேலை முடிந்து மதிய உணவிற்கு முன்பே ஜினா வீடு திரும்பி விடுவார். அப்படி வரும் நாட்களில் மதியம் மற்றும் இரவு உணவிற்காக ஒரு கிலோ அரிசி, மீன் அல்லது நூடுல்ஸ் பாக்கெட் ஒன்றை வாங்கி வருவார். வருமானம் இல்லாத நாட்களில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தண்ணீர் குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டு இரவு தூங்குவார்கள் குழந்தைகள் நோய்வாய்ப் படும்போது குடும்பத்தின் பொருளாதாரச் சூழல் மிகவும் மோசமடையும். அப்போது வேறு வழியில்லாமல் ஜினா தனது கடைசி முயற்சியாக, தன்னைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி அதன் மூலம் மருந்து மாத்திரைக்குப் பணம் ஈட்டுவார். அவர் இளமையில் இருக்கும்போது அது அவருக்கு ஒரு இரவு வேலையாக இருந்தது. தற்போது வயதாகி வருவதால் அதற்கான வாய்ப்புகளும் குறைந்து வருகிறது.

ரியா ஆறுமாத கர்ப்பிணி. இது இவருடைய இரண்டாவது கர்ப்பம். முதல் குழந்தைக்கு எட்டு மாதம்தான் ஆகிறது. அவருக்கு 15 வயதாகும் போது அக்குழந்தை பிறந்தது. வளரிளம் பருவ வயதில் கர்ப்பமான ரியா, தன்னோடு உயர்நிலைப் பள்ளியில் படித்தவரையே திருமணம் செய்து கொள்ள நேரிட்டது. ஏனெனில், திருமணமாகாமல் குழந்தை பெறுவது என்பது ஒரு தவறான செயல் என்ற கருத்து அவரது கிராமத்தினரிடம் நிலவியது. இளம் வயதில் குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டிய கட்டாயத்தால் அவர்கள் இருவரும் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தினர். வறுமையில் சுழன்று கொண்டிருந்த அவர்களின் குடும்பத்திற்கு இதைத் தவிர வேறு வழியேதுமில்லை. இவர்கள் இருவரும் ரியாவின் அம்மா வீட்டில் வசித்து வருகின்றனர். அவரின் அம்மா ஒரு விதவை. அவரின் மூன்று குழந்தைகளும் பள்ளிப் பருவ வயதில் உள்ளனர். மேலும் ரியாவின் சித்தி தாய்வான் நாட்டில் வீட்டு வேலை செய்யும் பணிப்பெண்ணாக இருப்பதால் அவரது ஒரு வயது மகனும் இவர்களுடன் இருக்கிறான். ரியாவின் சித்தி வெளிநாட்டிலிருந்து அனுப்பும் சொற்பப் பணத்தை வைத்துத்தான் இவர்களின் ஒட்டுமொத்த குடும்பமும், (8 நபர்களின்) வாழ்க்கையும் ஓடுகிறது. சில சமயங்களில் ரியாவின் கணவருக்கு அருகிலுள்ள கிராமங்களில் நடக்கும் கட்டிட வேலை கிடைக்கும். ரியாவின் அம்மா குடும்பத்தின் ஏழ்மை நிலை குறித்து ஒருபோதும் வருத்தப்பட்டதில்லை. சந்தோஷமாக இருக்கும் சில நேரங்களில் அவர் கூறுவது நான் எனது சொத்தாகக் கருதும் எனது குழந்தைகளும் பேரக்குழந்தைகளும் என்னுடன் இருக்கும்வரை நான் ஏழையாக இருப்பதுபற்றி ஒருபோதும் கவலைப்பட்டதில்லை.

### அறிமுகம்:

பிலிப்பைன்ஸ் நாட்டில் வசிக்கும் பெரும்பாலான கிராமப்புற மக்களுக்கு, ஜினா மற்றும் ரியாவின் கதைகளும் அதுபோன்ற குடும்பச் சூழல்களும் மிகவும் பரிச்சயமான ஒன்றாகும். இது போன்ற வறுமை மற்றும் பட்டினியின் காரணமாக இலட்சக்கணக்கான வளரிளம் பருவப் பெண்கள், திட்டமிடாத கர்ப்பமடைந்து, அதிகக் குழந்தைகளுடன் இளவயதில் பெற்றோராக மாறி அவதியுறுகின்றனர். பிலிப்பைன்ஸ் நாட்டில் வளரிளம் பருவக் கர்ப்பிணிகளின் எண்ணிக்கை கடந்த பத்து ஆண்டுகளில் 70% அதிகரித்துள்ளது.[1] யு.என்.எப்.பி.ஏ.வின் சமீபத்திய கணக்கெடுப்பின்படி வளரிளம் பருவப் பெண்கள் மத்தியில் நிகழும் பிறப்பு விகிதமானது 53 ஆக உள்ளது. (15-19 வயதிலுள்ள 1000 பெண்களில் குழந்தை பெற்றவர்களின் எண்ணிக்கை) வளரிளம் பருவப் பெண்களின் பிறப்பு விகிதம் அதிகமுள்ள நாடுகளின் வரிசையில் லாவோஸ் (110) மற்றும் இந்தோனேசியாவிற்கு (66) அடுத்ததாக மூன்றாவது இடத்தில் பிலிப்பைன்ஸ் உள்ளது.[2]

திட்டமிடாத கர்ப்பம் மற்றும் பிறப்பு விகிதங்கள் அதிகமாக இருப்பதற்கு நிறையக் காரணங்கள் உள்ளன. இப்பிரச்சனைகளுக்கும், வறுமை, உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை பாலியல் இனப்பெருக்க நலச் சேவைகள் கிடைக்காதது போன்றவைகளுக்கும் நெருக்கமான தொடர்பு இருக்கிறது. கலாச்சாரக் காரணிகளுக்கும் இதில் முக்கியப் பங்கு உண்டு. இளம் பெண்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கள் குறைவாக இருப்பதாலும், அவர்கள் உடனே திருமணம் செய்து கொள்ள நேரிடுகிறது. திருமணம்தான் வாழ்க்கையின் முக்கியமான இலக்கு என்றும் கருதப்படுகிறது. ஆசிய கண்டத்தின் பெரும்பாலான நாடுகளில் உள்ளது போன்று பிலிப்பைன்ஸின் கிராமப்புறங்களில் இளம் வயது திருமணம் என்பதுதான் கலாச்சார ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது. பிலிப்பைன்ஸ் நாட்டின் சட்டப்படி, பெண்களின் திருமண வயது 18 ஆகும். மேலும் 2008-ல் நடத்தப்பட்ட தேசிய சுகாதார ஆய்வில் பெண்களின் சராசரி (Median) திருமண வயது 22 ஆக உள்ளது. இருப்பினும் கிராமப்புறங்களிலுள்ள பெண்கள் 20 வயது பூர்த்தியானதும் திருமணம் செய்துகொள்ளும்படி நிர்பந்திக்கப்படுகின்றனர். அதனால், பல நேரங்களில் பெண்களுக்கு 18 வயது பூர்த்தியாகும் முன்பே திருமணம் நடைபெறுகிறது என்பது அப்பகுதியில் பணி செய்யும் பெண்கள் அமைப்புகளின் அனுபவங்களிலிருந்து தெரிகிறது.

பின்வரும் சமூக மூடநம்பிக்கைகளான, விவசாய வேலைக்குக் குழந்தைகள் உதவியாக இருப்பார்கள், வயதான காலத்தில் பெற்றோரைப் பார்த்துக் கொள்வார்கள். மேலும் கடவுள் நமக்கு கொடுக்கும் செல்வம்தான் குழந்தைகள் என்பன பிறப்பை அதிகரிப்பதற்கான கருத்திற்கு, வலுச்சேர்க்கிறது. அதிக குழந்தைகள் பெற்றுக்கொள்வதுதான் ஆண்களின் அடையாளம், ஆணின் பெருமை, வலுவான தகப்பனாரின் பண்பு எனவும் கருதப்படுகிறது.

### பெண்களின் இனப்பெருக்கத் தேர்வுகளை, இதர முன்னேற்ற பணிகளுடன் தொடர்புபடுத்துதல்:

பெண்களின் இனப்பெருக்கத் தேர்வுகளான எத்தனை குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது, அவற்றை எப்பொழுது பெற்றுக் கொள்வது என்பது மட்டும் பெண்களின் உரிமையல்ல, பெண்களைச் சுயசார்புடையவர்களாக்குவதற்கும், வறுமை பட்டினி என்ற சுழற்சியிலிருந்து அவர்கள் வெளிவருவதற்கும் இத்தேர்வு உதவியாக இருக்கும். குறைவான குழந்தைகளைப் (சிறு குடும்பமாக) பெற்றுக்கொள்வதால் நிறையப் பலன்கள் உண்டு. பொருளாதார மற்றும் அரசியல் பணிகளில் பெண்கள் எளிதாக ஈடுபடவும் உதவும். மேலும், உணவுப் பொருட்களின் விலையேற்றம், பலவிதமான சேவைகளைப் பெறுவதற்கு ஆகும் செலவுகள் அதிகமாக இருப்பது மற்றும் பணத்தின் மதிப்பு சரிந்துவரும் இவ்வேளையில் சிறு குடும்பமாக இருந்தால்தான் வாழ்க்கையை சுலபமாக நடத்த முடியும். வாழ்க்கையில் இது போன்ற சிக்கலான முடிவுகளை எடுக்க முடியாமல் இருப்பது வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு அனைவருக்கும்

ஆதாரக் குறிப்புகள்

1 Malinao, T.M. (2012). PH tops teenage pregnancy in SEA. Inquirer.net. http://newsinfo.inquirer.net/186201/ph-tops-teenage-pregnancy-in-sea என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

2 United Nations Population Fund (UNFPA). (2013). *State of the World Population 2013. Motherhood in childhood: Facing the challenge of adolescent pregnancy*. New York: UNFPA. www.unfpa.org/webdav/site/global/shared/swp2013/EN-SWOP2013-final.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

ஆரோக்கியம் என்ற இலக்கை அடைவதற்கு ஒரு தடையாக உள்ளது.

இருப்பினும், பெண்களின் இனப்பெருக்கத் தேர்வுகள் என்பது மட்டும் தனியாக நடக்கக்கூடியது அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நிலம் மற்றும் உற்பத்திக்கான இதர வளங்கள் மீது பெண்கள் உரிமை கோருவதைத் தடுக்கக்கூடிய சட்டங்கள் இன்றும் நடைமுறையிலுள்ளன. ஆண்களைவிடப் பெண்கள் மத்தியில்தான் வேலைவாய்ப்பின்மை அதிகமாகக் காணப்படுகிறது. உழைப்பு சுரண்டப்பட்டு குறைவான ஊதியம் தரும் வேலைகளில் பெண்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். அதன் விளைவாக, பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாவதற்கான சூழ்நிலைகளை அதிகரிப்பதுடன் பொது மற்றும் அரசியல் வாழ்க்கையில் பெண்கள் தொடர்ந்து ஈடுபட முடியாத நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

புதிய தாராளமயப் பொருளாதார சீர்திருத்தங்களின் விளைவாக, விலை நிர்ணயம், உணவு மற்றும் இதர அத்தியவசியப் பொருட்களுக்கான மாண்யம் விலக்கப்பட்டது. சுகாதாரச் சேவைகளுக்கான (இனப்பெருக்க நலச்சேவைகள் உட்பட) அரசின் செலவுகள் முற்றிலும் நீக்கப்பட்டது. அதனால் ஏழைப் பெண்களுக்கு குழந்தைகளைப் பராமரிப்பது, கல்வியளிப்பதற்கான செலவுகள் அதிகரித்து, அச்செலவுகளைச் சமாளிக்க அவர்கள் தங்களின் உணவுத்தேவைகளை விடுத்து குழந்தைகளைப் பராமரிக்க முக்கியத்துவம் தரவேண்டியதாயிற்று.

கிராமப் பகுதிகளில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மேற்கொள்ளும் தொழில்சார்ந்த முதலீடுகளும், வளர்ச்சித் திட்டங்களும் விவசாயக் குடும்பங்களுக்கு தொடர்ந்து அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. எங்கு பார்த்தாலும் நில அபகரிப்பு, விவசாய மறுமலர்ச்சித் திட்டங்களை அரசு பாராமுகமாக இருப்பது போன்ற பிரச்சனைகளினால், சொந்த நிலத்தைவிட்டு விவசாயிகள் வெளியேற்றப்படுகின்றனர். பெரும்பாலான ஆண்கள் மற்றும் பெண்களுக்கு உழுவதற்கு நிலம் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. விவசாய நிலங்கள் எல்லாம் தொழில், சுற்றுலா பயன்பாடு மற்றும் உயிர் எரிபொருள் உற்பத்திக்கான தளங்களாக மாறியுள்ளது. இதனால் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைகளில் மாற்றம் ஏற்படும் என்பதை யாரும் கண்டு கொள்ளவில்லை. உணவு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள் அனைத்தும் தொழில்பேட்டைகளானதால் நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் என்பது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. விளைநிலங்கள் மாற்றப்பட்டதால் விவசாயத்தை நம்பி வாழ்ந்த குடும்பங்கள், அருகிலுள்ள ஜனநெருக்கம் மிகுந்த நகரங்களுக்குக் குடியேறினர். அதன் விளைவாக குடிசைகள் பெருகின. விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் தெருவோரங்களில் பிச்சை எடுப்பது அல்லது பாதுகாப்பில்லாத அமைப்புச் சாராப் பணிகளில் ஈடுபட வேண்டியதாயிற்று அல்லது ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பண்ணைகளில் பணி செய்யத் தயாராக இருக்க வேண்டியுள்ளது. அங்கு அவர்கள் குறைந்த ஊதியம், பலமணி நேரவேலை, பணியிடங்களின் மோசமான சூழ்நிலைகள் மற்றும் நிரந்தரமற்ற வேலை போன்ற எண்ணற்ற இன்னல்களைச் சந்திக்க நேரிடுகிறது.

**2015க்குப் பின் வரவிருக்கும் சர்வதேச வளர்ச்சித் திட்டங்களில் அவசியம் இடம் பெற வேண்டியவை:**

இனப்பெருக்கத் தேர்வுக்கான வாய்ப்புகள் பெண்களுக்கு மிகவும் குறைவாக இருப்பதன் காரணமாக, பிறப்பு மற்றும் இறப்பு விகிதங்கள் அதிகரிக்கின்றன. ஊட்டச்சத்துத் தொடர்பான பிரச்சனைகளும் ஏற்படுகிறது. இவைகள் அனைத்தும் வளர்ச்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளாகும். எனவே, இவற்றை சர்வதேச வளர்ச்சித் திட்டத்தில் கொண்டுவரவேண்டும். 2015-க்கு பிந்தைய வளர்ச்சிப் பணிகளை திட்டமிடும்போது, நூற்றாண்டு வளர்ச்சி இலக்குகளை (MDGs) அடைவதற்கான காலவரையறையை நீக்கவேண்டும் என நமது அரசாங்கங்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட உள்ளன. எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய வகையில் தரமான பாலியல் இனப்பெருக்க நலன் குறித்த தகவல்கள் கல்வி மற்றும் சேவைகள் இருக்க வேண்டும் என பெண்கள் மத்தியில் பணிபுரியும் தன்னார்வ அமைப்புகள் அழைப்புவிடுக்கின்றன.

ஆதாரக் குறிப்புகள்

**இனப்பெருக்க தேர்வுக்கான வாய்ப்புகள் பெண்களுக்கு மிகவும் குறைவாக இருப்பதன் காரணமாக, பிறப்பு மற்றும் இறப்பு விகிதங்கள் அதிகரிக்கின்றன. ஊட்டச்சத்து தொடர்பான பிரச்சனைகளும் ஏற்படுகிறது. இவைகள் அனைத்தும் வளர்ச்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளாகும். எனவே, இவற்றை சர்வதேச வளர்ச்சித் திட்டத்தில் கொண்டுவரவேண்டும்.**

பெண்கள், வளரிளம் பருத்தினர், இளைஞர்கள் மற்றும் வறுமையில் வாழும் சமுதாயத்தினரின் மனித உரிமைகளை நிறைவேற்றுவதற்கான சிறப்புத் திட்டங்களும் அதில் இடம்பெற வேண்டும். மேலும், இவ்வுரிமைகளைப் பெறுவதில் எவ்வித பாகுபாடோ, நிர்பந்தமோ, வன்முறையோ இருக்கக்கூடாது. நிலம் மற்றும் சொத்து உரிமைகள் உட்பட பெண்களின் பொருளாதார உரிமைகளை நிறைவேற்றுவது, நல்ல வேலை மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான உரிமைகளுடன் தரமான கல்வியைப் பெறுவதற்கான உரிமைகளும் அதில் இடம் பெற வேண்டும்.[3]

எல்லாவற்றிற்கும் மேலாக தற்போது நடைமுறையிலுள்ள தாராளப் பொருளாதார அமைப்பில் அடிப்படை மாற்றங்கள் அவசியம் நிகழவேண்டும். ஏனெனில், வளர்ச்சியை மட்டும் மையப்படுத்தும் இக்கொள்கையானது, வசதி வாய்ப்புகள், அதிகாரம் மற்றும் வளங்களைப் பெறுவதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும், நாடுகளுக்கு இடையேயும் ஏற்றத்தாழ்வுகளைத்தான் ஏற்படுத்துகிறது.[4]

ஆதாரக் குறிப்புகள்

3 Women's Major Group position to the Open Working Group of the Sustainable Development Goals (OWG-SDGs). www.womenrio20.org/docs/Women-s-MG-response-to-Co-Chairs_19FOCUSAREA.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

4 Ibid. www.womenrio20.org/docs/Feminists_Post_2015_Declaration.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

*கட்டுரை ஆசிரியர்:* **டேஸ் விஸ்ட்ரோ,** (Tess Vistro) *தொடர்பு அதிகாரி*
*சமூகப் புறப்பணிப்புகளைத் தகர்ப்பதற்கானத் திட்டம்,*
*ஆசிய-பசிபிக் பெண்கள், சட்டம் மற்றும் முன்னேற்றக் குழுமம்* (APWLD) *மற்றும்*
*துணைச் செயலாளர்* (AMIHAN), *பெண் விவசாயிகள் கூட்டமைப்பு, பிலிப்பைன்ஸ்*
*மின் அஞ்சல்:* tessvistro@yahoo.com

# உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கான உரிமைகளும், பெண்களின் பாலியல் இனப்பெருக்க உரிமைகளும் ஒன்றோடு ஒன்று இணைந்ததும் பிரிக்கமுடியாததும் ஆகும்

அனைத்து மனித உரிமைகளையும் பெண்கள் முழுமையாக அடைதலுக்கும், அவர்களுக்கு போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்து கிடைப்பதற்கும் நெருக்கமான தொடர்பு இருக்கிறது. குறிப்பாக,பெண்களின் பாலியல் இனப்பெருக்க உரிமைகளான பெண்களின் சுய மாண்பை அங்கீகரித்தல், சுயஉறுதி சுதந்திரம், தன் உடல் மேல் தனக்கு அதிகாரம் போன்ற அவர்களுடைய மனித உரிமைகளைப் பாதுகாக்காமல் (Guarantee) அவர்களுக்கு அதை அனுபவிக்க சாத்தியமில்லை.

உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கான சர்வதேசக் கூட்டமைப்பு என்பது பல சமூக சேவை அமைப்புகள் மற்றும் சர்வதேச அளவிலான சமூக இயக்கங்கள் ஒன்றிணைந்து துவங்கப்பட்ட ஒன்றாகும். இதில் விவசாயிகள், மீன்பிடிப்பவர்கள், கால்நடை மேய்ப்பவர்கள், பழங்குடியின மக்கள் உணவு உற்பத்தி மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் எனப் பல இயக்கத்தின் பிரதிநிதிகள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கான உரிமையை நிறைவேற்றுவது அரசாங்கங்களின் கடமை என்பது இவ்வமைப்பின் முக்கிய நோக்கமாகும். அரசாங்கம் மற்றும் அரசு நிறுவனங்களும் கண்ணுக்குப் புலப்படாத அமைப்பு ரீதியிலான வன்முறைகளை ஏற்படுத்துகின்றன என்றும் அது பெண்களின் மனித உரிமைகளை நிறைவேற்றுவதில் தடைகளை உண்டுபண்ணுகிறது எனவும் இக்கூட்டமைப்பு கருதுகிறது.[1] இக்கூட்டமைப்பின் ஒப்பந்த சாசனத்தில்

1 இக்கூட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பினர்கள் குறித்த மேலும் விவரங்களுக்கு: www.fian.org/news/article/detail/launch_of_global_network_for_the_right_to_food_and_nutrition/

இவ்விஷயம் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. அச்சாசனம் தெரிவிப்பது என்னவென்றால், பெண்களுக்கெதிரான குற்றங்களும், அமைப்புரீதியிலான வன்முறைகளும் பல நேரங்களில் வெளியில் தெரிவதில்லை அல்லது புறக்கணிக்கப்படுகிறது. பெண்களின் உரிமை மீறல்கள் மறைக்கப்பட்டு, போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கான உரிமைகளை அடைவதற்கான செயல்களில் அவர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களையும் பாதிகிறது. பெண்களின் பல விதமான போராட்டங்களான; ஆணுக்கு இணையான உரிமை பெண்களுக்குக் கிடைக்கச் செய்தல், அவர்களின் சுய உறுதிக்கான உரிமை, வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, குழந்தை பெற்றுக் கொள்வதா அல்லது வேண்டாமா என்பது குறித்து முடிவெடுக்கும் உரிமை உட்பட அவர்களின் பாலியல் இனப்பெருக்க உரிமைகளுக்கு இக்கூட்டமைப்பிலுள்ள உறுப்பினர்கள் உதவுகின்றனர்.[2]

குழந்தை மற்றும் பெண் உரிமைகள், போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்த மனித உரிமைகளைப் புரிந்து கொள்வதும், இவ்வுரிமை களுக்கிடையேயான தொடர்புகளை எடுத்துரைப்பது என்பதும் பட்டினி மற்றும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையை ஒழிப்பதற்கு மிகவும் அடிப்படையானதாகும். மனித உரிமை மீறல்களின் பின்வரும் இரண்டு விளைவுகளைப் பார்க்கும்போது இவைகளுக்கிடையே உள்ள தொடர்பு தெளிவாகத் தெரியும். ஒன்று குழந்தைத் திருமணம் மற்றொன்று வளரிளம் பருவத்தில் ஏற்படும் கர்ப்பங்களாகும். ஆசிய பசிபிக் பகுதியில் அதிலும் குறிப்பாக, தெற்கு ஆசியாவில் இவ்விரு பிரச்சனைகளும் மிகவும் பரவலாக இன்றும் காணப்படுகிறது.[3]

குழந்தை மற்றும் இளவயது திருமணம், வளரிளம் பருவத்தில் ஏற்படும் கர்ப்பங்கள் ஆகிய மூன்று நிகழ்வுகளும் இளம் பெண்களின் வாழ்க்கையில் பலவிதமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை இழப்பது, சுய உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதுடன் சிக்கலான முடிவுகள் எடுப்பதிலிருந்து அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். குடும்பப் பராமரிப்பு என்ற பாரம் சுமத்தப்பட்டு கல்வி மற்றும் விளையாடுவதற்கான சுதந்திரம் மறுக்கப்படுகிறது. உணவு, ஊட்டச்சத்துக்களைப் பெறுவதைத் தடுக்கிறது, பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துகிறது. மேலும் பாலியல் இனப்பெருக்கம் தொடர்பான விஷயங்களில் தனது விருப்பு வெறுப்புக்களை எடுத்துரைப்பதற்கு அதிகாரமில்லாத நிலையும் அவர்களுக்கு ஏற்படுகிறது. மேற்சொன்னவைகளின் விளைவாக ஆபத்தான கர்ப்பம் மற்றும் பிரசவத்திற்கு வழிவகுத்து தாய்- சேய் ஆரோக்கியக் குறைபாட்டிற்கும் மரணத்திற்கும் கூட வழிவகுக்கிறது. இளம் வயதில் ஒரு பெண் கருத்தரிக்கும்போது தனது உடல் வளர்ச்சி மற்றும் வயிற்றில் வளரும் குழந்தையின் ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இதனால் பல நேரங்களில் சத்துப் பற்றாக்குறை ஏற்பட்டு குழந்தை மெலிந்து நோஞ்சானாகப் பிறக்கிறது.[4] பாதுகாப்பில்லாத கருக்கலைப்பினால் ஏற்படும் உடல் நலக் கோளாறுகளும் மரணங்களும் வளரிளம் பருவப் பெண்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகிறது. ஏனென்றால், பாதுகாப்பான கருக்கலைப்புச் சேவைகளை இளம் பெண்கள் பெறுவதற்கு சமூக, அரசியல் மற்றும் அமைப்புரீதியாக பலவிதமான தடைகள் உள்ளன.[5]

பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைமீறல்களில் தனிநபர்கள் மட்டுமல்லாது அவர்களின் குடும்பம் மற்றும் சமுதாயத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியமும் பாதிக்கிறது. மேலும், முந்தைய பகுதியில்குறிப்பிடப்பட்டுள்ளது போல, இரு தலைமுறையினர் ஆரோக்கியத்தில் இது பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும், வறுமையை உருவாக்குதல், பொது வாழ்வில் பெண்கள் ஈடுபடாமல் தடுப்பது மற்றும் பாலியல் இனப்பெருக்க நலன் (SRH) குறித்த விஷயங்களை நன்கு அறிந்து முடிவுகள் எடுப்பதிலும் தடைகளை உருவாக்குகிறது.[6] எனவே, இந்த ஏற்றத்தாழ்வுகளின் இடைவெளிகளைக் குறைப்பதற்கும், போதிய உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமையை அடைவதற்கும் பெண்கள் மற்றும் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட பிரிவினர்களின் அனைத்து விதமான மனித

## ஆதாரக் குறிப்புகள்

2 உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கான உரிமை குறித்த சர்வதேச கூட்டமைப்பின் சாசனத்தை www.fian-nederland.nl/pdf/GNRtFN_-_Formatted_Charter.pdf என்ற இணையதள முகவரியில் கிடைக்கிறது

3 Khanna, T., Verma, R. & Weiss, E. (2013). *Child marriage in South Asia: Realities, responses and the way forward. Washington DC.: International Center for Research on Women (ICRW).* www.icrw.org/files/publications/Child_marriage_paper%20in%20South%20Asia.2013.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

4 See FIAN's submission on child, early and forced marriage to the Office of the High Commissioner for Human Rights for the preparation of its Report to the Human Rights Council at its 26th Session in June 2014. www.ohchr.org/Documents/Issues/Women/WRGS/ForcedMarriage/NGO/FIAN.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

5 Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW). (2006). Young and vulnerable: The reality of unsafe abortion among adolescent and young women. *ARROWs or Change,* 12(3), 2006. Kuala Lumpur: ARROW. www.arrow.org.my/publications/AFC/v12n3.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

6 For more on the links between women's rights and the right to adequate food and nutrition see the report on 'Women's rights and the right to food', presented by the Special Rapporteur on the right to food at the 22nd Session of the United Nations Human Rights Council. [A/HRC/22/50], 2012. www.ohchr.org/Documents/HRBodies/HRCouncil/RegularSession/Session22/AHRC2250_English.PDF; என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது and Anne C. Bellows, Flavio L.S. Valente, & Stefanie Lemke. (Eds.) Gender, nutrition and the human right to adequate food: Towards an inclusive framework. New York: Taylor & Francis/Routledge. (dop: 2014). For information on the intergenerational cycle of growth failure, see chapter 3 of the 6th Report on World Nutrition Situation by UNSCN www.unscn.org/files/Publications/RWNS6/report/SCN_report.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

7 For an example of a discussion on this topic, see The Guardian, Land rights for women can help ease India's child malnutrition crisis, www.theguardian.com/global-development/poverty-matters/2012/jan/20/land-rights-india-women-ease-malnutrition என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

உரிமைகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். உரிமைகளில் ஒரு பகுதியில் முன்னேற்றம் நிகழும்போதுதான் மற்றவைகளிலும் மேம்பாடு ஏற்படும். உதாரணமாக, இந்தியாவில் பெண்களுக்கு நில உரிமை வழங்கியது எவ்வாறு குழந்தைகள் மத்தியில் நிலவிய ஊட்டச்சத்துப் பற்றாக்குறையை குறைக்க உதவியது என்பது சமீபத்திய ஒரு ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல் இனப்பெருக்க நல உரிமைகள், போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமை மேலும் அது தொடர்பான மனித உரிமைமீறல்கள் குறித்து சமூக இயக்கங்கள் சமுதாயங்கள், குழுக்கள் என பல பிரிவினர் ஒன்றிணைந்து போராடுவதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு இக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உறுதி பூண்டுள்ளனர்.

*கட்டுரை ஆசிரியர் :* **ஆர். டெனிஸ் கோர்டோவா, மாண்டிஸ் ஜே.டி.எம்.பி. ஹெச்.** (Dr. Denisse Cordova Montes) *மற்றும்* **புளோவியோ லுத்விஸ் விசிக் வாலண்டி, எம்.டி. எம்.பி.ஹெச். பியான்** (Flavio Luiz Schieck Valente) *அமைப்பின் சர்வதேச தலைமையகம், கெய்மல்பெர்க், ஜெர்மனி, மின் அஞ்சல்* cordova@fian.org *மற்றும்* valente@fian.org.

# வறுமை ஒழிப்பு, உணவு உற்பத்திக்கான அதிகாரத்தைப் பெறுதல், உணவுப் பாதுகாப்பு மற்றும் அனைவருக்கும் பாலியல் மற்றும் இனப்பெருக்க நலச் சேவைகள்[1]

## இவ்வனைத்தையும் பெற என்ன செய்யவேண்டும்?

ஆசிய-பசிபிக் கண்டத்திலுள்ள வறுமையை ஒழிப்பதில் கடந்த 30 ஆண்டுகளாக கணிசமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1990 ஆம் ஆண்டில் இப்பகுதியிலுள்ள மக்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் ஏழைகளாக இருந்தனர். இந்நிலை மாறி 2011 ஆம் ஆண்டு வறுமையின் அளவு 20 சதவீதமாக குறைந்தது.[2] உறுதியான வறுமைக்குறைப்பு நிகழ்ந்துள்ள அதேவேளையில், வருமான ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளன. அதாவது, வருமான அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளின் குறியீடான கினி அளவீடு (Gini Index) ஆசியாவில், 1990-களின் மத்தியில் 38 ஆக இருந்தது, தற்போது 47ஆக உயர்ந்துள்ளது. மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product-GDP) ஒரு சதவீதம் வளர்ச்சியடையும்போது வேலைவாய்ப்பு 0.4 சதவீதம் மட்டுமே அதிகரித்திருக்கிறது.[3]

ஏழைகளின் சதவீதம் குறைந்துள்ள அளவிற்கு பட்டினி மற்றும் ஊட்டச்சத்துப் பற்றாக் குறைகளின் அளவு இப்பகுதியில் குறையவில்லை. தெற்கு ஆசியாவில்தான் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மத்தியில் காணப்படும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை என்பது மிக அதிகமாகக் காணப்படுகிறது. 2010-11 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி 30 சதவீத குழந்தைகள் இப்பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.[4] 1995-2009-க்கும் இடைப்பட்ட 15 ஆண்டுகளில் வசதியான குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகள் மத்தியில் நிலவிய ஊட்டச்சத்துக் குறைபாடு, ஒன்பது புள்ளிகள் குறைந்துள்ளது (37% லிருந்து 26%ஆக குறைந்துள்ளது) மாறாக ஏழைக் குழந்தைகளின் மத்தியில் காணப்பட்ட குறைபாடு நான்கு புள்ளிகள் மட்டுமே குறைந்துள்ளது (64% லிருந்து 60%) அதாவது, ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் சதவீதம் குறைவதில் ஏழை பணக்காரக் குடும்பங்களுக்கிடையே மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது.[5] சர்வதேச சுகாதார அளவீட்டின் (Global Health Index- GHI) 2001 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி ஆசியாவிலுள்ள 14 நாடுகளில் பதினொன்றில் ஆபத்தான அல்லது மிக அதிக அளவில் பட்டினி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[6,7]

### ஆதாரக் குறிப்புகள்

1 இதே தலைப்பில் இக்கட்டுரை ஆசிரியரால் எழுதி வெளிவந்த ஒரு பெரிய அறிக்கையின் சுருக்கமே இக்கட்டுரை. முழு அறிக்கையும் www.arrow.org.my/publications/ARROW%20Thematic%20Paper%2001.pdf என்ற இணையதள முகவரியில் கிடைக்கிறது

2 United Nations Economics and Social Commission for Asia and the Pacific (UNESCAP). (2013). *Income poverty and inequality. In Statistical Yearbook for Asia and the Pacific 2013. Bangkok: UNESCAP.* www.unescap.org/stat/data/syb2013/ESCAP-syb2013.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

3 Chhibber, A., Ghosh, J., & Palanivel, T. (2009). *The global financial crisis and the Asia-Pacific region: A synthesis study incorporating evidence from country case studies. Colombo: UNDP Regional Centre for Asia and the Pacific, 2009.* www.indiaenvironmentportal.org.in/files/P1116.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

4 United Nations. (2013). *The Millennium Development Goals report 2013.*New York: United Nations. www.un.org/millenniumgoals/pdf/report-2013/mdg-report-2013-english.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

5 Asian Development Bank (ADB). (2012). *ADB fast fact: How can Asia respond to global economic crisis and transformation? Manila: Asian Development Bank.* www.adb.org/features/fast-facts-global-economic-crisis-and-transformation என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

6 GHI = (PUN+CUW+CM)/3: இதில் PUN என்பது மொத்த மக்கள் தொகையில் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டவர்களின் சதவீதம் CUW என்பது ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எடைகுறைவாக உள்ளவர்களின் சதவீதம் மற்றும் CM என்பது ஐந்து வயது பூர்த்தியாகாமல் இறந்த குழந்தைகளின் சதவீதம் ஆகும்

2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் எப்போதுமில்லாத அளவில் அதிகரித்த உணவு மற்றும் எரிபொருள்களின் விலையேற்றமும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நிதி நெருக்கடிகளும், இந்த நூற்றாண்டின் வறுமை மற்றும் பட்டினியை ஒழிப்பதற்கான முன்னேற்றப் பணிகளில் தடைகளை ஏற்படுத்தியது. இக்காலகட்டத்தில் அதிகமாக இருந்த மருத்துவச் சேவைக் கட்டணங்கள் உலகளவில் 1.3 பில்லியன் ஏழைகளை சுகாதாரச் சேவைகளைப் பெறமுடியாமல் தடுத்துவிட்டது.

சுமார் நூற்று ஐம்பது மில்லியன் மக்கள், தங்கள் குடும்ப வருமானத்தில் கணிசமான தொகையை மருத்துவச் செலவு செய்ய நேரிட்டு, குடும்பத்தின் அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்ள முடியாத ஆபத்தான பொருளாதார சூழ்நிலைக்கு ஆளாகின்றனர். வரவிற்கு மேல் செலவு செய்ய நேரிட்டதாலும், வேலை செய்ய முடியாத அளவிற்கு நோய்வாய்ப் பட்டதாலும் 100 மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் தள்ளப்பட்டனர்.[8]

ஆசிய பசிபிக் கண்டத்தில் குறிப்பிட்ட சில நாடுகளில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியில் குறிப்பிட்டுள்ளபடி, பாலியல் மற்றும் இனப்பெருக்க நலச்சேவைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதென்பது இச்சூழ்நிலையில் ஒரு மாய இலக்காக இருப்பதில் ஒன்றும் ஆச்சரியப் படுவதற்கில்லை.[9]

ஏழ்மை, உணவுப் பாதுகாப்பு மற்றும் அனைவருக்கும் ஆரோக்கியச் சேவைகள் கிடைக்கச் செய்வது ஆகிய மூன்றிற்கும் இடையே எண்ணற்ற வழிகளில் தொடர்பு உள்ளது. ஒன்றில் முன்னேற்றம் நிகழும் போது மற்ற இரண்டிலும் சிறிது மேம்பாடு ஏற்படக்கூடும். இருந்த போதிலும், இம்மூன்றிற்கும் இடையே தந்திரமான மிகவும் முக்கியமான தொடர்பாக புதிய தாராள உலகமயமாக்குதல் நிகழ்வு (Neoliberal Globalisation) இருக்கிறது. இக்கட்டுரையில் புதிய தாராள உலகமயமாக்குதல் என்பது 1981 ஆம் ஆண்டு வாஷிங்டன் உடன்பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி அமைப்புகளைச் சரிப்படுத்தும் கொள்கைகளைக் குறிக்கிறது.

ஏழை நாடுகள் உலக வங்கியிலிருந்து புதிய கடன்களைப் பெறுவதற்கும் சர்வதேச நிதி அமைப்பான IMF-லிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தவும், இந்த கொள்கைகளைப் பின்பற்ற வேண்டியதாயிற்று. மேலும், இக்கொள்கைகளின்படி, அரசாங்கங்கள் பட்ஜெட்டில் இருக்கக்கூடிய நிதிப் பற்றாக்குறையைச் சரிசெய்து கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி அத்தியாவசியச் செலவுகளுக்கான அரசின் மூலதனங்கள் துண்டிக்கப்பட்டது. தாராள வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கவும், சுகாதாரம் மற்றும் கல்விச்சேவைகள் உட்பட அரசு நடத்தி வந்த பல நிறுவனங்கள் தனியார்மயமாக்க ஊக்குவிக்கப்பட்டது. மேலும், சொத்து மற்றும் வருமானவரிகள் குறைக்கப்பட்டு தனிநபர் சொத்து ஏற்படுத்திக் கொள்ளவும், தனியார் சொத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் இக்கொள்கைகள் உதவின.[10]

புதிய பொருளாதார தாராளமயமாக்கும் கொள்கைகள் வறுமையை ஒழிக்கும் நோக்கத்திற்கு முரண்பாடாக உள்ளன. விவசாயம், கல்வி, சுகாதாரம், துப்புரவு, நீர் விநியோகம், சாலைகள், போக்குவரத்து மற்றும் சில பொது அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான அரசின் செலவினங்களைக் குறைக்கவும் இக்கொள்கைகள் வழிகாட்டின. தாராளமயமாக்கத்தை அடிப்படையாக கொண்ட பொருளாதார வளர்ச்சி என்ற ரீதியில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கானத் தடைகள் நீக்கப்பட்டன. மேலும், வர்த்தகம் தொடர்பான வரிகள், தீர்வைகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான பல தடைகளும் நீக்கப்பட்டது. ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகள் இதனால் பயனடைந்தன. விவசாயிகள் மற்றும் சிறு தொழில் முனைவோர்கள் மிகவும் பாதிப்படைந்தனர். மேலும், வரிகள் நீக்கப்பட்டதால் வளர்ந்துவரும் நாடுகளின் அரசு வருமானம் குறைந்தது.

புதிய பொருளாதார தாராளமயமாக்குதல் கொள்கைகளை அமல்படுத்தும்படி உலக வர்த்தக மையம் (World Trade Organisation -WTO) போன்ற சர்வதேச நிறுவனங்கள் ஒப்பந்தங்களை உருவாக்கின. உதாரணமாக WTO-வின் விவசாயம் தொடர்பான ஒப்பந்தத்தின்படி (Agreement of Agriculture)

## ஆதாரக் குறிப்புகள்

7 International Food Policy Research Institute (IFPRI). (2011). *Global hunger index. The challenge of hunger: Taming price spikes and excessive food price volatility.* Bonn, Washington DC & Dublin: IFPRI, Concern Worldwide and Welthungerhilfe. www.ifpri.org/sites/default/files/publications/ghi11.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

8 World Health Organisation [WHO]. (2010). *The world health report 2010. Health systems financing: The path to universal coverage.* Geneva, World Health Organisation, 2010. p.5. http://whqlibdoc.who.int/whr/2010/9789241564021_eng.pdf?ua=1 என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

9 Ravindran, T.K.S. (2012). Universal access to sexual and reproductive health: How far away are we from the goal post? In *Action for sexual and reproductive health and rights: Strategies for the Asia-Pacific beyond ICPD and the MDGs. Paper presented at "Beyond ICPD and the MDGs: NGOs Strategising for Sexual and Reproductive Health and Rights in the Asia-Pacific Region."* Kuala Lumpur: Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW). www.arrow.org.my/uploads/Thematic_Papers_Beyond_ICPD_&_the_MDGs.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

10 Juego, B. & Schmidt, J.D. (2009). *The political economy of the global crisis: Neo-liberalism, financial crises, and emergent authoritarian liberalism in Asia.* Paper presented at the Fourth APISA Congress (Asian Political and International Studies Association), "Asia in the Midst of Crises: Political, Economic, and Social Dimensions", 12-13 November 2009, Makati City, Philippines. http://vbn.aau.dk/files/19023517/Juego-Schmidt_APISA_4_Paper__Final_.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

வளர்ந்த நாடுகளில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருட்களை உலகின் தென்பகுதியிலுள்ள நாடுகளுக்குக் கொண்டு வந்து குவித்தனர்.[11] உலகின் வடதுருவப் பகுதியிலுள்ள நாடுகளைச் சார்ந்த முதலீட்டாளர்கள், தென்பகுதியிலுள்ள நிலங்களை அதிக அளவில் கையகப்படுத்தினர். மேலும் விதைக்கான பிரத்தியேக உரிமைகள், உணவுப் பொருட்கள் சந்தையில் நிதி முன்கணிப்பு பேரம், நிலம் மற்றும் விவசாயப் பொருட்கள் உயிர் எரிபொருள் உற்பத்திக்கு திருப்புதல் போன்றவற்றிற்கும் வழிவகுத்தது. இவைகள் அனைத்தும் சர்வதேச அளவில் 2000 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்திற்கு முக்கியக்காரணமாக இருந்தது.

புதிய தாராளமயமாக்க பொருளாதாரக் கொள்கைகளின்படி இயற்கை என்பது முதலீடு ஏதுமில்லாமல் முடிவில்லாத வளங்களைக் கொடுக்கக்கூடியது எனக் கருதப்பட்டது. இயற்கை தனது வளங்களை திரும்பப் புதுப்பித்துக்கொள்ள முடியாத அளவிற்கு சுரண்டவும் இக்கொள்கைகள் வழிவகுத்தது. பூமிக்கடியில் புதையுண்ட தாவர விலங்குகளின் படிமங்களின் ஆற்றல் உற்பத்தி செய்யும் பொருட்டு எரிக்கப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளின் பல நிகழ்வுகளும் சில விவசாய நடைமுறைகளும், அதிக அளவில் கார்பன்-டை-ஆக்ஸைடு மற்றும் பசுமை வீட்டு விளைவை ஏற்படுத்தக்கூடிய இதர வாயுக்களையும் வளிமண்டலத்தில் வெளியிடச் செய்து காலநிலை மாற்றத்திற்கு வழிவகுத்தது. முன்கூட்டியே கணிக்க முடியாத திடீரென மாறும் ஒழுங்கில்லாத இக்கால நிலை மாற்றமானது ஏற்கெனவே வறட்சி மற்றும் வெள்ளத்தால் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டு வறுமையில் வாடியுள்ள விவசாயிகளின் வாழ்வைப் பாதுகாப்பற்றதாக்குகிறது.

புதிய தாராள உலகமயமாக்குதலானது சுகாதாரம் மற்றும் சுகாதாரச் சேவைகளைப் பெறுவதில் இரண்டு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. முதலாவதாக உணவுப் பற்றாக்குறை, ஏழ்மை மற்றும் சமத்துவமற்ற நிலை போன்ற சமூகப் பொருளாதார சூழ்நிலைகளின்மீது இக்கொள்கை ஏற்படுத்தும் விளைவுகள் மூலமாகவும், இரண்டாவதாக சுகாதாரச் சேவை அமைப்பிற்குள் நேரடி மாற்றங்களைக் கொண்டுவருவதன் வாயிலாகவும் பாதித்தது.

ஆண்களோடு ஒப்பிடுகையில், வியாபாரமயமாக்குதலின் மோசமான விளைவுகள் பெண்களைத்தான் அதிகம் பாதித்திருக்கிறது. பெண்கள் தங்களுக்கு ஆண்களைவிட அதிகமான மருத்துவச் செலவுகள் செய்ய நேரிடுகிறது எனத் தெரிவிக்கின்றனர். இனப்பெருக்கம் தொடர்பான மருத்துவச் சேவைகளைப் பெறவேண்டிய முக்கிய தேவையும், நாள்பட்ட நோய்களின் சுமையும் பெண்களுக்கு அதிகமாக இருப்பதும் அதற்குக் காரணமாக இருக்கக்கூடும். பிரசவம், கருக்கலைப்பு மற்றும் இனப்பெருக்க தடத்தொற்றுகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு மருத்துவ அமைப்பை நாடும்போது, ஒரு குடும்பத்தின் சராசரி மாத வருமானத்திற்கு இணையான அளவு செலவு ஆகிறது. இதுவே, வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள ஒரு குடும்பமானால் அதனுடைய மாத வருமானத்தைப் போன்று பலமடங்குத் தொகையை மருத்துவச் செலவிற்காக செலவிட நேரிடுகிறது. நிதியாதாரங்கள் இல்லாத நலிவடைந்த பிரிவினர்கள், உதாரணமாக, வளரிளம் பருவத்தினர், வயதானவர்கள் மற்றும் நேரடியாக பணம் ஈட்டும் வேலை அல்லாத இதரப் பணிகளில் உள்ள பெண்களை இந்த விலையேற்றம் வெகுவாகப் பாதிக்கின்றது.[12] சுகாதாரச் சேவைகளுக்காகும் செலவுகள் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், சுகாதாரத்திற்கான அரசின் செலவுகள் குறைக்கப்பட்டது மேலும், சுகாதாரச் சேவைகள் வியாபாரமயமாக்கப்பட்டதால், அரசு சுகாதார அமைப்பு நலிவடைய வழிவகுத்தது. முதலாவதாக அரசு அமைப்பில் பணியாற்றி வந்த திறமையானவர்களை, தனியார் வசம் ஈர்க்கும் வகையில் உள்ளார்ந்த முயற்சிகள் நடைபெற்றது. அடுத்ததாக, அரசாங்கம் மற்றும் லாப நோக்கில் செயல்படும் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் சுகாதாரத்திற்கான தங்களின் முதலீடுகளை குறைத்துக் கொண்டன. இது சுகாதாரச் சேவைகளில் இரண்டடுக்கு முறையை உருவாக்கிய அதன்படி காப்பீடு செய்து கொண்டவர்களுக்கு மட்டுமே சுகாதாரச் சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டது.

சர்வதேச சுகாதார முன்முயற்சிகள் (Global Health Initiatives GHIs) மற்றும் வர்த்தகம்

ஆதாரக் குறிப்புகள்

11 von Werlhof, C. (2008). *The consequences of globalisation and neoliberal policies: What are the alternatives?* Global Research, 01 February 2008. www.globalresearch.ca/the-consequences-of-globalization-and-neoliberal-policies-what-are-the-alternatives/7973 என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

12 World Health Organisation (WHO). (2010). *Gender, women and primary health care renewal: A discussion paper. Geneva: World Health Organisation.* http://whqlibdoc.who.int/publications/2010/9789241564038_eng.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

தொடர்பான விஷயங்களுக்கான அறிவுசார் சொத்துரிமை - டிரிப்ஸ் (Trade Related Aspects of Intellectual Property Rights - TRIPS) என்ற இரு அமைப்புகளை புதிய தாராள உலகமயமாக்குதல் என்று கொண்டு வந்தது. GHIs-இன் செயல்பாடுகள் செங்குத்தான வளர்ச்சியை மையப்படுத்தியதாக இருந்தது. ஆரோக்கியத்தை தீர்மானிக்கும் சமூகக் காரணிகள் அல்லது சுகாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கு GHIs-குறைவான கவனமே செலுத்தியது. இந்த அணுகுமுறையானது ICPD-யின் விரிவான பாலியல் மற்றும் இனப்பெருக்க நலத்திட்டம், மகப்பேறு நலன், ஹெச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் இதர பாலியல் இனப்பெருக்க நலன் என சிறுசிறு தனிப் பிரிவுகளாக பிரிந்துபோக வழிவகுத்தது. மறுபுறம் டிரிப்ஸ் அமைப்பானது மருந்து மாத்திரைகளின் விலையை அதிகரித்தது. இவ்விலையேற்றமானது. சுகாதாரச் சேவைகளைப் பெறுவதில் ஒரு கூடுதலான பொருளாதாரத் தடையாக மாறியது.

மருத்துவச் செலவுகளை சமாளிக்கும் ஒரு வழிமுறையான தனியார் சுகாதார காப்பீட்டுத் திட்டங்களும் பெண்களுக்கு கிடைக்கக்கூடிய அளவில் இல்லை. காரணம், பெரும்பாலான பெண்கள் அமைப்புசாராப் பிரிவில் பணி செய்கின்றனர். வழக்கமான இனப்பெருக்க நலச்சேவைகளான, கருத்தடை, கருக்கலைப்பு மற்றும் பிரசவம் முதலியன பிரத்யேகமான ஒன்று என்பதால் காப்பீடு செய்ய முடியாதவை எனவும் கருதப்படுகிறது. ஏனெனில், இவையனைத்தும் அதிக எண்ணிக்கையில் நடக்க வாய்ப்புள்ள தொடர் நிகழ்வுகளாகும். பெரும்பாலான காப்பீட்டுத் திட்டங்களில் மகப்பேறு சேவைகள் அடங்குவதில்லை. அப்படி மகப்பேறு சேவைக்கும் காப்பீடு தேவை என விரும்பினால், கூடுதலான பிரீமியம்/தவணைத் தொகை கட்டவேண்டும். அப்படிக் கட்டினாலும், மகப்பேறு தொடர்பான சேவைகளில் ஒரு சிலவற்றிற்கு மட்டுமே காப்பீட்டுத் தொகையைப் பெறமுடியும். அதுபோலவே, பெரும்பாலான காப்பீட்டுத் திட்டங்களின் பயனானது பெண்களுக்கான சில வகையான தற்காலிக கருத்தடை முறைகளுக்கு மட்டும் உண்டு.[13] மக்கள் தொகை மற்றும் முன்னேற்றம் குறித்த சர்வதேச மாநாட்டின் (ICPD) இலக்கான இனப்பெருக்க நலன் குறித்த விஷயங்கள் மற்றும் சேவைகளை (2015 ஆம் ஆண்டிற்குள்) அனைவருக்கும் கிடைக்கச்செய்வது என்பதை இந்த கொள்கைகள் பாதிக்கின்றன.[14]

பாலியல் மற்றும் இனப்பெருக்க நலச் சேவைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வது என்ற இலக்கை நோக்கி புதிய அணுகுமுறைகளுடன் செயலில் இறங்கவேண்டிய நேரம் இது. இந்த அணுகுமுறை வறுமை, ஏற்றத்தாழ்வு, பட்டினி மற்றும் நோய்களுக்கான மூலக் காரணங்களைக் கண்டறிந்து அவற்றை தகர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும். பாலியல் மற்றும் இனப்பெருக்க நல உரிமைகள், வறுமை ஒழிப்பு, உணவு உற்பத்திக்கான உரிமை, உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கான உரிமை மற்றும் மனித உரிமைகளுக்காகப் பாடுபடக்கூடிய இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். அக்கூட்டமைப்பு புதிய தாராள உலகமயமாக்குதலை எதிர்கொள்வதுடன், மாற்று வழிகளையும் எடுத்துரைக்க வேண்டும். அதில் சிப்பர்[3] மற்றும் குழுவினர் ஆலோசனைப்படி தற்போது நடைமுறையிலுள்ள தேசிய மற்றும் சர்வதேச பொருளாதாரங்களில் மாற்றங்களைக் கொண்டுவருதல், அதாவது பொருளாதார வளர்ச்சியின் பயன்களை வறுமையை ஒழிப்பதற்கு மறு முதலீடு செய்தல், குறிப்பாக ஏழைகள் பணி செய்யும் (விவசாயம்) மற்றும் வாழும் பகுதிகளின் (கிராமம், பின்தங்கிய மக்கள் வசிக்கும் பகுதிகளில்) மேம்பாட்டிற்காகவும் அவர்களிடமுள்ள உற்பத்திக்கான காரணிகள் நுகரும் பொருட்கள் (உணவு) முதலியவற்றிற்கு முக்கியத்துவம் தரவேண்டும்.பணவீக்கத்தைப் பற்றி தேவையில்லாமல் கவலை கொள்வதை விடுத்து, மேற்சொன்னவற்றிக்கான முதலீடுளை அவசியம் அதிகரிக்க வேண்டும்.

மேலும் ஏழை மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்களை ரத்து செய்தல்.

- தற்போது நடைமுறையிலுள்ள உணவு உற்பத்திக்கான வழிமுறைகள் மற்றும் விவசாயக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல். அதாவது

ஆதாரக் குறிப்புகள்

13 Codispotim, L., Courtot. B, & Swedish, J. (2008).*Nowhere to turn: How the individual health insurance market fails women.* Washington DC.: National Women's Law Centre. www.nwlc.org/sites/default/files/pdfs/NWLCReport-NowhereToTurn-81309w.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

14 Ravindran, T.K.S & de Pinho H. (2005). *The Right Reforms: Health sector reforms and reproductive health.* Johannesburg: School of Public Health, University of Witwatersrand.

உணவு உற்பத்திக்கான அதிகாரம், போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்து அனைவருக்கும் கிடைப்பதை உறுதிசெய்தல்.

- தற்போதைய சுகாதார அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துதல்; தனியார் மயமாக்குதலின் பிடியிலிருந்து விடுவித்து, சுகாதாரச் சேவைகள் குறிப்பாக, பாலியல் மற்றும் இனப்பெருக்க நலச்சேவைகள் அனைவருக்கும் கிடைக்க வழிவகைகளை ஏற்படுத்துதல்.

மேற்சொன்னவைகளுடன் பின்வரும் இரண்டு கடினமான தடைகளை எதிர் கொண்டு நீக்காவிட்டால் SRHR சேவைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வது என்ற இலக்கை அடைய முடியாது. முதலாவதாக, பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் மீதான சட்டரீதியான கட்டுப்பாடுகளையும், வளரிளம் மற்றும் இளம் வயதினர் SRHR சேவைகளைப் பெறுவதைக் கட்டுப்படுத்தும் கொள்கைகளையும் சரி செய்ய வேண்டும். இரண்டாவதாக, சமுதாயத்தில் நிலவக்கூடிய ஆண்-பெண் அதிகார ஏற்றத்தாழ்வுகளை சுகாதார அமைப்பு கண்டு கொள்ளாமல் இருப்பதையும் எடுத்துரைக்க வேண்டும்.

**இரண்டு கடினமான தடைகளை எதிர்கொண்டு நீக்காவிட்டால் SRHR சேவைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வது என்ற இலக்கை அடைய முடியாது. முதலாவதாக, பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் மீதான சட்டரீதியான கட்டுப்பாடுகளையும், வளரிளம் மற்றும் இளம் வயதினர் SRHR சேவைகளைப் பெறுவதைக் கட்டுப்படுத்தும் கொள்கைகளையும் சரி செய்ய வேண்டும். இரண்டாவதாக, சமுதாயத்தில் நிலவக்கூடிய ஆண்-பெண் அதிகார ஏற்றத்தாழ்வுகளைச் சுகாதார அமைப்பு கண்டு கொள்ளாமல் இருப்பதையும் எடுத்துரைக்க வேண்டும்.**

*கட்டுரை ஆசிரியர்:* T.K. **சுந்தரி ரவீந்திரன்,** T.K. Sundari Ravindran), *பேராசிரியர், சுகாதார அறிவியல் பிரிவு, அச்சுதாமேனன் சென்டர் பார் ஹெல்த் சைன்ஸ் ஸடடீஸ், திருவனந்தபுரம், மின் அஞ்சல்:* ravindrans@usa.net

# வறுமை, உணவிற்கு உத்திரவாதமின்மை மற்றும் SRHR பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பலதரப்பட்ட இயக்கங்களின் கூட்டணியைப் பலப்படுத்துதல்

மக்கள் தொகையும் வளர்ச்சியும் என்பது குறித்த சர்வதேச மாநாட்டின் செயல் திட்டங்களை (ICPD-POA) நிறைவேற்றுவது என நமது அரசாங்கங்கள் உறுதி பூண்டு 20 ஆண்டுகள் கடந்துவிட்டன. அதுபோலவே, நூற்றாண்டு வளர்ச்சி இலக்குகளை (MDGs) நிறைவேற்ற ஒப்புக்கொண்டு 15 ஆண்டுகள் முடிந்து விட்டது. ஆனால் இவ்விரு சர்வதேச ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பெரும்பாலான வளர்ச்சி இலக்குகளை அடைய முடியாத நிலையில்தான் ஆசிய-பசிபிக் பகுதியிலுள்ள பல நாடுகள் இன்றும் இருந்து வருகின்றன.

சமீப காலமாக, ஆசியக் கண்டமானது, மிக வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வருகிறது என்ற போதிலும், உலகிலுள்ள ஏழைகளில் பெரும்பாலானவர்கள் இப்பிராந்தியத்தில்தான் வசிக்கின்றனர். மேலும், சமூக ஏற்றத்தாழ்வுகளும் இப்பகுதியில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. சமீபத்தில் வெளியாகியுள்ள ஆசிய-பசிபிக் பகுதிக்கான MDG-இன் அறிக்கையிலிருந்து மேற்சொன்ன விஷயம் தெளிவாகத் தெரியவருகிறது. ஆசிய-பசிபிக் கண்டத்தில் மட்டும் 740 மில்லியன் மக்கள்

முழு வறுமையில் (Abject Poverty) வாழ்வதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்றத்தாழ்வுகளின் நிலையைக் கண்டறியப் பரவலாகப் பயன்படுத்தப்படும் 'கினி' அளவீடு (Gini Intex) என்ற குறியீடானது தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அதாவது **1990-களில் 33.5** ஆக இருந்தன. அக்குறியீடு **2013-ல் 37.5** ஆக அதிகரித்துள்ளது.[1] உலகில் பட்டினியால் வாடும் மக்களின் பெரும்பான்மையினர் இப்பிராந்தியத்தில்தான் உள்ளனர். ஆசியாவில் மட்டும் **563** மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.[2] இவர்களில் **60%** பேர் தெற்காசியாவில் உள்ளனர்.[3] இப்பிராந்தியத்தின் பாலியல் இனப்பெருக்க நலன் என்பது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. குறிப்பாக, அதிக எண்ணிக்கையிலான மக்களின் இனப்பெருக்க நல உரிமைகள் தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது.[4]

இந்நிலையில் பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளில் மையப்படுத்த வேண்டிய விஷயங்களுக்கு புத்துணர்வு கொடுத்து அவற்றை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ICPD+20, MDG+15 ஆய்வின் நிகழ்வுகள் உருவாக்கியுள்ளது. **2015**க்குப் பிறகு வரவிருக்கும் வளர்ச்சித் திட்டப் பணிகளில் இடம்பெற வேண்டிய விஷயங்கள் என்னென்ன என்பது குறித்த விவாதம் நடந்துவரும் இச்சமயத்தில் SRHR உடன் இதர சமூக அரசியல் வளர்ச்சிப் பணிகளைத் தொடர்புப்படுத்துவது என்பது மிகவும் உகந்ததாக இருக்கும். மேலும், வறுமை ஒழிப்பு உணவு உற்பத்திக்கான உரிமை அனைவருக்கும் SRHR கிடைக்கச்செய்வது என்ற நமது ஒட்டுமொத்த இலக்கை அடைவதற்காக பல சமூக இயக்கங்கள் ஒன்றிணைந்து பணி செய்வதற்கும் இது ஒரு முக்கியமான தருணமாகும். நாம் இன்று எதிர்கொள்ளும் பல பிரச்சனைகளுக்கு இடையேயுள்ள சிக்கலான தொடர்புகள் பற்றிய ஒரு புரிதலும் தேவைப்படுகிறது. அப்போதுதான் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளில் இவைகளை எப்படி எடுத்துரைக்கச் செய்வது என்பதையும் உறுதி செய்ய முடியும். மேற் சொன்ன விஷயத்தைப் பூர்த்தி செய்யும் விதமாக ஆரோ நிறுவனம், டேவிட் லூசிலி பவுண்டேசன் என்ற அமைப்பின் நிதியுதவியுடன் ஒரு பல்லாண்டுத் திட்டத்தை **2012**இல் துவங்கியது.

பல்வேறுபட்ட பணிகளைச் செய்துவரும் இயக்கங்களிடையே, கூட்டணியை உருவாக்குவதன் வாயிலாக SRHR விஷயங்களுக்கு புத்துணர்வும், வலிமையைக் கொடுத்து ICPD+20, MDG+15 நிகழ்வுகளில் மாற்றங்களைக் கொண்டுவருவது என்பது அத்திட்டத்தின் தலைப்பாகும்.[5]

வறுமை, உணவு உற்பத்திக்கான உரிமை, உணவுப் பாதுகாப்பு, ஆண் பெண் சமத்துவம் மற்றும் SRHR தொடர்பாகப் பணிபுரியும் பல அமைப்புக்களிடையே தொடர்பை ஏற்படுத்துவதற்காக[6] ஒரு மண்டல அளவிலான கூட்டத்தை ஆரோ நிறுவனம் நடத்தியது. பலதரப்பட்ட பிரச்சனைகளுக்கு இடையே உள்ள தொடர்பு குறித்த புரிதல்கள் என்ற தலைப்பில் அக்கூட்டம் **2013**ஆம் ஆண்டு செப்டம்பர் **10,11** தேதிகளில் பேங்காக் நகரில் நடைபெற்றது. ஆசிய-பசிபிக் பகுதியின் வறுமை, உணவு உற்பத்திக்கான உரிமை, உணவுப் பாதுகாப்பு, பெண்களின் உரிமைகள், ஆண்-பெண் சமத்துவம் மற்றும் SRHRக்காக பாடுபடும் நிறுவனங்களின் கூட்டமைப்புகள், சமூகப் போராளிகள், செயல்பாட்டாளர்கள் எனப் பலரையும் ஒன்றுதிரட்டும் ஒரு முயற்சியாக அந்நிகழ்ச்சி இருந்தது. பிரச்சனைகளின் பல பரிமாணங்களையும், அவைகளுக்கிடையேயான தொடர்புகளையும் நன்கு விவாதித்து, அதனடிப்படையில் பொதுவான ஒரு நிலையைக் கண்டறிந்து **2015**க்குப் பிறகு வரவிருக்கும் வளர்ச்சித் திட்டப் பணிகளில் மாறுதல்களை ஏற்படுத்துவது என்பதுதான் இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

உணவு உற்பத்திக்கான அதிகாரம் மற்றும் SRHR[7] க்காக பாடுபடும் பல இயக்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட அழைப்பு விடுக்கப்பட்டு பேங்காக் பிரகடனம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. அதை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர். எல்லோருக்கும் சமூக நீதி கிடைக்கச் செய்வதற்கு, வறுமை, பட்டினி, உழுவதற்கு நிலமில்லாத ஒரு நிலை, ஆண்-பெண் ஏற்றத்தாழ்வுகள், மற்றும் அதற்கான மூலக் காரணங்களையும், SRHR குறித்த பிரச்சனைகளையும் தீர்ப்பது முக்கியம் என அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டது. போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமைக்கும் நீர், வசிப்பிடம், கல்வி,

## ஆதாரக் குறிப்புகள்

1 UN Economic and Social Commission for Asia and the Pacific (UNESCAP), Asian Development Bank (ADB) & United Nations Development Programme (UNDP). (2013). *Asia-Pacific aspirations: Perspectives for a post-2015 development agenda. Asia-Pacific Regional MDGs Report 2012/13.* Bangkok: UNESCAP, ADB, & UNDP. http://asia-pacific.undp.org/content/dam/rbap/docs/Research%20&%20Publications/mdg/RBAP-RMDG-Report-2012-2013.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

2 UN Food and Agriculture Organisation (FAO), the International Fund for Agricultural Development (IFAD) and the World Food Programme (WFP). *State of food insecurity in the world 2012.* www.fao.org/docrep/016/i3027e/i3027e00.htm என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

3 Asian Development Bank. (2012). *Food security and poverty in Asia and the Pacific: Key challenges and policy issues.* Mandaluyong City, Philippines: Asian Development Bank. www.adb.org/publications/food-security-and-poverty-asia-and-pacific-key-challenges-and-policy-issues என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

4 மேலும் விவரங்களுக்குப் பார்க்க: Thanenthiran, S., Racherla, S.J.M., & Jahanath, S. (2013). *Reclaiming & Redefining Rights - ICPD+20: Status of Sexual and Reproductive Health and Rights in Asia-Pacific.* Kuala Lumpur, Malaysia: Asian-Pacific Resource & Research Centre for Women (ARROW). www.arrow.org.my/publications/ICPD+20/ICPD+20_ARROW_AP.pdf

5 இத்திட்டத்தைப் பற்றிய கூடுதல் தகவல்கள் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கிறது: www.arrow.org.my/?p=revitalising-and-strengthening-the-srhr-agenda-through-inter-movement-work-to-impact-the-icpd20-and-the-mdg15-processes

6 கூட்டங்கள் மற்றும் பிரச்சாரங்கள் என்பதோடு இம் மூன்று பிரச்சனைகள் தொடர்பாக பணிபுரியும் இயக்கங்களையும், அதன் முக்கியஸ்தர்களை ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவருவதற்காக பலவிதமான கொள்கை குறிப்புகள், மற்றும் பிரச்சார உபகரணங்கள் உருவாக்கப்படுகினறது. அவ்வரிசையில் விரைவில் வெளிவர உள்ள ஒரு புத்தகம் தான் " பிளவுகளை ஒன்றிணைப்போம், அண்பெண் சமத்துவம், வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு முதலியனவற்றை SRHR உடன் தொடர்புபடுத்துவது" என்பதாகும். அப்புத்தகத்தின் முதல் கட்டுரை ; டி.கே. சுந்தரி ரவீந்திரனால் எழுதப்பட்டுள்ளது அதன் தலைப்பு "வறுமை ஒழிப்பு உணவு உற்பத்திக்கான அதிகாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் அனைவருக்கும் SRHR சேவைகள இதில் எதை எடுத்துக்கொள்வது" இக்கட்டுரையைப் பின்வரும் இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் www.arrow.org.my/publications/ARROW%20Thematic%20Paper%2001.pdf.

7 அப்பிரகடனத்தின் முழு விவரங்களையும் அதில் கையொப்பமிட்டுள்ளது நாடுகள், மற்றும் ஆரோ நிறுவனத்தில் இதற்கு யாரைத் தொடர்புகொள்வது போன்ற விவரங்களுக்கு பின்வரும் இணையதளத்தைப் பார்க்கவும்: www.arrow.org.my/?p=bangkok-cross-movement-call-on-addressing-poverty-food-sovereignty-rights-to-food-and-nutrition-and-srhr

சொத்து, நல்லவேலை, வாழ்வாதாரம், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக நலன் என்பது போன்ற இதர மனித உரிமைகளுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருக்கிறது என அக்கூட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டது. பட்டினி மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு (நுண்ணூட்டச் சத்துக்கள் உட்பட) போன்ற பிரச்சனைகளிலிருந்து தனிநபர்கள் விடுபடும்போதுதான் நல்லதொரு ஆரோக்கியத்துடன் அவர்கள் வாழ முடியும். அப்போதுதான் அவர்கள் பரிபூரண வாழ்க்கை வாழவும், சமூகப் பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் என சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் பங்கெடுக்க முடியும் எனவும் உணரப்பட்டது. அதுபோலவே, போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமைகளை பெண்களின் சுய உறுதி, சுய மாண்பு உரிமைகளிலிருந்து பிரித்துப் பார்க்கவும் முடியாது எனவும் அக்கூட்டுப் பிரகடனத்தில் உறுதிப்படுத்தப்பட்டது.

தற்போது நடைமுறையிலுள்ள மனித உரிமைகள் தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களையும் அதன் சரத்துக்களையும் உடனடியாக அமல்படுத்தும்படி அப்பிரகடனத்தில் அறிவிக்கப்பட்டது. சமூகத்திலுள்ள குறிப்பிட்ட ஒருசில பிரிவினரைப் புறக்கணிப்பது மற்றும் குற்றப்படுத்துவது தொடர்பான சட்டங்களையும், கொள்கைகளையும் நீக்குவதற்கும் அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. நிதி மற்றும் வர்த்தகம் தொடர்பான சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல் மேலும், ஆண்-பெண் வேறுபாடுகளை உணர்ந்து ஊழலுக்கு எதிரான கொள்கைகளை உருவாக்குவதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் அவசியம் எனவும் ஏழை, நலிவடைந்த பிரிவினர்கள் பயன்பெறும் வகையில் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயத்திற்கான பொது மூலதனங்களை அதிகரிக்கவும் கோரிக்கை வைக்கப்பட்டது. கலாச்சார ரீதியாக பொருத்தமான அதே நேரம் பாதுகாப்பான உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமை எல்லோர்க்கும் கிடைப்பதற்கு உறுதியளிக்க வேண்டும் எனவும் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய பிரிவினரான கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் HIV/AIDSஆல் பாதிக்கப்பட்டவர்களின் விசேஷ உணவுத் தேவையைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

பல இயக்கத்தினர் ஒன்றிணைந்து செயல் படுத்துவது என்ற நிகழ்வு தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதற்காக பேங்காக் கூட்டுப் பிரகடனத்தில் தகவல்களை SRHR குறித்து பணி செய்யும் பலருக்கும் கொண்டு செல்வதற்கான முயற்சியை ஆரோ நிறுவனம் செய்து வருகிறது. அதன்படி 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில் நடைபெற்ற இனப்பெருக்கப் பாலியல் நலன் மற்றும் உரிமைகளுக்கான ஏழாவது ஆசிய-பசிபிக் மாநாட்டில் (APCRSH) ஒரு சிறப்பு நிகழ்ச்சியை அந்நிறுவனம் நடத்தியது.

பல்வேறுபட்ட பணிகளைச் செய்து வரும் இயக்கங்களிடையே தொடர்பை உருவாக்குவதன் வாயிலாக உணவு மற்றும் SRHR உரிமைகளுக்குப் புத்துணர்வும் வலிமையும் உருவாக்கி ICPD+20 மற்றும் 2015க்குப் பிந்தைய நிகழ்வுகளில் மாற்றங்களை உருவாக்குவது என்ற தலைப்பில் அந்நிகழ்ச்சி நடைபெற்றது.[8] பல்வேறுபட்ட சூழலில் வாழும் பெண்களை வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை ஆகிய இரண்டும் எப்படிப் பாதிக்கின்றது என்பது அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. SRHR என்பதை மட்டும் தனிமைப்படுத்தக் கூடாது என்றும், உணவு, ஊட்டச்சத்து போன்ற மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படும்போது அனைவருக்கும் SRHR என்பதை அடைய முடியாது எனவும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதுபோலவே உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமைக்கும், பெண்களின் சுய உறுதி, சுதந்திரம், தன் உடல் மற்றும் உயிர்மேல் அவர்களுக்கு அதிகாரம் மற்றும் அவரின் SRHR க்கும் நெருக்கமான தொடர்பு இருக்கிறது எனவும் அக்கருத்தரங்கில் பேசப்பட்டது. பலதரப்பட்ட இயக்கங்களின் கூட்டணியை வலுப்படுத்துவது என்ற நிகழ்வு தொடர்ந்து நடைபெறும் விதமாக ஆசியன் நாடுகளின் தன்னார்வ அமைப்பினரின்/ஆசியன் மக்கள் அமைப்பு (ASEAN Civil Society Conference, ACSC/ASEAN Peoples Forum-APF) மாநாட்டின்போது ஒரு பயிற்சி பட்டறையையும் ஆரோ நிறுவனம் பின்வரும் பல அமைப்புகளுடன் இணைந்து நடத்தியது. பெண்கள் சட்டமும் முன்னேற்றமும் என்பதற்கான ஆசிய-பசிபிக் அமைப்பு (APWLD) ஆசிய கிராமப் பெண்கள்

ஆதாரக் குறிப்புகள்

8 அக்குழுவிவாதத்தை மெர்லின் டாங்குலியன் (Marilen Danguilan) என்ற மருத்துவ வழிநடத்தினார். அந்த விவாதத்தில் பின்வரும் மூன்று சிறப்புப் பேச்சாளர்கள் பங்குபெற்றனர்; ஆசியன் வளர்ச்சி வங்கியின் இம்ரான ஜலால் (Imrana Jalal) இந்தியாவிலிருந்து, அச்சுதமேனன் சென்டர் ஃபார் ஹெல்த் சைன்ஸ் ஸ்டடீஸ் என்ற மையத்தின் பேராசிரியரான டி.கே.சுந்தரி ரவீந்திரன் (TK Sundari Ravindran) மற்றும் மியான்மர் நாட்டின் சுகாதார அமைச்சகத்தின் ஆலோசகரான நரிமா அவின் (Narimah Awin) ஆகியோர்.

கூட்டமைப்பு (ARWC) மற்றும் பூச்சி மருந்துகளின் செயல்பாடுகளுக்கெதிரான ஆசியன் பசிபிக் கூட்டமைப்பு (PANAP)[9] முதலான அப்பயிற்சிப் பட்டறைக்கு உதவின. ஆசிய நாடுகளின் அரசுப் பிரதிநிதிகளின் மாநாட்டிற்கு முன்னதாக இந்த தன்னார்வ அமைப்பினரின் மாநாடு நடைபெற்றுள்ளதால் ஆசியன் நாடுகளிலுள்ள மக்களைப் பாதிக்கக்கூடிய பிரதான பிரச்சனைகளான நிலையான அமைதி, முன்னேற்றம் குடியுரிமை உருவாக்குதல் போன்றவற்றை விவாதிப்பதற்கான ஒரு முக்கிய இடமாக அம்மாநாடு இருந்தது. இம்மாநாடு மியான்மர் நாட்டிலுள்ள யாங்கூன் நகரில் 2014ஆம் ஆண்டு மார்ச் 21-23 தேதிகளில் நடைபெற்றது. ஆசியன் நாடுகள் மற்றும் உலகின் பிற பகுதிகளிலிருந்தும் தன்னார்வ அமைப்பினர், கிராம அளவில் பணிபுரியும் நிறுவனத்தினர்கள், பொதுமக்கள் மற்றும் தனிநபர்கள் என கிட்டதட்ட 3000 பேர் இம்மாநாட்டில் பங்குபெற்றனர்.

உணவு உற்பத்திக்கான அதிகாரம், வறுமை ஒழிப்பு மற்றும் SRHR தொடர்பான பணிபுரியும் பலதரப்பட்ட இயக்கங்களின் கூட்டணியை உருவாக்குதல் என்ற தலைப்பில் நடைபெற்ற ACSC/APF மாநாட்டில் பின்வரும் மூன்று முக்கியப் பரிந்துரைகள் நமது நாடுகளிலுள்ள அரசாங்கத்திற்கு கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டது.

1. ASEAN நாடுகளின் SRHR- சீரான முன்னேற்றம் ஏற்படவில்லை எனவே அனைவருக்கும் SRHR கிடைப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான நிதி முதலீடுகளை வழங்க அரசாங்கங்கள் முன்வர வேண்டும். அதில் பெண்கள், இளம் வயதினர் பலவிதமான பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், பாலியல் தொழிலில் ஈடுபடுவோர், மூன்றாம் பாலினத்தவர், மாற்றுத்திறனாளிகள், இடம் பெயர்ந்தவர்கள், பழங்குடியின மக்கள் மற்றும் இதர புறக்கணிக்கப்பட்ட பிரிவினரின் உரிமைகளுக்கு முன்னுரிமை தரவேண்டும். மனித உரிமைகளுக்கு ஆதரவளிக்கக் கூடிய (SRHR உட்பட) கொள்கைகளையும் சட்டங்களையும் மறுஆய்வு செய்து தேவையான திருத்தங்களைக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்துவதும் இதில் அடங்கும். குறிப்பாக, மனிதனின் வயதுக்குத் தக்கவாறு விரிவான சுகாதாரச் சேவைகளை எல்லோருக்கும் கிடைப்பதை உறுதிசெய்தல், அப்படி வழங்கப்படும் சேவைகளானது தரமானதாகவும் ஆண்கள், பெண்களின் தேவைக்கு தக்கவாறும் அவர்கள் பெறக்கூடிய வகையிலும்  இருப்பதை உறுதி செய்யும் சட்டதிட்டங்கள் அவசியம். குறிப்பாக, அதில் கருத்தடை, பாதுகாப்பான கருக்கலைப்பு, ம கப்பேறு நலன் ஊட்டச்சத்து, குழந்தையின்மை, இனப்பெருக்க உறுப்புகளில் புற்றுநோய் HIV/AIDS உட்பட இதர பால்வினை நோய்களுக்கான ஆலோசனை, பரிசோதனை மற்றும் சிகிச்சையும், விரிவான பாலியல் கல்வி முதலியனவும் இடம்பெற வேண்டும். அப்போதுதான் வளர்ச்சி நிலையை அடையமுடியும்.

2. அனைவருக்கும் போதுமான உணவு கிடைப்பதற்கான உரிமையை உறுதி செய்வது அவசியம். மேலும், அவ்வுணவானது பாதுகாப்பானதாகவும் கலாச்சார ரீதியாகவும் அவர்களுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். உணவு உற்பத்திக்காக பொதுவான ஒரு கொள்கையை அரசு தொடரவேண்டும். கிராமப்புற கட்டமைப்பு வசதிகளை, குறிப்பாக, சிறு விவசாயிகளுக்கான கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை அதிகரிக்க வேண்டும். தாராளமய வர்த்தக ஒப்பந்தங்களை மறுஆய்வு செய்து அதை விலக்கிக்கொள்ள வேண்டும். அதிகரித்து வரும் நில அபகரிப்புகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நீர், நிலம் முதலியவைகளின் மீதான அதிகாரம் எல்லோருக்கும் சமமாக கிடப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதும் அவசியம். மேலும், நிலையான வர்த்தக நடைமுறைகளை ஊக்குவிப்பது, விவசாயத்திற்கான மூலதனங்களை ஒழுங்குபடுத்துவது, உண்மையான நிலச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது, விவசாயிகள், மீன்பிடிப்பவர்கள், பழங்குடியின மக்களின் நிலவுரிமை மற்றும் ஒப்பந்த உரிமைகளை பெறுவதற்கான நிர்வாக நடைமுறைகளையும் கொண்டு வரவேண்டும். இப்பகுதியிலுள்ள விவசாயிகள் மற்றும் நுகர்வோர்களுக்கிடையே ஒத்துழைப்பை உருவாக்குவதும், காலநிலை மாற்றம் மற்றும் தொடர்ந்து ஒரே பயிரை பயிரிடுவதால் வள ஆதாரங்களின் மதிப்புக்குறைவதைத் தடுத்து நிலையான விவசாயத்தைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ஆதாரக் குறிப்புகள்

9 டிடிசோனின்டோரே (Titi Soentoro-APWLD), அர்ஷிகிலிப்போ (Arze Glipo-APNFS) மரியா மலின்டோ அண்டோ (Maria Melinda Ando-ARROW), நரிமா அவின் (Narimah Awin-Consultant), மற்றும் ஜாஸ்மிண்டா (Jazminda Lumang-ARWC).

ஆதாரக் குறிப்புகள்

3. உணவு உற்பத்திக்கான உரிமை, ஏழ்மை, மற்றும் SRHR ஆகிய மூன்று பிரச்சனைகளுக்கு இடையேயான தொடர்புகளை வெளிக் கொணர்வதற்கான ஆராய்ச்சிகளுக்கு உதவுதல் அவசியம். ஆசியன் அமைப்பின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஆக்கப்பூர்வ பங்கேற்பை உறுதிப்படுத்துதல், மேலும், பல்வேறுபட்ட இயக்கங்களின் கூட்டணி உருவாக்குவதற்கான வாய்ப்புகளையும் அரசாங்கங்கள் ஏற்படுத்த வேண்டும்.

கட்டுரை எழுதியவர்: **எரிக்கா சேல்ஸ்,** (Erika Sales) திட்ட அதிகாரி, ஆரோ, மற்றும்
**மரியா மெலிண்டோ அண்டோ,** (Maria Melinda Ando) திட்ட மேலாளர், ஆரோ
மின் அஞ்சல் erika@arrow.org.my மற்றும் malyn@arrow.org.my

# மாற்றத்திற்கான அந்தத் துணிச்சல்

## நானு கதானியுடன் நடைபெற்ற உரையாடல்

ஆசியன் பசிபிக் ரிசோர்ஸ் அண்டு ரிசர்ச் சென்டர் பார் வுமன் - ஆரோ (Asian Pacific Resource and Research Center for Women - ARROW) நிறுவனத்தின் தகவல் பரிமாற்ற துறையின் திட்ட மேலாளரும், மாற்றத்திற்காகச் செயல்படும் "ஆரோ" என்ற இச்செய்திமடலின் பதிப்பாசிரியருமான மரியா மெலிண்டோ ஆன்டோ - (மாலின்) நேபாள நாட்டிலுள்ள ஹிமாலயன் கிராஸ்ரூட்ஸ் வுமன்ஸ் நேச்சுரல் ரிசோர்ஸ் மேனேஜ்மெண்ட் அசோசியன் - ஹிமவாண்டி (Himalayan Grassroots Women's Natural Resource Management Association, HIMAWANTI)[1] என்ற அமைப்பின் கவரி மாவட்ட தலைவரும் விவசாயியுமான நானு, கதானி என்பவருடன் ஒரு உரையாடல் நடத்தினார். அந்த உரையாடலே இந்த சிறப்புக் கட்டுரையாகும்.

ஒரு விவசாயி மற்றும் சமூகத் தலைவியாக நானு, கதானி தன்னுடைய பாதையில் சந்தித்த சவால்கள் இந்தப் பேட்டியின் மையப் பொருளாக உள்ளது. குறிப்பாக ஆண்-பெண் விருப்பு வெறுப்புகள், உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு, ஆண்-பெண் சமத்துவம் மற்றும் பாலியல் இனப்பெருக்க நல உரிமைகள் என்பது தொடர்பாக ஒரு பெண் என்கிற ரீதியில் தானும், கிராமத்திலுள்ள தன்னைப் போன்ற இதர பெண்களும் சந்தித்த சவால்களை இந்த உரையாடலில் அவர் பகிர்ந்து கொண்டுள்ளார். "ஆண்-பெண் சமத்துவம், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டில் பெண்களுக்குச் சம வாய்ப்புகளை வழங்குவோம் என்ற தலைப்பில் ஆசிய பசிபிக் மண்டல அளவிலான உயர் நிலைக் கூட்டம் ஒன்று, 2013ஆம் ஆண்டு ஜீலை 24 முதல் 26 வரை தாய்லாந்து நாட்டிலுள்ள பேங்காக் நகரில் நடைபெற்றது.[2] அக்கூட்டம் நடந்த சமயத்தில் இந்த பேட்டி எடுக்கப்பட்டது.

மண்டல அளவிலான அம்மூன்று நாள் கூட்டத்தை, வுமன் ஆர்கனைசிங் பார் சேஞ்ச் இன் அக்கிரிகல்சர் அண்டு நேச்சுரல் ரிஸோர்ஸ் மேனேஜ்மெண்ட் - வேகன் (Women Organizing for Change in Agriculture and Natural Resource Management - WOCAN) ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (Food and Agricultural Organization - FAO) மற்றும் ஆசியன் வளர்ச்சி வங்கி (Asian Development Bank - ADB) ஆகிய மூன்று அமைப்புகள் இணைந்து நடத்தியது. பதினெட்டு ஆசிய-பசிபிக் நாடுகளிலிருந்து 70க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

விவசாயம் மற்றும் உணவு உற்பத்தியில் ஆண்-பெண் சமத்துவத்தை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை அதிகரிப்பது என்பதன் ஒரு முயற்சியாக, அரசு பிரதிநிதிகள், சர்வதேச மற்றும் தேசிய அளவில் பணிபுரியும் தன்னார்வ அமைப்பைச் சேர்ந்தவர்கள் என பலரும் அக்கூட்டத்தில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐ.நா. சபையின் உணவிற்கான உரிமைகள் பிரிவின் சிறப்பு அதிகாரி டாக்டர் ஒலிவர் டீ சூட்டர்

1 ஹிமவாண்டி குறித்த மேலும் விவரங்களுக்கு: www.nhimawanti.org.np/ என்ற இணையதளத்தைப் பார்க்கவும்

2 இந்த ஆலோசனைக் கூட்டம் குறித்த மேலும் விவரங்களுக்கு: www.wocan.org/news/wocan-fao-adb-conduct-asia-and-pacific-regional-high-level-consultation-gender-food-security#sthash.ou7tc3Kl.dpuf என்ற இணையதளத்தைப் பார்க்கவும்

தலைமையுறையாற்றினார். அம்மண்டல அளவிலான ஆலோசனைக் கூட்டத்தில், “உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிலுள்ள பாலினப் பரிமாணங்கள்” என்ற தலைப்பில் குழு விவாதம் ஒன்று நடைபெற்றது. அவ்விவாதத்தின்போது நானு, கதானி தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.[3]

**உரையாடலின் தொகுப்பு – பின்வருமாறு:**

**மாலினி: உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்**

*நானு: எனது பெயர் நானுகதானி. நான் நேபாள நாட்டின் கவரி பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி. நான் பதினைந்து ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். கணவர், மாமியார் மற்றும் இரண்டு பெண் பிள்ளைகளுடன் என்னையும் சேர்த்து எனது குடும்பத்தில் ஐந்து நபர்கள் இருக்கின்றோம். எனக்கு 35 வயதாகிறது. எனது பிள்ளைகள் தற்போது கல்லூரியில் படித்து வருகின்றனர்.*

**மாலின் : சமுதாயப் பணியில் உங்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டது எப்படி என்பது குறித்து சொல்லுங்கள். நீங்கள் ஒரு சமூகத் தலைவியாக மற்றும் விவசாயியாக மாறுவதற்கு என்ன காரணம்?**

*நானு: நான் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட, அடித்தட்டு மற்றும் ஏழை வகுப்பைச் சார்ந்தவள். எனது கணவரும் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். எனது சமூகத்தைச் சேர்ந்தவர்களை இதரப் பிரிவினர் வேற்றுமையுடன் நடத்தியது மற்றும் இழிவுப்படுத்தியதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இது சரியில்லை என்றும், அதற்காக நான் ஏதாவது செய்தாக வேண்டும் என்றும் கருதி, இப்பணியில் இறங்கினேன்.*

**மாலின்: உங்களின் சமூகப் பயணத்தில் உங்களுக்கு உறுதுணையாக இருந்தது என்னென்ன? அதற்கு யார் யார் உதவினார்கள்? ஹிமாவாண்டி (HIMAWANTI) என்ற அமைப்பைப் பற்றியும், அது எம்மாதிரியான பணிகளைச் செய்கிறது, அதில் எத்தனை பேர் உறுப்பினர்களாக உள்ளனர் என்பது குறித்தும் கூறுங்கள்.**

*நானு: ஆரம்பத்தில் நான் மட்டும் சுயமாக இப்பணியைத் துவங்கினேன். எனது இந்த சமூகப் பயணத்தில் நான் பல நபர்களைச் சந்தித்திருக்கிறேன். அதில் பல பெண்கள் எனக்கு ஊக்கமளித்துள்ளனர். காலப்போக்கில் எங்களின் பணிக்கு நிதியுதவி உட்பட பல வழிகளில் உதவக்கூடிய நாரி சேத்னா, வோகேன் ஹிமாவாண்டி மற்றும் அரசு அமைப்புகளின் அறிமுகம் கிடைத்தது. நாங்கள் மூன்று பேர் சேர்ந்து தலா பத்து நேபாள ரூபாய் (0.10 அமெரிக்க டாலர்) பணம் போட்டு ஒரு குழுவை ஆரம்பித்தோம். தற்போது அதில் 614 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். (9 வார்டுகளைக் கொண்ட ஒரு கிராம மேம்பாட்டுக் குழுவில்)*

**மாலின்: நேபாள நாட்டில், உங்கள் சமூகத்தைச் சார்ந்த விவசாயம் செய்யும் பெண்கள் சந்திக்கும் பொதுவான பிரச்சனைகள் என்னென்ன?**

*நானு : பெண்களுக்கு மிகக் குறைவான உதவியே அவர்கள் குடும்பத்தினரிடமிருந்து கிடைக்கிறது. வீட்டை விட்டு வெளியே செல்வதற்கு அவர்களுக்கு பல விதமான கட்டுப்பாடுகள் உள்ளன. குடும்பத்தின் பல வேலைகளைச் செய்து முடித்த பின்புதான் ரேடியோ கேட்பது அல்லது தொலைக் காட்சியைப் பார்ப்பதற்கு நேரம் கிடைக்கிறது. எனவே, பெண்களுக்குச் செய்திகள் மற்றும் தகவல்கள் கிடைப்பது அரிதாகும். திட்டங்கள் தீட்டுவது மற்றும் முடிவெடுப்பதில் அரசாங்கமும் பெண்களின் பங்கேற்பைக் கேட்பதில்லை. அவற்றையும் மீறி ஆர்வத்துடன் பெண்கள் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலும், அவர்களின் கருத்துக்களை யாரும் கேட்பதில்லை, குறிப்பாக, அரசாங்கத்தில் உள்ளவர்கள் பெண்களின் கருத்தைப் புறக்கணித்து விடுகின்றனர்.*

**மாலின்: தனி நபர் முதல் தொடங்கி, சமுதாயம் வரை பெண்களுக்கு இந்தச் சவால்கள் ஏன் ஏற்படுகிறது என நீங்கள் கருதுகிறீர்கள். நேபாள சமூகத்தில் பெண்கள் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று ஏதேனும் எதிர்பார்ப்புகள் இருக்கின்றதா? பெண்களிடமிருந்து அப்படி என்ன எதிர்பார்க்கப்படுகிறது.**

ஆதாரக் குறிப்புகள்

3 நானுவின் பேட்டியைக் கேட்க: www.youtube.com/watch?v=iPvXOgbnnlw

நானு : எங்கள் நாட்டைப் பொறுத்தவரை வீட்டைப் பார்த்துக் கொள்வது, வயதானவர்கள் மற்றும் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது, குடும்பத்திற்கு சுவையான உணவுகளைத் தயாரிப்பது, வீட்டை அழகாக வைத்துக்கொள்வது, குழந்தைகள் பெற்றுக் கொள்வது, கழனி மற்றும் குடும்பப் பொறுப்புகளைக் கவனித்துக் கொள்வது போன்ற பல வேலைகளைச் செய்பவர்கள்தான் நல்ல பெண்கள் எனக் கருதப்படுகிறது. வீட்டை விட்டு வெளியே செல்லுபவர்கள் அல்லது வெளிப்படையாகப் பேசுபவர்கள் நல்ல பெண்கள் அல்ல எனவும் கருதப்படுகிறது. ஆண்கள் வெளிவேலைகளில் ஈடுபடுகின்றனர், குடும்பத்திற்குத் தேவையான உணவைக் கொண்டுவருதல் மற்றும் குடும்பத்திற்குப் பாதுகாப்பாக ஆண்கள் இருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. வீட்டின் அழகே பெண்கள்தான் என்று கூறி வீட்டின் எல்லைக்குள் பெண்கள் இருக்கும்படி சமுதாயத்தால் நிர்ப்பந்திக்கப்படுகிறது. இது படித்த பெண்களுக்கும் பொருந்தும்.

**மாலின்: ஒரு பெண் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலிருந்து நீங்கள் எப்படி வெளிவந்தீர்கள்?**

நானு : முதலில் எனக்குள் நான் ஒரு தைரியத்தை வரவழைத்துக் கொண்டேன். நல்ல காரியங்களைச் செய்கின்றேன் என்ற பார்வையில் எனது குடும்பமும், சமுதாயமும் படிப்படியாக என்னை ஏற்றுக்கொண்டது. அதாவது, சிறந்த சமூக சேவகி, நிர்வாகி, ஊக்கமளிப்பவள் என்பதோடு வீட்டு நிர்வாகம் மற்றும் குடும்பப் பொறுப்புகளைக் கவனித்துக்கொள்வது, ஆடு மாடுகள் மற்றும் கழனிகளைப் பார்த்துக்கொள்வது என பல வேலைகளைச் செய்பவள் என்கிற ரீதியில் என்னை ஏற்றுக்கொண்டனர். நான் வெளியில் வேலைக்குச் சென்றாலும், எனது குடும்பத்திற்கான எனது கடமைகளைத் தொடர்ந்து செய்து வந்தேன், அது ஒரு நல்ல விஷயமாகப் பார்க்கப்பட்டது. நான் வெளியில் வேலைக்கு செல்வது ஆரம்பத்தில் எனது கணவருக்குப் பிடிக்கவில்லை, ஆனால் படிப்படியாக அவர் எனக்கு உதவத் தொடங்கினார். ஒரு வேலையை நான் வெற்றிகரமாக செய்து முடிக்கும்போது, மேலும், சில வேலைகளைக் கூடுதலாக எடுத்துக் கொள்வதற்கான ஊக்கத்தை அது எனக்குள் ஏற்படுத்தியது. அப்படித்தான் எனது பணி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

**மாலின்: உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட இதர விஷயங்களினால் விவசாயம் செய்யும் பெண்கள் சந்திக்கும் பிச்சனைகள் என்னென்ன?**

நானு: பழங்கால வழக்கத்தின்படி, குடும்பத்திலுள்ள அனைவரும் சாப்பிட்ட பிறகுதான் பெண்கள் சாப்பிடுகின்றனர். அப்படியிருக்கும்போது, சமைத்த உணவு தீர்ந்துவிட்டால் பெண்கள் சிலநேரம் பட்டினி கிடக்கின்றனர். சத்தான உணவிற்காக வெளியில் எங்கும் போகத் தேவையில்லை, நம்முடைய சொந்த சமையலறையிலேயே அவைகள் எல்லாம் இருக்கின்றன எனப் பெண்கள் கருதுகின்றனர். நம் பகுதியில் கிடைக்கக் கூடிய உணவு வகைகளான, தானியங்கள், பால், இறைச்சி மற்றும் காய்கறிகளை உணவாக எடுத்துக்கொள்ள முடிந்தால், அதுவே நமது உடலில் ஊட்டச்சத்துத் தேவைக்குப் போதுமானதாக இருக்கும். குறிப்பாக பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் வாலிபப் பெண்களின் ஊட்டச்சத்துத் தேவைக்கு மேற்சொன்ன உணவுகளே போதுமானது. இன்றைக்கு பல விஷயங்கள் மாறியுள்ளன. எங்களிடம் தற்போது 21 குழுக்கள் உள்ளன. இக்குழுக்களின் மூலமாக ஊட்டச்சத்து, ஆரோக்கியம், சுகாதார வழிமுறைகள் பற்றிய தகவல்கள் பெண்களுக்குக் கிடைக்கின்றன. அரசு அமைப்பிலுள்ள நிபுணர்களை வரவழைத்து ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்துத் தொடர்பான விஷயங்கள் குறித்து எங்கள் குழுவிலுள்ள பெண்கள் மத்தியில் பேச வைக்கிறோம். பெண்களுக்கான சுய வருமானம் ஈட்டும் திட்டத்தின் மூலமாக பால், காய்கறிகள் மற்றும் மக்காசோளம் முதலியவற்றை விற்பனை செய்கிறோம். அதனால் தற்போது, பெண்கள் மத்தியில் ஊட்டச்சத்துக் குறித்த விழிப்புணர்வும் வெளி உலக அனுபவமும் நன்றாகவே உள்ளது.

**மாலின்: பொதுவாக, சாதாரண சமயங்களில் பெண்கள் உட்கொள்ளும் உணவிற்கும் கர்ப்பமாக இருக்கும்போது எடுத்துக்கொள்ளும் உணவிற்கும்**

**ஏதேனும் வித்தியாசம் இருக்கிறதா? கர்ப்பிணிகளுக்கு உணவுக் கட்டுப்பாடுகள் ஏதும் உண்டா? முந்தைய காலத்திற்கும். இன்றைக்கும் கர்ப்பிணிப் பெண்கள் எடுத்துக் கொள்ளும் உணவுகளில் ஏதேனும் வேறுபாடு உண்டா?**

நானு : ஆம் நிறைய மாற்றங்கள் இருக்கின்றன. முன்பு, கர்ப்பிணிகளுக்கான சிறப்பு ஊட்டச்சத்துத் தேவைகள் குறித்த விழிப்புணர்வு மிகவும் குறைவாக இருந்தது. கர்ப்பமாக இருக்கும் பெண் அதிக அளவு உணவு எடுத்துக்கொண்டால், வயிற்றில் குழந்தை பெரியதாக வளர்ந்து பிரசவம் மிகவும் கஷ்டமாக இருக்கும் என்ற தவறான கருத்து நிலவியது. ஆனால் தற்போது பெண்கள் கர்ப்பம் மற்றும் பேறுகாலச் சேவைக்குச் செல்கின்றனர். அப்போது கர்ப்பம் மற்றும் உணவு உட்கொள்ளுதல் தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்கள் அவர்களுக்குக் கிடைக்கிறது. மேலும், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் மற்றும் காசநோய் போன்ற தொற்றுக்களிலிருந்து தடுத்துக் கொள்வதற்கானத் தடுப்பூசிகளையும் போட்டுக்கொள்கின்றனர். கிராமங்களில் சுகாதாரத் தன்னார்வலர்களாக சில பெண்கள் உள்ளனர். அவர்கள் மூலம் மகப்பேறு மற்றும் குழந்தை நலன் குறித்த தகவல்கள் பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

**மாலின் : உங்கள் கிராமத்திற்கு அருகாமையிலுள்ள மகப்பேறு மருத்துவமையம் எவ்வளவு தொலைவில் உள்ளது? பிரசவம் வீட்டில் நடக்கிறதா? அல்லது மருத்துவமனைகளிலா?**

நானு: எங்கள் ஊருக்கு அருகாமையிலுள்ள கர்ப்பகாலப் பரிசோதனை மையத்திற்குச் செல்ல நடந்து சென்றால் அரைமணி நேரமாகும். ஆனால் பிரசவம் பார்ப்பதற்குத் தேவையான வசதிகள் அங்கு இல்லை. பிரசவத்திற்கு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்றால் மூன்று மணி நேரமாகும். (பாதி தூரம் நடந்தும் மீதித் தொலைவிற்குக் காரிலும் செல்ல வேண்டும்) மேலும் பிரசவத்திற்காகும் செலவுகள் அதிகம் (போக்குவரத்து மற்றும் மருத்துவச்செலவுகள்) எனவே வீட்டிலேயே பிரசவம் பார்த்துக்கொள்ள பெண்கள் விரும்புகின்றனர். பிரசவத்திற்காகும் மருத்துவச் செலவுகளை மிச்சப்படுத்தினால் அப்பணத்தை உணவிற்காக செலவு செய்யலாம் எனவும் பெண்கள் கருதுகின்றனர். இந்நிலையில் கிராமத்திலுள்ள தன்னார்வலர்கள், பிரசவ வலி 24 மணி நேரத்திற்கு மேல் நீடித்தால் அப்பெண்ணை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற தகவல்களைக் கொடுத்து வருகின்றனர்.

**மாலின்: பேறுகாலத்தில் சிக்கல்கள், உடல் நலக் கோளாறுகள் மற்றும் மரணங்கள் ஏதேனும் நிகழ்கின்றதா, கர்ப்பமாக இருக்கும்போது கழனியில் விவசாய வேலைகள் செய்வதில் ஏதேனும் சிரமங்கள் இருக்கின்றனவா?**

நானு: ஆம், அது போன்ற சம்பவங்கள் சில உண்டு. ஆனால் முன்பிருந்ததைவிட, தற்போது அவற்றின் அளவு குறைந்துள்ளது. குழந்தை பிறந்த பிறகு நஞ்சு தங்கிக் கொள்வதால் இதுபோன்ற பிரச்சனைகள் ஏற்படுகிறது. பொதுவாகவே பெண்கள் தங்களுக்கு ஏதேனும் ஒரு பிரச்சனை என்றால் மட்டுமே மருத்துவமனைக்குச் செல்கின்றனர். மருத்துவ உதவியை நாடும் பழக்கம் எங்கள் பகுதியிலுள்ள பெண்களிடம் மிகவும் குறைவு.

**மாலின்: இரண்டு குழந்தைகள் பெற்றுக் கொள்வது என்பதுதான் உங்கள் சமூகத்தில் வழக்கமா? எத்தனை குழந்தைகள் பெற்றுக்கொள்வது என்ற உரிமையும் அதை நடைமுறைப்படுத்தவும் அவர்களால் முடிகிறது என நீங்கள் கருதுகின்றீர்களா?**

நானு: நாங்கள் ஏழைகள். அதிக குழந்தைகள் பெற்றுக்கொண்டால், அவைகள் அனைத்தையும் படிக்கவைப்பது மற்றும் கவனித்துக் கொள்வது என்பது மிகவும் கடினமாக இருக்கும். குறைவான குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதுதான் நல்லது, என்ற விஷயம் வெளியுலக அனுபவம் கிடைத்தபோதுதான் எனக்கே புரிந்தது.

**மாலின்: உங்களுக்கும், உங்கள் கிராமத்திலுள்ள மற்ற பெண்களுக்கும் கருத்தடை சாதனங்கள் எளிதில் கிடைக்கின்றதா?**

நானு: பொதுவாக கருத்தடை என்பது பெண்களுடைய பொறுப்பு என ஆண்கள் கருதுகின்றனர். எனவே கருத்தடையைப் உபயோகிப்பது என்ற சுமை முழுவதும் பெண்கள்மேல்தான் விழுகிறது. ஹார்மோன்

மாத்திரைகள் எளிதில் கிடைக்கின்றன. அதனால், பெண்கள் மருத்துவமனைக்குச் சென்று நார்பிளாண்ட் ஐ பொருத்திக் கொள்கின்றனர். மற்றவர்களுக்குத் தெரியாமல் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற ரீதியில் பெண்கள் நார்பிளாண்ட் ஐ விரும்புகின்றனர்.

**மாலின்:பட்டினியை ஒழிப்பது மற்றும் உணவுப் பாதுகாப்பை எடுத்துரைப்பதற்கு பெண்கள் சிறந்த ஆயுதமாக இருக்கின்றனர் என்று கடந்த மூன்று நாட்களாக நடைபெறும் மாநாட்டில் பேசப்பட்டது. அது பற்றிய தங்களின் கருத்து என்ன?**

நானு: நான் அக்கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். வீட்டில் உணவு நிர்வாகம் மற்றும் உணவு வழங்குதல் என்ற பொறுப்பு பெண்களிடம் தான் இருக்கிறது.

**மாலின்: ஒரு பெண் தலைவி என்கிற ரீதியில் நீங்கள் பெருமைப்பட்ட மற்றும் உங்களின் சாதனைகள் என்ன? உங்கள் அமைப்பின் சாதனைகள் என்ன?**

நானு : ஒரு சமூக செயல்பாட்டாளர் மற்றும் தலைவி என்கிற ரீதியில் 'நானு' என்ற என்னை எல்லோருக்கும் தெரிகிறது. அது எனக்கு மிகுந்த திருப்தியைக் கொடுக்கிறது. என் ஆலோசனையை மற்றவர்கள் கேட்கும்போது, என் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் மத்தியில் மாற்றத்தைக் காணும்போதும் நான் மிகவும் பெருமைப்பட்டிருக்கிறேன். ஹிமாவாண்டி பணியின் காரணமாகச் சமுதாயத்தில் நல்ல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. பெண்கள் தங்களிடமுள்ள தனித்திறமைகளை உணர்ந்துள்ளனர். மேலும் தங்களால் எதையும் செய்யமுடியும் என நம்புகின்றனர். பொருளாதர ரீதியாக பெண்கள் அதிகாரம் பெற்றுள்ளனர். சமுதாயத்தில் தங்களுக்கு ஏதும் அநீதி நடந்தால், அதை எதிர்த்துக் குரல் கொடுக்க அவர்கள் பயப்படுவதில்லை.

**மாலின்: உங்கள் அரசாங்கத்திடம் நீங்கள் கேட்க விரும்புவது என்ன?**

நானு: விவசாயத்திற்கு என்ன நிதி ஒதுக்கீடு செய்தாலும், அதில் விவசாயம் செய்யக்கூடிய பெண்களைக் கணக்கில் கொள்ள வேண்டும். மேலும், அது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும். ஒதுக்கப்படும் நிதி அவர்களுக்கு நேரடியாக சென்று சேர வேண்டும். திறன் வளர்ப்பு குறித்த பயிற்சிகள் இப்பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும். அப்பயிற்சிகளில் உணவு நிர்வாகம் பற்றி மட்டும் சொல்லித்தராமல் உணவிலுள்ள சத்துக்கள் குறையாமல் சமைப்பது எப்படி என்ற வழிமுறைகளையும் கற்றுத் தர வேண்டும்.

**மாலின்: ஒருங்கிணைந்து செயல்பட விருப்பமுள்ள விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு உங்களின் அறிவுரை என்ன?**

நானு: மாற்றம் என்பது சுயமாக நம்மிடமிருந்து துவங்க வேண்டும். பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரும்போதுதான் மாற்றங்கள் நிகழும்.

இந்த உரையாடலில் நானுகதானி நேபாள மொழியில் தெரிவித்த கருத்துக்களை ஆங்கிலத்துக்கு மொழிபெயர்ப்பு செய்ய உதவியவர் கோப்பிலா தபா, இவர் தாய்லாந்திலுள்ள ஆசியன் இஸ்சிட்டியுட் ஆப் டெக்னாலஜீ என்ற மையத்திலுள்ள ஆண்-பெண் சமத்துவம் மற்றும் முன்னேற்ற அறிவியல் துறையில் பணியாற்றுகிறார். நானு, காதனியை nhimawanti@gmail.com என்ற மின்அஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.

மாற்றத்திற்காகச் செயல்படும் arrow
vol. 20 no. 1 2014
(Translated 2014)



# மண்டல மற்றும் நாடுகள் அளவில் நடைபெறும் செயல்பாடுகளைக் கண்காணித்தல்

## பாலியல், இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளுக்காக பயணிக்கும் பத்திரிகை:

உலகின் தென் பகுதியிலுள்ள கிராமப் பெண்கள், தங்களின் உரிமைகளைக் குறிப்பாக, அவர்களின் பாலியல், இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளை (SRHR) மேம்படுத்திக் கொள்வதற்காக ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆசிய-பசிபிக் பகுதியிலுள்ள அவர்கள் தங்களைத் தாங்களே வலிமைப்படுத்திக்கொள்வது என்பதன் ஒரு முயற்சியாக தங்களது வாழ்வின் எதார்த்தங்களை ஆவணப் படுத்துகிறார்கள். இந்த முயற்சியானது அவர்களின் தற்போதைய சூழ்நிலையை மாற்றுவதற்கும், அதன் மூலம் 2015-க்கு பிறகு வரவிருக்கும் வளர்ச்சித் திட்டங்களில், SRHR என்பது மிகவும் முக்கியமான ஒரு விஷயமாக இடம்பெற வேண்டும் என்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவும் இது உதவும் என நம்பப்படுகிறது.

சென்ற வருடம், ஆசிய கிராமப் பெண்கள் கூட்டமைப்பானது (Asian Rural Women's Coalition-ARWC) கிராமப் பெண்களின் பயணப்பத்திரிகை என்ற ஒரு புதிய திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது.[1] அதன் தொடர்ச்சியாக ஏ.ஆர்.டபுள்யு.சி (ARWC) -யுடன் ஆரோ (ARROW) நிறுவனம் இணைந்து இரண்டாவது பயணப் பத்திரிகைத் திட்டத்தை இவ்வருடம் துவக்கியுள்ளது. ஆசிய-பசிபிக் கண்டத்திலுள்ள "கிராமப் பெண்களின் பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளை மேம்படுத்துவதற்கு - நமது உண்மைக் கதைகள் ஒரு பயணம்" என்பது இத்திட்டத்தின் தலைப்பாகும்.

2014 ஆம் ஆண்டின் துவக்கத்தில் இந்த பயணப் பத்திரிகைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப் பெண்களின் வறுமை நிலைகளை எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல், வள ஆதாரங்கள் மீது பெண்களுக்கு உரிமையில்லாதது, உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பின்மையால் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகள், மேலும் அது எவ்வாறு அவர்களின் பாலியல், இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளைப் பாதிக்கிறது என்ற பல விஷயங்கள் இக்கட்டுரையில் வெளிவரும் என நம்பப்படுகிறது. மேற்சொன்ன பல பிரச்சனைகளுக்கு இடையேயுள்ள தொடர்புகளையும், இந்தக் கதைகள் வெளிச்சத்திற்குக் கொண்டு வரும். மேலும், அவை, உணவிற்கான உரிமை மற்றும் அதிகாரத்திற்காகப் பாடுபடும் அதே வேளையில், பெண்களின் முக்கியப் பிரச்சனையான தங்களின் உடல்மேல் தங்களுக்கு அதிகாரமில்லாதது என்பது குறித்தும் போராடுவதற்குத் தேவையான ஆதாரங்களையும் இவ்விதழ் வழங்கும்.

இந்த பயணப்பத்திரிகை, இதுவரை ஏழு நாடுகளுக்குச் சென்று வந்துள்ளது.[2] வரும் செப்டம்பர் மாதத்திற்குள் மேலும், பத்து நாடுகளுக்குப் பயணிக்கவுள்ளது.[3] இப்பயணத்தின்போது SRHR-க்கும், வறுமை ஊட்டச்சத்து மற்றும் உணவிற்கான அதிகாரம், குடும்பங்களில் கிராமங்களில் மற்றும் அமைப்புகளில் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகளைச் சேகரிக்கும். 2015-க்கு பிந்தைய வளர்ச்சித்திட்டப் பணிகளில், இடம்பெற வேண்டிய விஷயங்கள் குறித்து நடைபெற்றுவரும் விவாதங்களில், SRHR உடன் மற்ற விஷயங்களை எப்படி ஒன்றிணைக்க வேண்டும் என்பது குறித்த கண்ணோட்டங்களும் இக்கதைகளில் இடம் பெறும்.

லிலீயன் ஃபால்யோவிற்கு 37 வயதாகிறது. இவர் பிலிப்பைன்ஸ் நாட்டின் வட பகுதியிலுள்ள பெண்குயிட் மாகாணத்திலுள்ள ஒரு சுரங்கப் பணியாளர்களின் தலைவியாவார். சுரங்கப் பகுதியிலுள்ள தொகுப்புக் குடியிருப்புக்களின் மோசமான வாழ்க்கைச்

ஆதாரக் குறிப்புகள்

1 "நமது கதைகள் ஒரு பயணம்: ஆசியாவிலுள்ள கிராமப் பெண்களைப் பலப்படுத்துவதற்கு" என்ற இத்திட்டம் மார்ச் முதல் அக்டோபர் 2013 வரை நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆசியக் கண்டத்திலுள்ள எட்டு நாடுகளிலிருந்து 8 பெண் எழுத்தாளர்கள் இதில் பங்குபெற்றனர். வீடு, தோட்டம் மற்றும் சமூகம் எனப் பல இடங்களிலில் இப்பெண்கள் தாங்கள் தினசரி செய்துவரும் பணிகளை, பாடல்கள், கவிதைகள் வரைபடம், புகைப்படங்கள் வாயிலாக பதிவு செய்தனர். இதில் உணவுப் பாதுகாப்பு, நிலையான விவசாயம், மற்றும் பொருளாதார வளர்ச்சி குறித்த கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

2 பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, தாய்லாந்து, லாவோஸ், வியட்நாம், ஸ்ரீலங்கா மற்றும் நேபாளம்

3 மங்கோலியா, மலேசியா, பர்மா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலத்தீவு, பெனின், மாலி மற்றும் சினேகல்

சூழல்களை, இப்பயண இதழில் அவர் எழுதியுள்ளார். இக்குடியிருப்புகளில் பாலியல் பலாத்காரம் மற்றும் மனைவியை மாற்றிக்கொள்வது என்பது சாதாரண நிகழ்வாக இருக்கிறது. உணவுப் பற்றாக்குறை,போதிய சமூக சேவைகள் இல்லாதது மற்றும் மன அழுத்தம் போன்ற பல்வேறு காரணங்களினால் உடல் நொடிந்து, ஆரோக்கியமற்ற நிலையில் அவர் இருந்தாலும், லிலீயன் தனது பெரும்பாலான நேரத்தைச் சமுதாய விழிப்புணர்வுப் பணிக்காகச் செலவிடுகிறார். பெண்களின் உரிமைகளுக்குப் போராடுவது, பணியாளர்களின் நலன் மற்றும் சுரங்கங்களை மேலும் விரிவுபடுத்துவதை எதிர்ப்பது என்பது குறித்து மக்களுக்கு அவர் விழிப்புணர்வுக் கல்வியளித்து வருகிறார். “நமக்குள்ளே தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு தேவை இருக்கிறது, பாதையில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் எளிதில் மறைந்து போய்விடாது. நாம் செயலில் இறங்கவில்லையென்றால், நமக்காக யார் செயல்படுவார்! என்று பயண இதழில் லிலீயன் எழுதியுள்ளார்.

பயண இதழ் தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு இரண்டாவதாக வீனா என்பவரைச் சென்றடைந்தது. இவர் இந்தோனேஷியாவில் கிழக்கு ஜாவா பகுதியிலுள்ள பாண்டோ வோஸோ மாகாணத்தைச் சார்ந்த ஒரு மேல்நிலைப் பள்ளி மாணவி. குழந்தைத் திருமணத்திற்கு எதிரான தனது சொந்தப் போராட்டத்தை இப்பயணப் பத்திரிகையில் பகிர்ந்து கொண்டுள்ளார். அவருடைய சமூகத்தைச் சார்ந்த பெண்கள் பலரும் வீனாவின் போராட்டத்திற்கு உதவியுள்ளனர். SRHR கல்வியைக் கொண்டு வருவது, குழந்தைத் திருமணத்தைத் தடை செய்வது மற்றும் நிலையான வாழ்வாதார உரிமைகளை உறுதிப்படுத்துவது என்ற பணிகளுக்காக அவர் பாடுபடுகிறார்.

மூன்றாவதாக, இப்பயண இதழ் தாய்லாந்து நாட்டின் டாக் மாகாணத்திலுள்ள முப்பது வயதான மாயீ என்பவரைச் சென்றடைந்தது. மாயீ பர்மாவிலிருந்து இடம்பெயர்ந்தவர். அவள் ஆடை தயாரிப்புத் தொழிற்சாலையில் ஒன்றில் பணிபுரிந்தார். அவர் கர்ப்பமடைந்தபோது கர்ப்பகாலச் சேவைக்காக மருத்துவரைப் பார்க்கச் செல்வதற்கு அவளது முதலாளி அனுமதி மறுத்துவிட்டார். பெரும்பாலான ஆடைத் தயாரிப்புத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் கர்ப்பமடையும் போது அவர்களை நிர்வாகத்தினர் உடனே வேலையிலிருந்து நிறுத்தி விடுகின்றனர். இது தாய்லாந்தின் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்திற்குப் புறம்பானதாகும். மற்றவர்களைப் போலில்லாமல் மாயீ தைரியமாகத் தனது இனப்பெருக்க உரிமைக்காக ஒரு மருத்துவரைப் போய்ப் பார்த்து வந்த பிறகும், தனது வேலையைத் தக்க வைத்துக் கொண்டார். ஆனால் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு கால விடுப்பு மறுக்கப்பட்டது மற்றும் பெண்களுக்கு எதிரான சில நடவடிக்கைகளினால் மனமுடைந்து மாயீ தனது வேலையைக் கர்ப்பமாக இருக்கும்போதே விட்டுவிட்டார்.

மாயீ தற்போது யாயுங் தை ஒ (Yaung chi Oo) பணியாளர்களுக்கான அமைப்பில் வேலை செய்கிறார். அந்த அமைப்பு சட்டத்திற்குப் புறம்பாக பணி நீக்கம் செய்யப்பட்டப் பெண்கள் அல்லது அவசரகால உதவி தேவைப்படும் பெண்களுக்கு ஒரு பாதுகாப்பு இல்லத்தை நடத்துகிறது. வெளிநாட்டிலிருந்து தாய்லாந்துக்கு இடம் பெயர்ந்து பாலியல் பலாத்காரத்திற்கு ஆளான பெண்களை எப்படி கவனித்துக் கொள்வது, மேலும், கருத்தடை முறைகள் அறிந்திடாத மற்றும் மருத்துவச் சேவைகள் எங்கு கிடைக்கிறது என்பது குறித்து தெரியாத பெண்களுக்கு எப்படி உதவுவது என்பதற்குத் தனது சொந்த அனுபவம் உதவியாக இருந்தது என எழுதியுள்ளார்.

இந்த உண்மைக் கதைகள் மற்றும் அதை எழுதிய எல்லாப் பெண்களைப் பற்றிய ஒரு வீடியோ ஆவணத்துடன் பிரச்சார உபகரணங்கள் சேர்க்கப்பட்டு, ஆரோ மற்றும் ஏ.ஆர்.டபிள்யூ.சி. அமைப்புகளின் கொள்கை மாற்றத்திற்கான ஒரு செயலாக சர்வதேச கிராமப் பெண்கள் தினம் மற்றும் ஆரோவில் ஆண்டுவிழாவில் வெளியிடப்படும்.

இத்திட்டத்தைப் பற்றிய மேலும் விவரங்களுக்கு http://travellingjournal.asianruralwomen.net/srhr/

*ஆசிரியர்:* **ஜாஸ்மின்டா லுமாங்,** (Jazminda Lumang) *ஒருங்கிணைப்பாளர், பயணப் பத்திரிகை, ஏ.ஆர்.டபிள்யூ.சி.*
*மின் அஞ்சல் :* jaz.arwc@gmail.com

# ஆசியப் பெண் விவசாயிகளின் மனம் திறந்த பேச்சு

ஆசியக் கண்டத்திலுள்ள விவசாயிகளின் எண்ணிக்கையில் 40 லிருந்து 50 சதவீதத்தினர் கிராமப் பெண்களாகும்.[1] இருப்பினும் அவர்களுக்கு விவசாயம் செய்யத் தேவைப்படும் அடிப்படை வளங்களான நீர், நிலம், காடுகள் மற்றும் விதைகள் மீதான உரிமைகள் மறுக்கப்படுகிறது. மேலும், சர்வதேச சந்தையில் நிலவும் நியாயமற்ற போட்டி, விவசாயப் பொருட்கள் விலையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் உற்பத்திக்கான செலவுகள் அதிகமாக இருப்பது, நிலங்களைப் பெரு முதலாளிகள் அபகரித்துக் கொள்ளுதல், விதைகள் கிடைக்காதது மற்றும் காலநிலை மாற்றம் போன்ற எண்ணற்ற 8 பிரச்சனைகளையும் அவர்கள் சந்திக்க நேரிடுகிறது.

பெண் விவசாயிகள் இரட்டிப்பு சுமையைச் சுமக்கின்றனர். ஒன்று உணவு உற்பத்திக்காக விவசாய வேலை, இரண்டாவதாக வீட்டு வேலைகள் செய்வது குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பது, போன்ற இனப்பெருக்கம் தொடர்பான வேலைகளாகும். நாற்று நடுவது, அறுவடை செய்தல், தானியங்களைப் பதப்படுத்திப் பாதுகாப்பது மற்றும் இரசாயன உரங்கள் தூவுவது போன்ற பெரும்பாலான வேலைகளைப் பெண்கள்தான் செய்கின்றனர். இவ்வனைத்து வேலைகளுக்கும் மிகுந்த உடலுழைப்பும் அதிக ஆட்களும் தேவைப்படுகிறது. மேலும், இக்கடின வேலைகளினால் பெண்கள் சில குறிப்பிட்ட உடல்நலப் பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர்.

மேற்சொன்ன பல சவால்களின் விளைவாக, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்வாதாரத்திற்கான வாய்ப்பு குறைந்து விடுவது, குறைந்த வருமானம், அதிகப்படியான வேலைப்பளு, உணவிற்கு உத்திரவாதமின்மை மற்றும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுத்து பெண்களின் ஆரோக்கியத்தை (பாலியல், இனப்பெருக்க நலம் உட்பட) நலிவடையச் செய்கிறது.

பூச்சி மருந்துகளின் செயல் பாடுகளுக்கெதிரான ஆசிய-பசிபிக் கூட்டமைப்பு (Pesticide Action Network Asia Pacific - PANAP) ஆசிய கிராமப் பெண்களின் கூட்டமைப்பு (Asian Rural Women's Coalition) மற்றும் ஆக்ஸ்பாம் அமைப்பின் (GROW) பிரச்சாரப் பிரிவு ஆகிய மூன்று அமைப்புகள் ஒன்றிணைந்து பயணப் பத்திரிகை என்ற ஒரு புதிய திட்டத்தை 2013 ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் தேதி அறிமுகப்படுத்தியது. "ஆசியாவிலுள்ள கிராமப் பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கு - நமது உண்மைக் கதைகள் ஒரு பயணம்"[2] என்பது அப்பயண இதழின் தலைப்பாகும். கிராமப் பெண் விவசாயிகளின் உரிமைகளைப் பலப்படுத்துவதற்கு அவர்கள் வாழ்வின் எதார்த்தங்களையும், கருத்துக்களையும் ஆவணப்படுத்துவது என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, சீனா, கம்போடியா, இந்தியா, இலங்கை, மலேசியா மற்றும் வியட்நாம் என எட்டு நாடுகளுக்கு இந்தப் பயணப் பத்திரிகை சென்று வந்துள்ளது. பத்து நாட்களில் எட்டுப் பெண்கள் தங்களின் தினசரி அனுபவங்களை இந்த பத்திரிகையில் எழுதியுள்ளனர்.

இப்பெண்கள் தங்களின் தினசரி வேலைகளையும் சமூக வாழ்க்கை, சமுதாயத்தில் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை எப்படி அவர்கள் ஒருங்கிணைந்து சமாளிக்கின்றனர் என்ற விவரங்களையும் இவ்விதழில் எழுதியுள்ளனர். கட்டுரை, கவிதைகள், ஓவியங்கள் புகைப்படங்கள் மற்றும் பாடல்கள் எனப் பல வகைகளில் அவர்களின் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

அவர்கள் கொடுக்கும் தகவல் மிகவும் எளிமையானதாக இருந்தாலும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. அது விவசாயம் என்பது அனைவருக்கும் சமமான நியாயமான மற்றும் நிலைப்புத்தன்மை கொண்ட ஒரு அமைப்பாக மாறுவதற்கு இட்டுச் செல்லும். அந்த எட்டு உண்மைக் கதைகளில், இரண்டின் சுருக்கம் பின்வருமாறு:

சூர்யாதி என்ற பெண்ணிற்கு 36 வயதாகிறது. இவர் இந்தோனேஷியாவின் பான்டங் மாநகருக்கு அருகிலுள்ள பங்கலென்கன

## ஆதாரக் குறிப்புகள்

1 Food and Agricultural Organisation (FAO). (2014). *The State of Food and Agriculture in Asia and the Pacific 2014.* Bangkok: FAO Regional Office for Asia and the Pacific. www.fao.org/docrep/019/i3625e/i3625e.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

2 ஆசியக் கிராமப் பெண்களின் பயணப் பத்திரிக்கை என்ற இச்செய்தி மடல் குறித்த மேலும் விவரங்கள் மற்றும் அதில் இடம்பெற்றுள்ள கதைகளைப் படிக்க: http://travellingjournal.asianruralwomen.net/ என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

ஆதாரக் குறிப்புகள்

மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஒரு சமூகத் தலைவரும் மற்றும் விவசாயியுமான இவர் சிருணி (Seruni) என்ற அமைப்பில் எட்டு ஆண்டுகளாக உறுப்பினராக இருக்கிறார். நிலவுரிமைகளுக்கான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார். ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த இவர் சமுதாயத்தில் பெண்கள் செய்யும் பலவிதமான பணிகளையும் அதன் முக்கியத்துவத்தையும் நன்கு உணர்ந்துள்ளார். பெண்களின் பணி கிணற்றடி, படுக்கை மற்றும் சமையலறையில் மட்டுமில்லாமல் ஓர் அமைப்பை உருவாக்கவும் மற்றும் அதில் சரிவை ஏற்படுத்துவதற்குமான உறுதியும் அவர்களிடம் உள்ளது, என கிராமப் பெண்களின் தினசரிப் போராட்டங்களைத் தனது கட்டுரையில் எழுதியுள்ளார். மக்கள் விரோத போக்கை/செயலைக் கண்டித்து. எழுந்திரு, கைகளை ஒன்றிணைத்து போராடப் புறப்படு என சூர்யாதி எழுதியுள்ளார்.

சீனாவைச் சேர்ந்த லீசிகென்க்கு என்ற இப்பெண்ணிற்கு 50 வயதாகிறது. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளின் பயன்பாட்டைக் குறைப்பதற்காக இவர் போராடி வருகிறார். காய்கறிகளில் பூச்சி மருந்துகள் பயன்படுத்தப்படுகிறது என்றும் கர்ப்பிணிகள் பூச்சி மருந்துகளைத் தெளிப்பது மற்றும் மருந்து பயன் படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை அவசியம் தவிர்க்க வேண்டும் எனவும் அவர் எழுதியுள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச அளவில் கொள்கைகளை உருவாக்குபவர்களுக்கு இப்பெண்களின் குரல் கேட்கச் செய்வதன் பொருட்டு 2013 ஆம் ஆண்டு அக்டோபர் 7 முதல் 16 ஆம் தேதிவரை ரோம் நாட்டில் நடைபெற்ற உணவு மற்றும் விவசாய அமைப்பினுடைய (Food and Agricultural Organisation - FAO) உணவுப் பாதுகாப்புக் குழுவின் 40ஆவது கூட்டத்தில் இப்பயண இதழ் பகிர்ந்து கொள்ளப்பட்டது மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பில் சிறு விவசாயிகளின் பங்கு குறித்தும் இக்கூட்டத்தில் மேலும், விரிவாக விவாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சர்வதேச கிராமப் பெண்கள் தினம் (அக்டோபர் -15 மற்றும் உலக உணவு தினம் (அக்டோபர்-16) நிகழ்ச்சிகளில் இக்கருத்தை மையப்படுத்தி ஒருங்கிணைந்த செயல்பாடுகளைப் பல நாடுகளில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளும் இக்கூட்டத்தில் வெளிவந்தது.

**பெண்களின் பணி கிணற்றடி, படுக்கை மற்றும் சமையலறையில் மட்டுமில்லாமல் ஓர் அமைப்பை உருவாக்கவும் மற்றும் அதில் சரிவை ஏற்படுத்துவதற்குமான உறுதியும் அவர்களிடம் உள்ளது, எனக் கூறுகின்றார்.**

இப்பயண இதழ் தனது முதல்கட்டப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதைத் தொடர்ந்து அதன் இரண்டாவது கட்டப் பயணத்தைத் தற்போது துவங்கியுள்ளது. இச்சுற்றில், ஆசிய மற்றும் ஆப்பிரிக்கப் பகுதியிலுள்ள பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, தாய்லாந்து, லாவோஸ், வியட்நாம், இலங்கை, நேபாளம், மங்கோலியா, மலேசியா, பர்மா, இந்தியா, பாகிஸ்தான், மாலத்தீவுகள், சினேகல், பெனின் மற்றும் மாலி ஆகிய 17 நாடுகளுக்குச் செல்லவுள்ளது. ஏ.ஆர்.டபுள்யூ.சி (ARWC) மற்றும் ஆசிய-பசிபிக் ரிசோர்ஸ் அண்டு ரிசர்ச் சென்டர் பார் வுமன் - ஆரோ (Asian Pacific Resource and Research Centre for Women) நிறுவனமும் இணைந்து இந்த இதழின் இரண்டாவது கட்டப் பயணத்தை நடைமுறைப்படுத்துகிறது. கிராமப் பெண்களின் பாலியல், இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் குறித்த தகவல்களை இப்பயண இவ்விதழ் சேகரிக்கின்றது.

கட்டுரை ஆசிரியர்: **மர்ஜே பஸ்டே**, (Marjo Busto) பூச்சி மருந்துகளின் செயல்பாடுகளுக்கு எதிரான ஆசிய பசிபிக் கூட்டமைப்பு (PAN AP) மற்றும் ஆசிய கிராமப் பெண்களின் கூட்டமைப்பின் (ARWC) தலைமைச் செயலகம்,
மின் அஞ்சல் : marjo.busto@panap.net மற்றும் secretariat@asianruralwomen.net

# ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் இரத்தசோகையைத் தடுப்பதற்கான எளிய வழிமுறைகள் - இந்தியாவிலிருந்து ஓர் அனுபவம்

2013 ஆம் ஆண்டு உலகளவில் 2,89,000 மகப்பேறு மரணங்கள் நிகழ்ந்துள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த இறப்பில் மூன்றில் ஒருபங்கு இந்தியா மற்றும் நைஜீரியாவில் நடந்துள்ளது. அதாவது மொத்த மகப்பேறு மரணத்தில் 17% இந்தியாவிலும் (50 ஆயிரம்) 14% நைஜீரியாவிலும் (40 ஆயிரம்)[1] நிகழ்ந்துள்ளது. உலகளவில் அதிலும் குறிப்பாக, தெற்காசியாவில், மகப்பேறு மரணத்திற்கு முக்கியக் காரணமாக இருப்பது பிரசவத்தின்போது ஏற்படும் இரத்தப்போக்காகும். இந்நிலையில் பேறுகாலத்தில் காணப்படும் இரத்தசோகை, மகப்பேறு மரணங்களுக்கு முக்கியமான மறைமுகக் காரணமாக இருப்பதுடன், பெண்கள் வாழ்நாள் முழுவதும் நோயினால் அவதியுறுவதற்கும் இது வழிவகுக்கிறது.

இரத்தசோகையின் பல வகைகளில், ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஏற்படக்கூடிய இரத்தசோகை என்பதுதான் மிகவும் பரவலாகக் காணப்படக்கூடிய ஒன்றாகும். இரும்பு, போலிக் அமிலத்தின் சத்துக்கள் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு மிகவும் அத்தியாவசிய மானதாக இருக்கிறது. இச்சத்துக்கள் குறையும்போது, அதிக இரத்தப்போக்கு, பிரசவகாலச் சிக்கல்கள் மற்றும் இருதயத்தின் செயலிழப்பு போன்ற ஆரோக்கியப் பிரச்சினைகளுக்கும், மரணத்திற்கும்கூட வழிவகுக்கிறது.[2] இந்தியாவில் 15-49 வயதிற்குட்பட்ட பெண்கள் மத்தியில் இரத்தசோகையானது நாள்பட்ட அளவில் காணப்படுகிறது. அதாவது இவ்வயதிலுள்ள பெண்களில் இருவரில் ஒருவர் (56%) இரத்தசோகையினால்[3] பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், கிட்டதட்ட 17% மகப்பேறு மரணங்கள் இதனால் நிகழ்கின்றது.[4]

ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் ஏற்படும் இரத்தசோகையானது இதர வகைகளைப் போலில்லாமல், இரும்புச்சத்து, புரோட்டின் மற்றும் வைட்டமின் C,D அதிகமுள்ள உணவுகளை உட்கொள்வதன் மூலம் சரிசெய்து கொள்ள முடியும். உலகின் பெரும்பாலான பகுதிகளில் இரும்புச்சத்து அதிகமுள்ள உணவுகள் எளிதில் கிடைக்கின்றன. எனவே, இச்சத்துக்கள் அதிகமுள்ள உணவுகளை உட்கொண்டு உடலைப் பலப்படுத்திக் கொள்வது என்பது அடையக்கூடிய ஒரு இலக்காகத்தான் இருக்கிறது. ஆனால் ஊட்டச்சத்துக் குறித்த விழிப்புணர்வின்மை அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய உணவுகளை எடுத்துக் கொள்ளாததும், வறுமை மற்றும் ஆண்-பெண் சமத்துவமின்மை போன்ற அமைப்புரீதியிலான தடைகளினாலும், இந்தியாவில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் இரத்தசோகை என்பது தொடர்ந்து இருந்து வருகிறது.

இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம், இரத்தசோகையைத் தடுப்பதற்காக 1970 ஆம் ஆண்டு தேசிய ஊட்டச்சத்துப் பற்றாக்குறைத் தடுப்புத் திட்டம் என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியது. அதனைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பள்ளி முன்பருவக் குழந்தைகள் மத்தியில் நிலவும் இரத்தசோகையை தடுக்கும் நோக்கில் தேசிய அளவிலான ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்தசோகைத் தடுப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால் அத்திட்டங்களில் பாரம்பரிய உணவுகள் உட்கொள்வது மற்றும் நமது பரம்பரை மருத்துவ முறைகளான ஆயுஷ் (Ayush) (ஆயுர்வேத,[5] யோக, யுனானி,[6] சித்தா[7] மற்றும் ஹோமியோபதி) ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரப்படவில்லை.

குஜராத் மாநிலம் மிக வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டபோதிலும், அதன் சுகாதார மற்றும் ஊட்டச்சத்து நிலை பின்தங்கிய மாநிலங்களில் உள்ளது போன்று மிகவும் மோசமாக இருக்கின்றது. 2001 இல் 172 ஆக இருந்த அம்மாநிலத்தின் மகப்பேறு மரண விகிதம் 2013 இல் 122 ஆகக்

ஆதாரக் குறிப்புகள்

1 World Health Organisation (WHO) et al. (2014). *Trends in maternal mortality: 1990 to 2013; Estimates by WHO, UNICEF, UNFPA, The World Bank and the United Nations Population Division.* Geneva: WHO. http://apps.who.int/iris/bitstream/10665/112682/2/9789241507226_eng.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

2 Thanenthiran, S., Racherla, S.J. & Jahanath, S. (2013). *Reclaiming and redefining rights: ICPD+20: Status of sexual and reproductive health and rights in Asia.* Kuala Lumpur: ARROW. www.arrow.org.my/publications/ICPD+20/ICPD+20_ARROW_AP.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

3 International Institute for Population Sciences (IIPS) & Macro International. (2007). *National Family Health Survey (NFHS-3), 2005-06: India: Volumes I. & II.* Mumbai: IIPS. www.rchiips.org/nfhs/nfhs3_national_report.shtml என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

4 Racherla, S.J. (Ed.). (2009). *Reclaiming and Redefining Rights- Thematic Series 4: Maternal Mortality and Morbidity in Asia.* Kuala Lumpur: ARROW. www.arrow.org.my/publications/ICPD+15Country&ThematicCaseStudies/MaternalMortality&MorbidityinAsia.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

5 ஆயுர்வேதம் என்பது இந்தியத் துணைக்கண்டத்தின் பரம்பரை மருத்துவ முறைகளில் ஒன்று. இது பிரபலமான மாற்று மருத்துவ முறைகளில் ஒன்றாகும்.

6 யுனானி என்பது தேற்காசிய நாடுகளின் பரம்பரை மருத்துவ முறைகளில் ஒன்று. இது பழங்கால கிரேக்க மற்றும் ரோமானிய மருத்துவர நடைமுறையாகும்.

7 சித்தா என்பது தேன்இந்தியாவின் பழங்கால பாரம்பரிய சிகிச்சை முறைகளில் ஒன்று.

குறைந்துள்ளது.[8] ஆனால் இனப்பெருக்க வயதில் உள்ள பெண்களில் பாதிப்பேர் (55%) இரத்தசோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். பி.எம்.ஐ. (Body Mass Index) என்று சொல்லக்கூடிய உயரத்திற்கேற்றவாறு உடல் எடை உள்ளதா என்பதைக் கணக்கிடும் அளவீட்டின்படி, அம்மாநிலத்திலுள்ள பெண்களில் 36.3% பேர் சராசரிக்கும் குறைவான எடையைக் கொண்டுள்ளனர். 21.3% பெண்கள் அதிகமான உடல் எடையுடன் உள்ளனர்.[9]

குஜராத் மாநிலத்தில் நிலவும் இந்த இரத்தசோகையைத் தடுக்க (சென்டர் பார் ஹெல்த் எஜுகேசன், டிரெயினிங் அண்டு நியூட்ரிசன் அவார்னஸ் - சேத்னா (Centre for Health, Education, Training and Nutrition Awareness - CHETNA) மற்றும் அதன் தோழமை அமைப்புகள்[10] ஒன்றிணைந்து 2004-2006 வரையிலான மூன்றாண்டுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் வாயிலாக அந்தந்த பகுதிகளில் விளையும் உணவுப் பொருட்கள் மற்றும் மருத்துவப் பயன்கொண்ட மூலிகைச் செடிகளை தினசரி உணவில் சேர்த்துக் கொள்வதற்கான பழக்கம் மக்கள் மத்தியில் மறு அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்திற்காக, பெண்கள், குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்துக் குறைபாடு, வறுமை மற்றும் ஆரோக்கியப் பிரச்சனைகள் அதிகமுள்ள பகுதிகள் கண்டறியப்பட்டது. அதாவது, அம்மாநிலத்தின் சபர்காதாரன்ட் மேக்சானியன் ஒன்றியத்திலுள்ள 49 கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், பாரம்பரியமாக பிரசவம் பார்ப்பவர்கள் - (தாய்ஸ்). குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் இத்திட்டத்திற்கான இலக்கு மக்களாக கண்டறியப்பட்டனர். மேலும், நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுஸ் (AYUSH) மருத்துவர்கள் இத்திட்டத்திற்கு உதவியுள்ளனர்.

முதல்கட்டமாக இரத்தசோகை என்பது என்ன? அதற்கான காரணங்கள் என்னென்ன? எவ்வளவு பெண்களுக்கு இப்பிரச்சனை உள்ளது மற்றும் அதற்கான சிகிச்சை முறைகள் என்ன என்பது குறித்து பெண்களின் புரிதலைக் கண்டறியும் பொருட்டு, அப்பகுதியில் வசிக்கக்கூடிய 100 பெண்களிடம் நேர்காணல் ஆய்வு நடத்தப்பட்டது. உணவு சரிவர எடுத்துக் கொள்ளாதது, அதிக வேலை மற்றும் மன அழுத்தம் ஆகிய காரணங்களின் விளைவாக ஏற்படக்கூடிய ஒருவகையான சோர்வுதான் இந்த இரத்தசோகை என ஆய்வில் பங்குபெற்ற பெண்கள் கருதினர். ஏழு வகையான தானியங்கள், நான்கு கீரைகள் மற்றும் ஐந்து மூலிகைச் செடிகளையும், இரத்தசோகையைச் சரிசெய்வதற்கான மருந்தாக அப்பெண்கள் கண்டறிந்தனர்.[11] இந்த தகவல்களைச் சேர்த்து இத்திட்டத்திற்குப் பயன்படக்கூடிய கல்வி மற்றும் விழிப்புணர்வு உபகரணங்கள் தயாரிக்கப்பட்டது. இரத்தசோகைக்கு சிகிச்சை அளிப்பதற்கு ஆயுர்வேத மருத்துவத்திலுள்ள அடிப்படை தத்துவங்கள் ஆராயப்பட்டது. மேலும், சில இரும்புச்சத்து அதிகமுள்ள உணவு மற்றும் மூலிகைச் செடிகள் கண்டறியப்பட்டு அதில் முக்கியமானவை மட்டும் வரிசைபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் தகவல் பரிமாற்ற யுக்தியின்படி, இரத்தசோகையைத் தடுப்பது எப்படி அதற்கான சிகிச்சை முறைகள் என்ன என்பது குறித்த தகவல்கள் கிராம அளவிலான கூட்டங்கள் மற்றும் விழாக்கள் நடத்தி அதன்மூலம் பரவலாக்கப்பட்டது. வாரந்தோறும் பள்ளிகளில் யோகா வகுப்புகள் நடத்தப்பட்டது. உடலில் காணப்படும் சில அறிகுறிகளை உதாரணமாக தோலின் நிறத்தை வைத்து ஹீமோகுளோபின் அளவை கண்டறிவது எப்படி என்ற தகவல், பயிற்சி மற்றும் கூட்டங்களில் கலந்து கொண்டவர்களுக்கு கற்றுத்தரப்பட்டது. சத்தான உணவு அவர்களின் குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் வழங்கப்பட்டது. மேலும், மூலிகைச் செடிகள் ஆயுஸ் மருத்துவ மையங்கள் மூலம் பெண்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. சத்தானது எனக் கண்டறியப்பட்ட உணவுப் பயிர்கள் மற்றும் மூலிகைச் செடிகளைப் பயிரிடும்படி 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஊக்கப்படுத்தப்பட்டனர். இத்திட்டத்தின் மற்றொரு யுக்தி யானது, கிராமத்திலுள்ள விவசாயிகளை குறிப்பாக, பெண்களை இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதாகும். ஆபத்தை விளைவிக்கும் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தாமல் இயற்கை விவசாய முறைப்படி பயிரிடவும் அவர்களுக்குக் கற்றுத்தரப்பட்டது. மேலும், ஊட்டச்சத்து அதிகமுள்ள செடிகளின் நாற்றுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆதாரக் குறிப்புகள்

8 Sample Registration System Bulletin, December 2013

9 International Institute for Population Sciences (IIPS) and Macro International. (2008). *National Family Health Survey (NFHS-3), India, 2005-06: Gujarat.* Mumbai: IIPS. www.rchiips.org/nfhs/NFHS-3%20Data/gujarat_state_report_for_website.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

10 தோழமை அமைப்புகள் என்பதில், சோஷியல் ஏஜிகேஷன் ஃபார் ரூரல் அண்டு ட்ரைபல் இன்கேப்பிடன்ஸ் ஆஃப் இந்தியா (SARTHI) விக்ரம் சாராபாய் சென்டர் ஃபார் டெவலெப்மென்ட் இண்டகரேஷசன் (VIKSAI) யெங் சிட்டிசன்ஷிப் ஆப் இந்தியா சேரிட்டபிள் டிரஸ்ட் மற்றும் அரசின் பல துறைகள்,குஜராத் மாநில மற்றும் மாவட்ட (AYUSH) ஆயுஸ், மாவட்ட தோட்டக்கலை மற்றும் கல்வித்துறை உள்ளடக்கம்

11 உள்ளூரிலே கிடைக்கக் கூடிய இரும்புச் சத்து மிக்க உணவுகள் குறித்த விவரங்களைப் பெற www.mdg5watch.org/CHETNA/12-Food%20and%20Herbs.pdf என்ற இணையதளத்தைப் பார்க்கவும்

இரத்தசோகையைக் குறைப்பதற்கு அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய உணவுகள் மற்றும் மூலிகைகளைப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை இத்திட்டம் ஏற்படுத்தியது. அதன் மூலம் இரும்புச்சத்துப் பற்றாக்குறையை திறமையாக சரி செய்ய முடியும் என்பதையும் எடுத்துரைத்தது. ஐம்பது பெண்களின் இரத்த மாதிரிகளை எடுத்துப் பரிசோதனை செய்து பார்த்ததில், உணவு மற்றும் அதை உட்கொள்ளும் முறை மாற்றங்களுடன், மூலிகை மருந்து எடுத்துக்கொண்ட ஆறு மாதத்திற்குள் அவர்களின் ஹீமோகுளோபின் அளவு 2 கிராம் (80%) கூடியது, சோர்வு நீங்கி உற்சாகம் அதிகரிப்பதாகவும் அப்பெண்கள் தெரிவித்தனர். இப்பரீட்சார்த்தத் திட்டத்தின் முடிவுகள், தேசிய மற்றும் சர்வதேச அளவில் பெண்களின் நலனுக்காகப் பாடுபடும் நிறுவனங்களிடம் பகிர்ந்து கொள்ளப்பட்டது. குறிப்பாக, சர்வதேச பெண்கள் மற்றும் சுகாதாரக் கூட்டம் (International Women and Health Meeting-(IWHM) குஜராத் மாநில அரசின் சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை, மேலும் ஆயுஸ் (AYUSH) அமைப்பின் இயக்குநர் ஆகியோருடன் பகிர்ந்து கொண்டதுடன் செய்தித்தாள்களிலும் இத்திட்டத்தின் முடிவுகள் வெளியிடப்பட்டது.

உள்ளூர் முன்முயற்சிகளும், மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஆர்வமும் இருப்பின் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் இரத்தசோகையைத் தடுக்க முடியும் என்பதை இப்பரீட்சார்த்த திட்டத்தின் முடிவுகள் தெரிவிக்கின்றன. இரத்தசோகை என்பது பெரும்பாலான கிராமப்புற இந்திய மக்களைக் குறிப்பாக, பெண்களைப் பாதிக்கக்கூடிய ஒரு சிக்கலான ஊட்டச்சத்துப் பிரச்சனை என்பதை மத்திய -மாநில அரசுகளின் கொள்கைகளில் அங்கீகரிக்கப்பட வேண்டும். அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய இரும்புச்சத்து மிகுந்த உணவுப் பொருட்களுடன் மூலிகைகளையும் சேர்த்து உட்கொள்வது என்ற தகவல்களை ஊட்டச்சத்து குறைபாட்டினைச் சரிசெய்வதற்கான யுக்திகளுடன் ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டும். இதுபோன்ற திட்டங்களுக்கு குறைந்த செலவுதான் ஆகிறது. மேலும், கிராம சமுதாயத்திற்கு அதிகாரம் அளிப்பதற்கு, குறிப்பாக, பெண்கள் தங்களுடைய கையில் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம் குறித்த விஷயங்களை எடுத்துக்கொள்ளவும் இதன்மூலம் வழிபிறக்கும். மேலும், இத்துடன்,

- இரத்தசோகையை குறைப்பதற்கு இயற்கையாகவும் அந்தந்தப் பகுதி களில் கிடைக்கக் கூடிய உணவுகள், மூலிகைச் செடிகள் மற்றும் மூலிகை மருந்து தயாரிப்பு தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு ஆயுஷ் (AYUSH) மருத்துவத்துறை முதலீடு செய்ய வேண்டும். அவ்வாராய்ச்சியானது பல மையங்கள் கூட்டாக இணைந்து செய்யக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

- சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் உயிரினங்களைப் பாதுகாக்கும் முயற்சிகளில் அப்பகுதிகளில் கிடைக்கக்கூடிய சத்தான உணவுப் பொருட்களின் முக்கியத்துவத்தை ஆவணப்படுத்துதல், ஆய்வு செய்தல் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளைத் துவக்க வேண்டும்.

- தேசிய மூலிகைச் செடிகள் நிர்வாகக் குழுவும், விவசாய அமைச்சகமும் இரத்தசோகையை; தடுப்பதற்கு உதவும் மூலிகைப் பயிர்களைப் பயிரிடுவதற்கு முக்கியத்துவம் தரவேண்டும்.

மக்களின் வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன், அனைவருக்கும் நலவாழ்வு என்ற இலக்கை அடைவதற்கு அரசு அமைப்புகளுக்கிடையே கூட்டமைப்பும், ஒருங்கிணைப்பும் மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது.

*கட்டுரை ஆசிரியர்:* **ஸ்மிதா பாஜ்பை,** (Smita Bajpai) *திட்ட அதிகாரி,*
*சென்டர் பார் ஹெல்த் எஜிக்கேசன், ட்ரெயினிங் அண்டு நியூட்ரிஸியன் அவேர்னஸ் (சேத்னா)*
(Centre for Health, Education, Training and Nutrition Awareness-CHETNA)*இந்தியா,*
*மின் அஞ்சல்:* chetna456@gmail.com

# ஆரோவின் SRHR தகவல் பரிமாற்ற மையத்திலிருந்து கிடைக்கும் ஆதாரங்கள்

ஆரோவின் SRHR தகவல் பரிமாற்ற மையத்தில், பெண்களின் பாலியல், இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் (SRHR) தொடர்பான சிறப்பு வெளியீடுகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. SRHR குறித்த தகவல்களைப் பரவலாக அனைவருக்கும் வழங்குவது என்ற முயற்சியில் இம்மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தைப் பின்வரும் மின் அஞ்சலில் தொடர்புகொள்ளலாம். dc@arrow.org.my அல்லது arrow@arrow.org.my

வறுமை, உணவு உற்பத்திக்கான அதிகாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் SRHR விஷயங்கள் குறித்து வெளிவந்துள்ள ஆய்வுக் கட்டுரைகளின் சுருக்கத்தை ஆரோ நிறுவனம் ஒரு வெளியீடாகக்கொண்டு வந்துள்ளது. அதை http//arrow.org.my/IDC/Bibliographies/poverty -Foodsov-SRHR-Annotated pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

Asian Development Bank. (2013). *Gender equality and food security: Women's empowerment as a tool against hunger. Manila:* ADB. www.adb.org/sites/default/files/pub/2013/gender-equality-and-food-security.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

உணவுப் பொருட்கள் நமக்கு கிடைக்கச் செய்வதில் பெண்கள் ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றனர். நிலமுடையவர்கள் சொந்தமாக உணவை உற்பத்தி செய்வதில், கூலி வேலையில் ஈடுபடுவது அல்லது சமூகப் பாதுகாப்பைப் பெறுவதில் பெண்களின் பங்கு அளவிடற்கரியது. இருந்த போதிலும், ஆசிய-பசிபிக் கண்டத்திலுள்ள உணவுப் பாதுகாப்பு மற்றும் பாலின சமத்துவத்தை எடுத்துரைக்கும் யுக்திகளில் பெண்களுக்கு மிகக்குறைந்த முக்கியத்துவமே கொடுக்கப் பட்டுள்ளது, என ஐ.நா. அமைப்பின் உணவிற்கான உரிமைகள் பிரிவின் சிறப்பு அதிகாரியான ஆலிவர் டீசூட்டர் எழுதியுள்ள இவ்வறிக்கை தெரிவிக்கின்றது. சர்வதேச அளவில், சமீபத்தில் ஏற்பட்டுவரும் சவால்களை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. குறிப்பாக, உணவுப் பொருட்களின் விலையேற்றம், பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகள், சுற்றுச்சூழல் ஆபத்துக்களுக்கும், பாலினப் பரிமாணத்திற்கும் இடையே உள்ள தொடர்புகள் மற்றும் அத்தொடர்புகள் எவ்வாறு பெண்களைப் பாதிக்கிறது என்பது குறித்த விவரங்கள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது. உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பின் மூன்று தூண்களான உணவுப் பொருட்கள் சரிவரக் கிடைப்பது, அவற்றைப் பெறுவது மற்றும் உபயோகிப்பது என்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி, ஆசிய பசிபிக் கண்டம் உட்பட உலகில் பிறபகுதிகளில் நிலவும் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையைச் சரிசெய்வதற்கான சிறந்த யுக்திகள் இவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ளன. மேலும், ஆண்-பெண் சமத்துவ சிந்தனையுள்ள அணுகுமுறைகள் எவ்வாறு இப்பிரச்சனையைத் தீர்க்க மிகவும் உதவியாக இருக்கும் எனவும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. பாரம்பரியமாகப் பெண்கள் செய்துவரும் பணிகளில் மாற்றங்களைக் கொண்டுவருவது உடனடித் தேவை எனவும், குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான வேலைகளில் ஆண்-பெண் என இருபாலரும் பகிர்ந்து செய்ய வேண்டும் எனவும் அதற்கான யுக்திகள் ஒன்றுக்கொன்று உதவும் வகையில் இருப்பது அவசியம் எனவும் இவ்வறிக்கை எடுத்துரைக்கிறது.

Caro, A. (2011). *Feminist perspectives towards transforming economic power. Topic 1:Food sovereignty: Exploring debates on development alternatives and women's rights.* Toronto, Mexico City, Cape Town: Association of Women's Rights in Development (AWID). http://awid.org/content/download/120099/1363617/file/FPTTEC_FoodSovgty_ENG.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

உணவு உற்பத்திக்கான அதிகாரம் என்பது தொடர்பாக சமீபகாலமாக நடைபெற்றுவரும் விவாதங்களைப் பாலின சமத்துவ கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து இவ்வெளியீடு வழங்குகிறது. உணவு உற்பத்திக்கான அதிகாரம் என்றால் என்ன

என்ற சொல் விளக்கம் உருவான வரலாறு, அதில் சர்வதேச மற்றும் லத்தின் அமெரிக்க பெண் விவசாய இயக்கங்கள் ஆற்றிய முக்கிய பங்கு பற்றியும் இக்கட்டுரை விவரிக்கின்றது. மேலும், விவசாய இயக்கங்களின் தொலைநோக்குப் பார்வையான உணவு உற்பத்திக்கான அதிகாரத்தையும் , விவசாயிகளின் உரிமைகளையும் எப்படி தொடர்புபடுத்துவது என்பது குறித்து பாலின சமத்துவத்திற்காகப் பாடுபடுபவர்கள் மத்தியில் விவாதிப்பதன் அவசியத்தையும், அதிலுள்ள சவால்களையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

Hawkins, K. et al. (2014). *Sexuality and poverty synthesis report. IDS Evidence Report* 53.Brighton: Institute of Development Studies (IDS). http://opendocs.ids.ac.uk/opendocs/bitstream/handle/123456789/3525/ER53.pdf?sequence=1 என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

பாலியல் ரீதியாகப் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு உதவக்கூடிய சமூகப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை மேம்படுத்துவது என்ற நோக்கில், பாலியல், பாலினம் மற்றும் வறுமை ஆகிய மூன்றிற்கும் இடையேயான தொடர்புகளைப் புரிந்துகொள்ளுதல் என்ற தலைப்பில் ஒரு பெரிய திட்டம் ஆறு நாடுகளில் நடைபெற்று வருகிறது. அத்திட்டத்தின் ஒரு பகுதியாக தணிக்கை ஒன்று நடத்தப்பட்டது. அத்தணிக்கையில் கிடைத்த அனுபவங்கள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது. வறுமை மற்றும் கொள்கை குறித்த இத்தணிக்கையானது **2012-13** ஆம் ஆண்டுகளில், பிலிப்பைன்ஸ், பிரேசில், சீனா, இந்தியா, மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளில் நடத்தப்பட்டது. வள ஆதாரங்கள், விவாதங்கள், கருத்துக்கள், எண்ணங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அதிகாரம் ஆகியவற்றிற்கும் மக்களுக்கும் உள்ள தொடர்புகள் இத்தணிக்கையில் பார்வையிடப்பட்டது. அதனடிப்படையில் பாலியலுக்கும், உடல், சமூக மற்றும் பொருளாதார நலன், அரசியல் பங்கேற்பு, சமூகப் பொருளாதார ஒன்றிணைப்பு, ஏழை மற்றும் மிகவும் புறக்கணிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது போன்ற பல காரணிகளுக்கிடையே நேரடியான தொடர்பு இருக்கிறது என இத்தணிக்கையின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

Jolly, S. (2010). *Poverty and sexuality: What are the connections?*Sweden: Swedish International Development Agency (Sida). www.sxpolitics.org/wp-content/uploads/2011/05/sida-study-of-poverty-and-sexuality1.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

பாலியல் உரிமை மீறல்களினால் ஏழைகள் எவ்வாறு அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவ்வுரிமைமீறல் மேலும், அவர்களை எப்படி வறுமையடையச் செய்கிறது என்பதற்கும் எண்ணற்ற ஆதாரங்கள் இருந்தபோதும், பாலியலுக்கும், வறுமைக்கும் இடையேயுள்ள தொடர்புகள் இன்னும் முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை என்பதை இப்புத்தகம் தெரிவிக்கிறது. பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் பாலியலின் பங்கு குறித்து முக்கிய ஆதாரங்களை இவ்வறிக்கை எடுத்துரைக்கிறது. முன்னேற்றத்திற்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களில் பாலியல் இடம்பெறவில்லை என்றால் அது சமூகப் புறக்கணிப்பு மற்றும் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கக்கூடும். வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக பணிசெய்து வரும் செயல்பாட்டாளர்கள், கொள்கைகளை உருவாக்குபவர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் எனப் பல பிரிவினருக்காக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

Koehler, G. and Chopra, D.(Eds.). (2014). *Development and Welfare Policy in South Asia.* New York: Routledge.

வங்காளதேசம், இந்தியா, மாலத்தீவுகள், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய ஆறு தெற்காசிய நாடுகளில் கடந்த பத்தாண்டுகளாக (**2003** முதல் **2013**) அறிமுகப்படுத்தப்பட்ட சமூகக் கொள்கைகளை இவ்வெளியீடு ஆய்வு செய்கிறது. இக்கொள்கைகள் எப்படி உருவாக்கப்பட்டது மற்றும் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள அரசாங்கங்களின் நிலையை இக்கொள்கைகள் எப்படி பிரதி பலிக்கின்றன என்பதும் இவ்வாய்வில் பார்வையிடப்பட்டுள்ளது. சமூகக் கொள்கைகள் அல்லது வறுமையை ஒழிக்க உருவாக்கப்பட்ட கொள்கைகளை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. மேற்சொன்ன ஆறு நாடுகள் ஒவ்வொன்றிற்கும் உள்ள பொதுநிதி ஆதாரங்களுக்கான வாய்ப்புகளை ஆய்வு

செய்து அதனடிப்படையில் சில முக்கிய முடிவுகளை எடுத்துரைக்கிறது. முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசின் நிதியாதாரங்கள் எப்படி இருக்கவேண்டும் என்ற ஒரு மாதிரியும் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.

Mathur, A. (2011). *Women and food security: A comparison of South Asia and Southeast Asia.* Asia Security Initiative Policy Series No. 12. Singapore: RSIS Centre for Non-Traditional Security (NTS) Studies. www.rsis.edu.sg/NTS/resources/research_papers/MacArthur_Working_Paper_Arpita.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

உற்பத்தி என்பது முதல் பகிர்ந்தளிப்பது வரையிலான உணவு சங்கிலியின் அனைத்து நிலையிலும் பெண்கள் முக்கியப் பங்குவகிக்கின்றனர். அப்படியிருந்தபோதும், உணவிற்கு உத்திரவாதமின்மை என்ற பிரச்சனையால் அதிகம் பாதிக்கப்படுவதும் பெண்கள்தான் என இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது. உணவிற்கு உத்தி வாதமின்மையானது, பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த பாதிப்புகளை விளைவிக்கிறது. அதுபோலவே, அவர்கள் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளைக் குறைத்து, இளவயதுத் திருமணங்களை அதிகரிக்கச் செய்வது போன்ற பல சமூகப் பொருளாதாரப் பாதிப்புகளையும் ஏற்படுத்துகிறது. தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா என இரு பிராந்தியத்திலுள்ள பெண்களும் இப்பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற போதிலும், தெற்காசியாவில் உள்ளவர்களே மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என இவ்வாய்வு தெரிவிக்கிறது. உணவிற்கு உத்திரவாத மின்மை என்ற பிரச்சனையால் பெண்கள் அதிகமாக பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு குடும்பம் முதல் நாடு மற்றும் மண்டலம் எனப் பலநிலைகளிலும் இப்பிரச்சனையைத் தீர்க்கப் பணிசெய்வது அவசியம் என இவ்வறிக்கையின் முடிவுகள் தெரிவிக்கிறது.

Paruzzolo, S. et al. (2010). *Targeting poverty and gender inequality to improve maternal health.* Washington DC, New Delhi: International Centre of Research on Women (ICRW). www.icrw.org/files/publications/Targeting-Poverty-Gender-Inequality-Improve-Maternal-Health_0.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

மகப்பேறு நலன் பாதிக்கப்படுவது மற்றும் மகப்பேறு மரணங்கள் நிகழ்வதற்கு காரணமாக இருக்கும் இரண்டு முக்கியக் காரணிகளைப் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. மகப்பேறு நலனைத் தீர்மானிப்பதில் வறுமை மற்றும் ஆண்-பெண் சமத்துவம் ஆகிய இரண்டும் முக்கியப் பங்குவகிக்கிறது. ஏழை மற்றும் பின்தங்கிய பகுதியில் வசிக்கும் பெண்களுக்கு மகப்பேறு சேவைகள் சரிவரக் கிடைக்காதது, அவற்றைப் பெறமுடியாதது மற்றும் சேவையைப் பெறுவதற்கு அதிகச் செலவாவது போன்ற சூழ்நிலைகளை மேற்சொன்ன இரு காரணிகளும் உருவாக்குகின்றன, அதே நேரம் இச்சூழ்நிலைகள் ஆண்களின் ஆரோக்கியத்திற்கு சாதகமாக உள்ளது. மகப்பேறு நலச்சேவைகளைப் பெறுவதில் வறுமை மற்றும் பாலினப் பாகுபாடுகள் எப்படித் தடைகளை உருவாக்குகிறது என்பதை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. மகப்பேறு நலச்சேவைகளின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான யுக்திகளை மறுஆய்வு செய்து, அதனடிப்படையில், மகப்பேறு நலச் சேவைகள் தரமானதாகவும், எல்லோருக்கும் கிடைக்கும் வகையிலும், மேலும் அவற்றைப் பெறுவதிலுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்குத் தகுந்த கொள்கைகளைக் கொண்டுவருவது மிகவும் அவசியம் என்ற பரிந்துரையைக் கொடுக்கிறது. பெண்களின் பூரண ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் தருவது என்றும், அதற்குப் பெண்களின் தேவைகளையும், வாழ்க்கைச் சூழல்களையும் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் மையப்படுத்த வேண்டும், மகப்பேறு சேவைகளைப் பெண்கள் பெறுவதற்கான வாய்ப்புகளையும், மேலும், அவர்களை அதிகாரமுள்ளவர்களாக மாற்றுவதற்கும், பாலினப் பழக்கவழக்கங்களில் தகுந்த மாறுதல் கொண்டுவருவது அவசியம் என இக்கட்டுரை தெரிவிக்கிறது.

Raghuram S. (2012). *Reclaiming and redefining Rights: Thematic series 5: Poverty, food Security and Reproductive Health and Rights – Integrating and Reinforcing State Responsibilities, Integrating Societal Action.* Kuala Lumpur: Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW). www.arrow.org.my/publications/ICPD+15Country&ThematicCase Studies/Poverty_FoodSecurity_SRHR.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

*வறுமை, உணவுப் பாதுகாப்பு மற்றும் SRHR ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளை இப்புத்தகம் எடுத்துரைக்கிறது. ஆசிய-பசிபிக் கண்டத்தில் வறுமையில் வாழும் பெண்களின் உயிருக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்களை SRHR காரணியாகப் பார்க்க வேண்டியதன் அவசியத்தை இவ்வெளியீடு எடுத்துரைக்கிறது. பாதிக்கப்பட்ட அடித்தட்டு மக்களின் பார்வையிலிருந்து செயல்வழிமுறைகள் உருவாக வேண்டும் என்ற ஆலோசனையும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது. வறுமையினால் ஏற்படும் பலவிதமான பாதிப்புக்களை SRHR குறித்து பணி செய்பவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பரந்த அளவிலான முன்னேற்றத்திற்கும் சமூக இயக்கங்களுக்கும் இடையே உறுதியான தொடர்புகள் உருவாக வேண்டும். மனிதனின் தேவைகள் தொடர்பான மேற்சொன்ன அனைத்து விஷயங்களையும்,அரசியல் நிர்வாகத்தையும் ஒருங்கிணைக்கக் கூடிய ஓர் உலகளாவிய பார்வை அவசியம் எனவும் இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. அப்போதுதான் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத முன்னேற்றத்தை மையப்படுத்தக்கூடிய ஒருங்கிணைந்த திட்டங்களைத் தேசிய அளவில் உருவாக்க முடியும். இப்பிரச்சனைகள் குறித்த ஒரு முழுமையான புரிதலை ஏற்படுத்தவும், வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு, மற்றும் SRHR குறித்துப் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பணி செய்து வரும் சமூக இயக்கங்களும் அரசாங்கமும் இணைந்து செயல்படுவதற்கான ஆலோசனைகளும் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.*

Ravindran, T.K.S. (2014). *What it takes: Addressing poverty and achieving food sovereignty, and universal access to sexual and reproductive healthcare services.* Bridging the divide: Thematic paper series on linking gender, poverty eradication, food sovereignty and security, and sexual and reproductive health and rights. Kuala Lumpur: Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW). www.arrow.org.my/publications/ARROW%20Thematic%20Paper%2001.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

*அனைவருக்கும் SRHR சேவைகளை வழங்குவது என்பது, 1994ல் ஏற்படுத்தப்பட்ட ICPDவின் இலக்குகளில் ஒன்றாகும். MDG க்கு மாற்றாக வரவிருக்கும் 2015க்கு பிந்தைய வளர்ச்சித் திட்டத்திலும் எல்லோருக்கும் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கிய சேவைகளை வழங்குவது என்பது முக்கியக் குறிக்கோளாக இடம் பெறவுள்ளது. வறுமை, உணவிற்கு உத்திரவாதமின்மை ஆகியவற்றிற்கும், ஆரோக்கியம் மற்றும் சுகாதார சேவைகளைப் பெறுவதற்கும் பலவழிகளில் தொடர்புள்ளது. இத்தொடர்பு, அனைவருக்கும் சுகாதாரச் சேவைகளைக் கிடைக்கச் செய்வது என்பதில் ஏற்பட்டுவரும் வளர்ச்சியில் பின்னடைவை ஏற்படுத்துகிறது. புதிய தாராள உலகமயமாக்குதலின் நிகழ்வுகள் இதில் மேலும், மிகுந்த பாதிப்புகளை விளைவிக்கிறது. இக்கட்டுரை ஆசிரியர் எழுதி இவ்வருடத்தின் துவக்கத்தில் வெளியிட்டுள்ள ஒரு பெரிய ஆய்வுக் கட்டுரையின் சுருக்க அறிக்கையே இக்கட்டுரையாகும். புதிய தாராள உலகமயமாக்குதல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளில் பாலின சமத்துவம் எப்படி எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றும் மேலும், அவைகள் எவ்வாறு வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மீது பாதிப்பை விளைவிக்கிறது எனவும் இக்கட்டுரை விவரிக்கிறது. மேலும், இக்கொள்கைகளினால் ஏற்படும் பாதிப்புகள் ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்களுக்குத்தான் அதிகம் என்றும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது.*

Ravindran, T.K.S. (2014). *What it takes: Addressing poverty and achieving food sovereignty, and universal access to sexual and reproductive healthcare services.* Bridging the divide: Thematic paper series on linking gender, poverty eradication, food sovereignty and security, and sexual and reproductive health and rights. Kuala Lumpur: Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW). www.arrow.org.my/publications/ARROW%20Thematic%20Paper%2001.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

*ஆண்-பெண் சமத்துவம், வறுமை, வறுமை ஒழிப்பு, உணவு உற்பத்திக்கான அதிகாரம், உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கும் SRHR க்கும் உள்ள தொடர்புகள் குறித்து வெளிவந்துள்ள ஒரு புத்தகத்தின் முதல் தொடரில் இவ்வறிக்கை இடம்பெற்றுள்ளது. வறுமை, உணவிற்கு உத்திரவாதமின்மை உணவு உற்பத்திக்கான அதிகாரம் மற்றும்*

அனைவருக்கும் SRHR சேவைகளை வழங்குவது ஆகிய அனைத்துப் பிரச்சனைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. எனவே இவற்றைத் தனித்தனிப் பிரச்சனையாக அணுகித் தீர்க்க முடியாது என இக்கட்டுரை தெரிவிக்கிறது. அதுபோலவே, புதிய தாராள மயமாக்குதலின் விளைவாக ஏற்பட்டிருக்கும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகள் பட்டினி மற்றும் வறுமைக்கான மூலகாரணங்களைத் தீர்க்காமல் அனைவருக்கும் SRHR சேவைகள் என்பதை அடைவது சாத்தியமில்லை. போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்து உரிமை என்பது போன்ற அடிப்படையான மனித உரிமைகளைப் பெறுவதிலும் முன்னேற்றத்திலும் ஒரு முக்கிய அங்கமாக SRHR உள்ளது. எனவே உணவிற்கான உரிமை, வறுமை ஒழிப்பு, புதிய பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் SRHR குறித்து பணிசெய்துவரும் சமூக இயக்கங்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து இப்பிரச்சனைகளுக்கான மூலகாரணங்களைத் தீர்க்கவும், அவற்றை எதிர்கொள்ளும் ஒரு சக்தியாகவும் உருவாக வேண்டும் எனவும் இக்கட்டுரையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

Ravindran, T.K.S. & Nair, M.R. (2012). Poverty and its impact on sexual and reproductive health and rights of women and young people in the Asia-Pacific Region. *In Action for sexual and reproductive health and rights: Strategies for the Asia-Pacific beyond ICPD and the MDGs.* Kuala Lumpur:Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW). www.arrow.org.my/uploads/Thematic_Papers_Beyond_ICPD_&_the_MDGs.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

ICPD மற்றும் MDG's காலவரையறை முடிந்த பின்பும் ஆசிய-பசிபிக் பகுதியின் SRHR உரிமைகளை நிலைநாட்ட NGOக்களைத் தயார்படுத்துவது என்ற தலைப்பில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் 2012ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் தேதி முதல் 4ம் தேதிவரை ஒரு மண்டல ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் வறுமைக்கும் SRHRக்கும் உள்ள தொடர்புகள் என்ற தலைப்பில் நடைபெற்று ஒரு குழுவிவாதத்தில் இவ்வாய்வுக் கட்டுரை பகிர்ந்து கொள்ளப்பட்டது. இவ்வறிக்கையானது, வறுமைக்கும் SRHR க்கும் உள்ள பலவழித் தொடர்புகளை எடுத்துரைக்கிறது. ஆசிய-பசிபிக் கண்டத்திலுள்ள 21 நாடுகளின் வறுமை மற்றும் SRHR தகவல் களைப் பார்வையிட்டு, வறுமைநிலையானது எவ்வாறு பெண்களின் SRHR பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதை இவ்வறிக்கை எடுத்துரைக்கிறது.

Shiva, V.& Singh, V. (2011). *Health per acre: Organic solutions to hunger and malnutrition.* New Delhi:Navdanya & Research Foundation for Science, Technology & Ecology. www.navdanya.org/attachments/Latest_Publications5.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

விவசாயத்தின் உற்பத்தியை மகசூல் என்ற அடிப்படையில் கணிக்கப்படுவதிலுள்ள குறைபாடுகளை இவ்வறிக்கை எடுத்துரைக்கிறது. விவசாயத்தில் மகசூல் என்பது மட்டுமே பிரதான நோக்கமாக இருக்கும்போது ஒரே பயிரைத் தொடர்ந்து பயிரிடுவது மற்றும் இரசாயன உரங்களை பயன்படுத்தி உற்பத்தியின் அளவை அதிகரிப்பது மட்டுமே பிரதானமாக உள்ளது. விளைப்பொருட்களின் தரம், ஊட்டச்சத்து மற்றும் பல உயிரினங்களை வளர்க்கும் முறைக்கு முக்கியத்துவம் தருவதில்லை. பல உயிரின இயற்கை விவசாயத்திற்கு மாறும்போது சுற்றுச்சூழல் மேம்பட்டு, உணவுப்பொருட்களில் ஊட்டச்சத்து அதிகரிக்கும் என்றும் அதனால் உற்பத்திக்கான செலவுகளும் குறைகின்றன எனவும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது. இம்மாற்றம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு சிறந்த யுக்தியாக மட்டுமல்லாமல் உணவிற்கான உரிமை, அனைவருக்கும் ஆரோக்கிய வசதிகள் கிடைக்கச் செய்வது என்பதை அடைவதற்கான ஒரு வழியாகவும் இது உள்ளது. அத்துடன் உணவு அமைப்பிலுள்ள பல சிக்கல்களைத் தீர்க்கவும் இம்மாற்றங்கள் உதவும். விவசாயிகள் மற்றும் நமது ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் சுற்றுச் சூழலையும் நம்மால் எப்படி பாதுகாக்க முடியும் என்பதை இக்கட்டுரை தெரிவிக்கிறது.

Smiles, S. (Ed.)(2012). *Breaking through the development silos: Sexual and reproductive health and rights, Millennium Development Goals and gender equity. Experiences from Mexico, India and Nigeria.* Quezon City: Development Alternatives with Women for

a New Era (DAWN). http://www.dawnnet.org/uploads/documents/SRHR.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

மெக்சிக்கோ, இந்தியா மற்றும் நைஜீரியா ஆகிய மூன்று நாடுகளிலுள்ள வறுமை ஒழிப்பு, SRHR கொள்கைகளை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. இந்நாடுகளின் தேசிய வறுமை ஒழிப்பு யுக்திகளில் எப்படி ஆண்-பெண் ஏற்றத்தாழ்வுகளுக்கான அடிப்படைக் காரணங்களை எடுத்துரைக்கத் தவறிவிட்டன என்பதையும் இவ்வெளியீடு எடுத்துரைக்கிறது. இக்கொள்கைகள் பாலின வேலைப் பாகுபாடுகளை அதிகரிக்கச் செய்கின்றன என்றும், மேலும், அவைகளில், வறுமையை, SRHR- வுடன் ஒன்றிணைப்பதற்கான முயற்சிகள் ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கிறது. எல்லாவற்றிக்கும் மேலாக, முன்னேற்றத்திற்கான திட்டங்களை இக்கொள்கைகள் பிரித்து கெய்ரோ, பெயிஜிங் மாநாட்டின் சாதனைகளை புறந்தள்ளச் செய்துவிட்டன என இவ்வறிக்கை தெரிவிக்கிறது.

Standing, G. (2012). *Cash transfers : A review of the issues in India. New Delhi: Unicef India & SEWA Bharat.* www.guystanding.com/files/documents/unicef_cash_transfers_india_published.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

சமூக நலத்திட்டத்தின் உதவிகளைப் 'பணமாக வழங்குவது' என்ற வழிமுறை தற்போது இந்தியாவில் நடைமுறையிலுள்ளது அதன் சாதக - பாதகங்களை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. அதிகரித்து வரும் பொருளாதார ஆபத்துக்கள், ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு குறித்த சீர்திருத்தங்களினால் இந்தியக் குடும்பங்களில் நிகழ்ந்து வரும் மாற்றங்களைக் கண்டறிந்து. அதன் அடிப்படையில் சமூகக் கொள்கைகளை மதிப்பிட வேண்டும் என்றும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது. இந்தியாவின் இரண்டு முக்கியமான வறுமை ஒழிப்புக் கொள்கைகளை இக்கட்டுரை ஆய்வு செய்துள்ளது. பணம் வழங்குவது என்பதுடன் தொடர்புடைய இதர வழிமுறைகளான பொது வினியோகத்திட்டம் (PDS), மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டம் (MGNREGS) பற்றியும் இக்கட்டுரை விவரிக்கிறது. சர்வதேச அனுபவங்களிலிருந்து விவாதத்தையும், ஊழல் நடப்பதற்கான சூழ்நிலைகள், சமூகப் பொருளாதாரச் சுற்றுச்சூழல் பாதிப்புக்களுக்குப் பிறகு பணம் வழங்குவதன் பங்கு பற்றியும் தெரிவிக்கிறது. தனி நபர்களின் கண்ணோட்டம் மற்றும் நடவடிக்கைகளை மாற்றுவதற்கும் மற்றும் வாய்ப்புகளை உருவாக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பணம் வழங்கும் திட்டங்களின் சாத்தியக் கூறுகளை இக்கட்டுரை விவாதிக்கிறது.

UNDP (2013). *Humanity divided: Confronting inequality in developing countries. New York. United Nations Development Programme.* http://www.refworld.org/docid/52fcc3fe4.html என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

ஏற்றத்தாழ்வுகள் குறித்த கருப்பொருட்களையும் அதன் அளவீடுகளையும் இவ்வறிக்கை மறு ஆய்வு செய்கிறது. சர்வதேச அளவில் ஏற்றத்தாழ்வுகளின் போக்கு எவ்வாறு உள்ளது என்பதை ஆய்வு செய்து ஏற்றத்தாழ்வுகள் தொடர்பாக 15 நாடுகளில் கொள்கை உருவாக்குபவர்களின் கண்ணோட்டத்தை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. வளர்ச்சிக்கு முக்கியத் தடையாக உள்ள இந்த ஏற்றத்தாழ்வுகளைத் தடுப்பதற்கான பல கொள்கை வழிமுறைகள் இக்கட்டுரையில் உள்ளது. மனித சமூகம் பல விஷயங்களில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ள போதும் , ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என்ற முக்கிய தகவல் இவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ளது. முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவர்கள், குடிமக்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பவர்கள் ஆகிய அனைவரும் சர்வதேச அளவிலான பேச்சுவார்த்தையில் பங்குபெற உதவும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. மேலும், ஏற்றத்தாழ்வுகள் எதனால் ஏற்படுகிறது, அது எந்த அளவில் உள்ளது, அதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் அதைத் தடுப்பதற்கான வழிகள் குறித்துச் சொந்த நாடுகளில் மக்கள் விவாதத்தை துவங்குவதற்கு உதவுவதும் இதன் நோக்கமாகும்.

UN Food and Agriculture Organisation(FAO). (2013). 2012 *Guidance note: Integrating the right to adequate food into food and nutrition security programmes.* Rome: FAO. from www.fao.org/docrep/017/i3154e/i3154e.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு திட்டங்களில் போதுமான உணவு பெறுவதற்கான உரிமையை எப்படி ஒருங்கிணைப்பது என்ற நடைமுறை வழிகாட்டுதல் இப்புத்தகத்தில் இடம் பெறுகிறது. மேற்சொன்ன இவ்விஷயங்கள் தொடர்பாகப் பணி செய்துவருபவர்கள், தங்களுடைய பணி அனுபவத்திலிருந்து கண்டறிந்த சில முக்கிய வழிகாட்டுதல்கள் இதில் மையப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில சூழ்நிலைகளைப் பார்வையிட்டு. அதனடிப்படையில் சிறந்த வழிமுறைகள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்வதுடன் சந்தித்த சில சவால்களையும் இது சுட்டிக்காட்டுகிறது. அதனடிப்படையில், சர்வதேச ஒப்பந்தங்களையும் உறுதிமொழிகளையும் எப்படி நிறைவேற்றுவது என்பது குறித்த முக்கிய விஷயங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

UN FAO, the International Fund for Agricultural Development and the World Food Programme. (2013). *State of Food Insecurity in the World 2013:The multiple dimensions of food security.* Rome:FAO, IFAD & WFP. http://www.fao.org/docrep/016/i3027e/i3027e.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

FAO-வின் 2013 ஆம் ஆண்டிற்கான இவ்வறிக்கையில் உணவுப் பாதுகாப்பின் பல பரிமாணங்கள் என்ற கருத்து மையமாக உள்ளது. உணவுப் பற்றாக்குறையைக் கண்டறிவதற்கான பல குறியீடுகள் இவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி, பலநாடுகளின் உணவுப் பாதுகாப்பு நிலை தற்போது எவ்வாறு உள்ளது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, அதனடிப்படையில் பட்டினி ஒழிப்பு, உணவிற்கு உத்திரவாத மின்மை மற்றும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க தகுந்த திட்டங்களை உருவாக்கவும் அவற்றை நடைமுறைப் படுத்தவும் முடியும். MDG-இன் இலக்குகளை 2015 இல் அடைய முடியும் என இவ்வறிக்கை தெரிவிக்கிறது.

வங்காளதேசம், கானா, நேபாளம், நிகாரகுவா, பாகிஸ்தான் மற்றும் உகாண்டா ஆகிய ஆறு நாடுகளின் உணவுப் பாதுகாப்பு எவ்வாறு உள்ளது என்பதை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

UN Human Rights Council. (2012). *Report submitted by the Special Rapporteur on the Right to Food: Women's rights and the right to food, 24 December 2012,* A/HRC/22/50. http://www.refworld.org/docid/511cae602.html என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

பெண்களின் உணவிற்கான உரிமைக்கு உள்ள அச்சுறுத்தல்களையும் உடனடிக் கவனம் செலுத்த வேண்டிய சில விஷயங்களைப் பற்றியும் இக்கட்டுரை விவரிக்கிறது. வேலை வாய்ப்புகளைப் பெறுவது, சமூகப் பாதுகாப்பு, உணவு உற்பத்திக்கான வள ஆதாரங்கள் மீதான உரிமை, உணவைப் பதப்படுத்துதல் போன்ற பல விதமான அதிகாரங்களைப் பெண்கள் பெறுவதிலுள்ள தடைகளை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. அதனடிப்படையில், உணவுப் பாதுகாப்பு யுக்திகளில் பெண்களின் தேவைகள் மற்றும் சலுகைகளை எப்படி எடுத்துரைப்பது என்பது குறித்த சிறப்புப் பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு இக்கட்டுரை வழங்குகிறது. மேலும் வீட்டுவேலை என்ற ஊதியமில்லாத பணியிலிருந்து பெண்களை விடுவிக்க வேண்டும் எனவும் தற்போது நடைமுறையிலுள்ள பாலின அடிப்படையிலான வேலைப் பகிர்வுகளில் மாற்றங்களைக் கொண்டு வரும்போது, பெண்கள் எதிர் கொள்ளும் குறிப்பிட்ட சில சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைப்பது அவசியம் எனவும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது, பரிந்துரைக்கிறது.

Watt, M. (2013). *Breast cancer, pesticides and you!* Penang: Pesticide Action Network Asia and the Pacific. www.panap.net/sites/default/files/Breast-cancer-pesticides-and-you.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

பூச்சி மருந்துகளைக் கையாளுவது எவ்வாறு மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்துக்களை அதிகரிக்கிறது என்பதை இப்புத்தகம் எடுத்துரைக்கிறது. 98-க்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான பூச்சி மருந்துகளுக்கு, மார்பகப் புற்றுநோயுடன் தொடர்பு உள்ளது என்றும், இதனால் பெண்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் எனவும் இவ்வெளியீடு தெரிவிக்கிறது. பூச்சி மருந்துகளினால் ஏற்படும் பாதிப்புகளை

ஊட்டச்சத்து குறைபாடு அதிகரிக்கிறது என்றும் அரசாங்கத்தின் பொறுப்புணர்வு குறைவாக இருப்பது, சட்ட திட்டங்கள் சரிவர இல்லாதது, பூச்சி மருந்துகளை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் மார்பகப் புற்றுநோய்க்கான மருந்துகளைத் தயாரிக்கும் பெரிய பெரிய கம்பெனிகளுக்கும் இடையே நிலவும் இரகசிய உடன்பாடு போன்ற பல விஷயங்களினால் இப்பிரச்சனையைச் சமாளிப்பது மிகவும் கடினமாக உள்ளது.

இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு பல பரிந்துரைகள் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. தேசிய மற்றும் சர்வதேச அளவிலான கொள்கைகள் மற்றும் நிகழ்வுகளில் பெண்களின் ஆரோக்கியத்திற்கான உரிமைகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்ற கோரிக்கையும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

## இதர ஆதாரங்கள்

**Alkire S., Roche J.M., Santos M.E., & Seth S.** (2013). *Multidimensional Poverty Index 2013. (பல பரிமாண வறுமைக் குறியீடு 2013)* Oxford: Poverty and Human Development Initiative, University of Oxford. www.ophi.org.uk/wp-content/uploads/Global-Multidimensional-Poverty-Index-2013-8-pager.pdf?79d835 என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Armas, H.** (2006). Exploring linkages between sexuality and rights to tackle poverty. *(வறுமையை ஒழிப்பதற்கும், பாலியலுக்கும் இடையேயுள்ள தொடர்புகளைக் கண்டறிதல்) IDS Bulletin* 37(5): pp. 21-26. Brighton: Institute of Development Studies (IDS).

**Asian Development Bank (ADB).** (2012). *Food security and poverty in Asia and the Pacific. Key challenges and policy issues. (ஆசிய-பசிபிக் கண்டத்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை: முக்கிய சவால்கள் மற்றும் கொள்கை தொடர்பான பிரச்சனைகள்)* Manila: Asian Development Bank. www.adb.org/sites/default/files/pub/2012/food-security-poverty.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**ADB.** (2012). *Food for all: Investing in food security in Asia and the Pacific: Issues, innovations, and practices. (அனைவருக்கும் உணவு:ஆசிய பசிபிக் பகுதியின் உணவுப் பாதுகாப்பிற்கு முதலீடு செய்தல்; பிரச்சனைகள், புதுமைகள் மற்றும் நடைமுறைகள்)* Manila: Asian Development Bank. www.adb.org/sites/default/files/food-for-all.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**APWLD.** (2006). *Women and food sovereignty kit. (பெண்களும் உணவு உற்பத்திக்கான அதிகாரமும்)* Chiang Mai: Women and Environment Task Force, Asia Pacific Forum on Women, Law and Development (APWLD). http://apwld.org/resources/apwld-publications/ என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Blas, E. & Kurup, A.S.** (2010). *Equity, social determinants and public health programmes. (சமநிலை, சமூகக் காரணிகளும் பொதுச் சுகாதாரத் திட்டங்களும்)* Geneva: World Health Oraganisation. http://whqlibdoc.who.int/publications/2010/9789241563970_eng.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Commission on Social Determinants of Health.** (2008). *Closing the gap in a generation: Health equity through action on the social determinants of health. Final report of the Commission on Social Determinants of Health. (ஒரு தலைமுறைக்குள் இடைவெளியைக் குறைப்போம்: ஆரோக்கியத்தை தீர்மானிக்கும் சமூகக் காரணிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தி சுகாதாரச் சமநிலையை உருவாக்குதல்)* Geneva: World Health Organisation (WHO). www.who.int/social_determinants/final_report/csdh_finalreport_2008.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Chhibber, A., Ghosh, J., & Palanivel, T.** (2009). *The global financial crisis and the Asia-Pacific region: A synthesis study incorporating evidence from country case studies. (சர்வதேச நிதி நெருக்கடியும் ஆசிய-பசிபிக் பிராந்தியமும்: நாடுகளின் நிலை குறித்த ஆய்வுச் சுருக்கம்)* Colombo: UNDP Regional Centre for Asia and the Pacific, 2009. www.indiaenvironmentportal.org.in/files/P1116.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Cornwall, A. & Jolly, S.** (2006). Introduction: Sexuality matters. *(பாலியல் விஷயங்கள்: ஓர் அறிமுகம்) IDS Bulletin.* 2006, 37(5): pp.1-11. Brighton: Institute of Development Studies (IDS). www.ids.ac.uk/files/dmfile/Intro37.52.pdf என்ற இணையதள முகவரியாரிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Danguilan, M.** (2012). Food for thought: Why millions go hungry in the midst of plenty. In *Proceedings of the regional meetings: Beyond ICPD and the MDGs (சிந்தனைக்கான உணவு;அபரிமிதமான உணவு உற்பத்தி இருந்தும் ஏன் பல லட்சக்கணக்கானோர் பட்டினியில் வாழ்கின்றனர்; மண்டல அளவிலான ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டவை: ICPD மற்றும் MDG க்கு அப்பால்):*

*NGOs Strategising for sexual and reproductive health and rights in the Asia-Pacific region and opportunities for NGOs at national, regional, and international levels in the Asia-Pacific Region in the lead-up to 2014: NGO-UNFPA dialogue for strategic engagement.* Kuala Lumpur: Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW). www.arrow.org.my/APNGOs/Proceedings%20Report_Final.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Dev, M.S. & Sharma, A.N.** (2010) *Food security in India: Performance, challenges and policies. (இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு; வெற்றிகள், சவால்கள் மற்றும் கொள்கைகள்)* Oxfam India Working Papers Series. New Delhi: Oxfam. www.oxfamindia.org/resources/oxfam-india-working-papers-series என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Ecker, O. & Breisinger, C.** (2012). *The food security system: A new conceptual framework. IFPRI discussion papers (உணவுப் பாதுகாப்பு அமைப்பு: ஓர் புதிய கருத்தாக்க வழிமுறை ஐ.எப்.பி.ஆர்.ஐ - அமைப்பின் விவாதக் கட்டுரைகள்) 1166.* Washington DC: International Food Policy Research Institute (IFPRI). www.ifpri.org/sites/default/files/publications/ifpridp01166.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**International Food Policy Research Institute (IFPRI).** (2013). *2013 Global food policy report. (சர்வதேச உணவுக் கொள்கை அறிக்கை)* Washington DC.: IFPRI. www.ifpri.org/sites/default/files/publications/gfpr2013.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Patel, R.C.** (2012). Food sovereignty: Power, gender, and the right to food. *(உணவு உற்பத்திக்கான உரிமை, அதிகாரம், ஆண்-பெண் சமத்துவம் மற்றும் உணவிற்கான உரிமை) PLoS Med* 9(6): e1001223. doi:10.1371/journal.pmed.1001223. www.plosmedicine.org/article/fetchObject.action?uri=info% 3Adoi%2F10.1371%2Fjournal.pmed.1001223&representation=PDF என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Ravindran, T.K.S.** (2012). *Universal access to sexual and reproductive health: How far away are we from the goal post? (அனைவருக்கும் பாலியல், இனப்பெருக்க நலன் கிடைக்கச் செய்வது, அவ்விலக்கை அடைவதற்கு நமக்கு இன்னும் எவ்வளவு தொலைவு உள்ளது)* Paper presented at "Beyond ICPD and the MDGs: NGOs Strategising for Sexual and Reproductive Health and Rights in the Asia-Pacific Region," Kuala Lumpur, May 2-3, 2012.p13-39. www.arrow.org.my/uploads/Thematic_Papers_Beyond_ICPD_&_the_MDGs.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Razavi, S. et al.** (2012). *Gendered impacts of globalisation: Employment and social protection. Overview. உலகமயமாக்குதலினால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்: வேலைவாய்ப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு - ஓர் கண்ணோட்டம்.* Geneva, United Nations Research Institute for Social Development. http://bit.ly/1k9iZzq என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**Sen, A.** (1999). *Development as freedom. (முன்னேற்றம் என்பதும் உரிமையே)* Barcelona and Oxford: Oxford University Press

**United Nations.** (2013). *The Millennium Development Goals Report 2013. (நூற்றாண்டு வளர்ச்சி இலக்குகள் குறித்த அறிக்கை 2013)* New York: United Nations. www.un.org/millenniumgoals/pdf/report-2013/mdg-report-2013-english.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

**UN Food and Agriculture Organisation (FAO).** (1996). *Rome Declaration on Food Security and World Food Summit Plan of Action and World Food Summit Plan. (உணவுப் பாதுகாப்பிற்கான ரோம் பிரகடனம் மற்றும் உலக உணவு மாநாட்டின் செயல் திட்ட நடவடிக்கை)* www.fao.org/docrep/ 003/w3613e/w3613e00.htm என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

# ஆரோவின் வெளியீடுகள்

**ARROW.** (2014). *ARROW resource kit on leadership and management. (தலைமைத்துவம் மற்றும் நிர்வாகம் குறித்த ஆரோவின் பயிற்சி உபகரணம்)* 196p.

**ARROW.** (2014). *Global South youth reports - Asia, Africa, Central and Eastern Europe, Latin America and Caribbean, and the Pacific. (உலகின் தென்பகுதியிலுள்ள நாடுகளைச் சார்ந்த இளைஞர்களின் நிலை குறித்த அறிக்கைகள் - ஆசியா, ஆப்பிரிக்கா, மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா கரிபியன் மற்றும் பசிபிக்)* [various pages]

**ARROW.** (2013). *An advocates' guide: Strategic indicators for universal access to sexual and reproductive health and rights. (அனைவருக்கும் பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் கிடைக்கச் செய்வதற்கான குறியீடுகள்: சமூகப் போராளிகளுக்கான ஓர் வழிகாட்டி)* 40p.

**ARROW.** (2013) (2nd ed.). *Sex & rights: The status of young people's sexual & reproductive health & rights in Southeast Asia. (பாலியல் மற்றும் உரிமைகள்: தென்கிழக்கு ஆசிய நாடுகளிலுள்ள இளம் வயதினரின் பாலியல், இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள், குறித்த நிலை)* 86p.

**ARROW.** (2012). *Reclaiming & redefining rights: Setting the adolescent & young people SRHR agenda beyond ICPD+20. (உரிமைகளை மறுவரையறை செய்யவும்*

திருப்பிக்கொடுக்கவும் வலியுறுத்தல்: ICPD *+20* க்குப் பிந்தைய நிகழ்வுகளில் வளரிளம் மற்றும் இளம் வயதினரின் SRHR விஷயங்கள் இடம்பெறச் செய்தல்) 56p.

**ARROW.** (2012). *The essence of an innovative programme for young people in South East Asia: A position paper on comprehensive sexuality education (including youth-friendly services), meaningful youth participation & rights-based approaches in programming.* (தென்கிழக்கு ஆசியாவிலுள்ள இளம் வயதினருக்கான புதுமையான திட்டங்களில் அவசியம் இருக்க வேண்டியவை: விரிவான பாலியல் கல்வி, இளைஞர்களின் பங்கேற்பு மற்றும் திட்டங்களை உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையில் உருவாக்குவது குறித்த ஓர் ஆய்வுக் கட்டுரை.) 11p.

**ARROW.** (2012). *Leadership experiences of young women in South East Asia: Reflections on advancing young people's SRHR agenda.* (தென்கிழக்கு ஆசியாவிலுள்ள இளம் பெண்களின் தலைமைத்துவ அனுபவங்கள்: இளம் வயதினரின் SRHR நிகழ்வுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான பரிந்துரைகள்) 32p.

**ARROW.** (2012). *Thematic papers presented at the "Beyond ICPD and MDGs: NGOs strategizing for sexual and reproductive health and rights in Asia-Pacific Region" and "Opportunities for NGOs at National, Regional and International Levels in the Asia-Pacific Region in the Lead-up to 2014: NGO-UNFPA Dialogue for Strategic Engagement."* ICPD மற்றும் MDG's காலவரையறை முடிந்தபின்பும் ஆசிய - பசிபிக் பகுதியின் SRHR உரிமைகளை நிலைநாட்டுவதற்கு NGO களுக்கு உள்ள வாய்ப்புகள் என்ற தலைப்பில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாய்வுக் கட்டுரை பகிர்ந்துகொள்ளப்பட்டது. 104p.

**ARROW.** (2012). *Proceedings of the regional meetings "Beyond ICPD and MDGs: NGOs strategising for sexual and reproductive health and rights in Asia-Pacific region" and "Opportunities for NGOs at national, regional and international levels in the Asia-Pacific region in the lead-up to 2014: NGO-UNFPA dialogue for strategic engagement."* (ICPD மற்றும் MDG's காலவரையறை முடிந்தபின்பும் ஆசிய-பசிபிக் பகுதியின் SRHR உரிமைகளை நிலைநாட்டுவதற்கு NGO களுக்கு உள்ள வாய்ப்புகள் என்ற தலைப்பில் நடைபெற்ற மண்டல அளவிலான கூட்டத்தின் முடிவுகள்) 104p.

**ARROW & World Diabetes Foundation (WDF).** (2012). *Diabetes: A missing link to achieving sexual and reproductive health in the Asia-Pacific region.* (சர்க்கரை நோய்: ஆசிய-பசிபிக் கண்டத்தின் பாலியல் இனப்பெருக்க நலனை மேம்படுத்துவதில் சர்க்கரை நோய்க்கும், SRHக்கும் உள்ள தொடர்பு விடுபட்டுள்ளது) 40p.

**ARROW.** (2012). KL call to action. (கோலாலம்பூர் பிரகடனம்) 4p.

**ARROW.** (2012). KL plan of action. (கோலாலம்பூர் திட்ட நடவடிக்கை) 2p.

**ARROW.** (2011). *Reclaiming & redefining rights—Thematic studies series 4: Maternal mortality morbidity in Asia.* (உரிமைகளை மறுவரையறை செய்யவும் திருப்பிக்கொடுக்கவும் வலியுறுத்துதல் - ஆசியாவின் மகப்பேறு மரணம் மற்றும் பிரச்சனைகள்) 204p.

**ARROW.** (2011). *Reclaiming & redefining rights—Thematic studies series 3: Reproductive autonomy and rights in Asia.* (உரிமைகளை மறுவரையறை செய்யவும் திருப்பக்கொடுக்கவும வலியுறுத்துதல் ஆய்வுக் கட்டுகரைகள் தொடர்-*3* - இனப்பெருக்க சுதந்திரம் மற்றும் உரிமைகள்) 156p.

**Ravindran, T.K.S.** (2011). *Reclaiming & redefining rights—Thematic studies series 2: Pathways to universal access to reproductive health care in Asia.* ARROW. (உரிமைகளை மறுவரையறை செய்யவும், திருப்பிக் கொடுக்கவும், வலியுறுத்துதல் - ஆய்வுக் கட்டுரைகள் தொடர்-*2*; ஆசியக் கண்டத்தில் அனைவருக்கும் இனப்பெருக்க நலச் சேவைகள் கிடைக்கச் செய்வதற்கான வழிகள்) 92p.

**ARROW.** (2011). *Reclaiming & redefining rights—Thematic studies series 1: Sexuality & rights in Asia.* (உரிமைகளை மறுவரையறை செய்யவும் மற்றும் திருப்பிக் கொடுக்கவும் வலியுறுத்துதல் - ஆய்வுக் கட்டுரைகள் தொடர்-*1*; ஆசிய கண்டத்தின் பாலியல் மற்றும் உரிமைகள் நிலை) 104p.

**ARROW.** (2010). *Understanding the critical linkages between gender-based violence and sexual and reproductive health and rights: Fulfilling commitments towards MDG+15.* (பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளுக்கும் பெண்களுக் கெதிரான வன்முறைக்கும் இடையேயுள்ள சிக்கலான தொடர்புகளைப் புரிந்துகொள்ளுதல் - MDG*+15* தொடர்பான ஒப்பந்தங்களை நிறைவுசெய்தல்) 12p.

**ARROW & WHRAP.** (2010). *Making a difference: Improving women's sexual & reproductive health & rights in South Asia.* (ஓர் மாற்றத்தை ஏற்படுத்துவோம்; தெற்கு ஆசியாவிலுள்ள பெண்களின் பாலியல், இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளை மேம்படுத்துதல்) 126p.

**ARROW.** (2010). *Regional overview—MDG5 in Asia: Progress, gaps and challenges 2000-2010.* (*2000-2010*களில் MDG-*5*ல் ஆசியக் கண்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள். இடைவெளிகள் மற்றும் சவால்கள்: மண்டல அளவிலான ஓர் கண்ணோட்டம்) 8p.

**ARROW.** (2010). *Briefing paper: The women and health section of the Beijing Platform for Action.*(பெய்ஜிங் கூட்டு நடவடிக்கைத் திட்டத்தில் பெண்கள் மற்றும் சுகாதாரம் பற்றிய விஷயங்களின் சுருக்கக் கட்டுரை) 4p.

**Thanenthiran, S. & Racherla, S.J.** (2009). *Reclaiming and redefining rights: ICPD+15: Status of sexual and reproductive health and rights in Asia.* ARROW. (உரிமைகளை மறுவரையறை செய்யவும், திருப்பிக் கொடுக்கவும் வலியுறுத்துதல் ICPD *+15* ஆசியாவின் பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் நிலை) 162p.

**ARROW.** (2008). *Advocating accountability: Status report on maternal health and young people's SRHR in South Asia.*

(கடமையுணர்வை எடுத்துரைப்பது: தெற்காசியாவின் மகப்பேறு நலம் மற்றும் இளம் வயதினரின் SRHR நிலை குறித்த அறிக்கை) 140p.

**ARROW.** (2008). *Surfacing: Selected papers on religious fundamentalisms and their impact on women's sexual and reproductive health and rights.* (பெண்களின் பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் மீது மத நம்பிக்கைகள் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்த ஆய்வுக் கட்டுரைகளிலிருந்து வெளிப்படையாகத் தெரியவருவது) 76p.

**ARROW.** (2007). *Rights and realities: Monitoring reports on the status of Indonesian women's sexual and reproductive health and rights; Findings from the Indonesian Reproductive Health and Rights Monitoring & Advocacy (IRRMA) project.* (உரிமைகளும் உண்மை நிலவரங்களும் : இந்தோனேஷிய பெண்களின் பாலியல், இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகளின் நிலை குறித்த கண்காணிப்பு மற்றும் பிரச்சாரத் திட்டத்தின் முடிவுகளிலிருந்து கிடைக்கும் தகவல்கள்) 216p.

**ARROW.** (2005). *Monitoring ten years of ICPD implementation: The way forward to 2015, Asian country reports. (ICPD இன் அமலாக்கத்தை பத்து ஆண்டுகள் கண்காணித்தல்; 2015க்குப் பின் வரவிருக்கும் திட்டங்களுக்கு ஒரு வழிகாட்டுதல்; ஆசிய நாடுகளின் அறிக்கை)* 384p.

**ARROW & Centre for Reproductive Rights References (CRR).** (2005). *Women of the world: Laws and policies affecting their reproductive lives, East and Southeast Asia.* (கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலுள்ள பெண்களின் இனப்பெருக்க நலனைப் பாதிக்கும் சட்டங்களும், கொள்கைகளும்) 235p.

**ARROW.** (2003). *Access to quality gender sensitive health services: Women-centred action research.* (ஆண்பெண் சிந்தனையுடன் கூடிய தரமான மருத்துவச் சேவைகளைப் பெறுதல்: பெண்களை மையப்படுத்திய ஆய்வு) 147p.

**ARROW.** (2001). *Women's health needs and rights in Southeast Asia: A Beijing monitoring report.* (தென்கிழக்கு ஆசிய நாடுகளிலுள்ள பெண்களின் சுகாதாரத் தேவைகள் மற்றும் உரிமைகள்: பெய்ஜிங் கண்காணிப்பு அறிக்கை) 39p.

**Abdullah, R.** (2000). *A framework of indicators for action on women's health needs and rights after Beijing.* (பெய்ஜிங் மாநாட்டுக்குப் பிறகு பெண்களின் சுகாதாரத் தேவைகள் மற்றும் உரிமைகள் குறித்த நடவடிக்கைக்கான குறியீடுகள் பற்றிய ஓர் திட்டம்) 30p.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து வெளியீடுகளையும் www.arrow.org.my என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது arrow@arrow.org.my என்ற மின்அஞ்சலுக்கு கடிதம் எழுதவும்.

# சொல் விளக்கங்கள்

### வறுமை (பல பரிமாணங்கள்)

வறுமை என்பது வருமானம் அல்லது குடும்ப அளவில் நுகரப்படும் பொருட்களின் மதிப்பு மற்றும் செலவுகள் என்ற அடிப்படையில்தான் மிக அண்மைக் காலம்வரை கணக்கிடப்பட்டு வந்தது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் மனிதவள மேம்பாட்டு அறிக்கைக்காக, சர்வதேச அளவிலான வறுமையைக் கணக்கிடும் பொருட்டு பல பரிமாண வறுமைக் குறியீடு (Multidimensional Poverty Index - MPI) என்பது *2010* ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் சர்வதேச வளர்ச்சித் துறையின்கீழ் செயல்படும் வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டுக் குழுவினர் (Oxford Poverty and Human Development Initiative -OPHI) இக்குறியீட்டை உருவாக்கியுள்ளனர். வறுமையில் வாழும் ஒருவர் சந்திக்கும் பலவிதமான இன்னல்களை இக்குறியீடு எடுத்துரைக்கிறது. கல்வி, ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரம் முதலியவற்றில் ஏழைகள் எப்படி பின்தங்கியுள்ளனர் என்பது பின்வரும் *10* குறியீடுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. குறிப்பாக, கல்வி என்பது எத்தனை வருடங்கள் படித்துள்ளார்; பள்ளியில் வருகைப் பதிவு என்ற அடிப்படையிலும், ஆரோக்கிய நிலை என்பதை குழந்தை இறப்பு; ஊட்டச்சத்து, என்ற விவர அடிப்படையிலும் வாழ்க்கைத் தரம் என்பது வீட்டில் குடிநீர், துப்புரவு மற்றும் மின்சார வசதிகள் உள்ளதா? வீட்டின் தரை, சமையலுக்கு என்ன எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது மற்றும் சொத்துக்கள் என்ற விவரங்களின் அடிப்படையில் MPI கணக்கிடப்படுகிறது. மேற்சொன்ன பத்துக் குறியீடுகளில்/பரிமாணங்களில் மூன்றில் ஒரு பங்கு அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் பின்தங்கியுள்ளவர்களைப் பல பரிமாண வறுமைக் குறியீட்டின்படி ஏழை எனக் கருதப்படுகிறது. மதம், இனம் மற்றும் இதரப் பிரிவுகளின் அடிப்படையில் (MPI) கணக்கிடலாம் என்பதால் இது ஒரு மிகவும் முக்கியமான ஓர் அளவீடாகக் கருதப்படுகிறது.[1]

ஆதாரக் குறிப்புகள்

1 Alkire S., Roche J.M., Santos M.E., & Seth S. (2011). *Multidimensional Poverty Index 2011.Oxford: Poverty and Human Development Initiative, University of Oxford.* www.ophi.org.uk/wp-content/uploads/OPHI-MPI-Brief-2011.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

## உணவு உற்பத்திக்கான அதிகாரம்:

உணவு உற்பத்திக்கான உரிமை என்றால் என்ன? என்பது கிராம அளவில் பணிபுரியக்கூடிய லா வியா கேம்பன்ஸியா என்ற அமைப்பால் வரையறுக்கப்பட்டு, **1996**இல் நடைபெற்ற உலக உணவு மாநாட்டில் பொது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. உணவு உற்பத்திக்கான அதிகாரம் என்பது புதிய தாராளமயக் கொள்கைக்கு மாற்றாகக் கருதப்படுகிறது. இது மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கும், கலாச்சார ரீதியாக அவர்களுக்குப் பொருத்தமான உணவை சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான வழி முறைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்வதற்கான உரிமையாகும். மேலும், அவர்களுக்கு என்ன உணவு வேண்டும் எவ்வகையான விவசாய வழிமுறைகளைப் பயன்படுத்துவது என்பதைத் தீர்மானிப்பதற்கான உரிமையும் இதில் அடங்கும். இவ்வுரிமையானது பின்வரும் பல அடிப்படைத் தத்துவங்களை அங்கீகரிக்கிறது. உணவு என்பது மனிதனின் அடிப்படை உரிமை; உணவு உற்பத்தி செய்பவர்களை மதிப்பது; அவர்களின் அனுபவங்கள் மற்றும் திறமைகளை அங்கீகரித்து உணவு தொடர்பான எல்லா முடிவுகளிலும் அவர்களைப் பங்கெடுக்கச் செய்வது அவசியம்; உணவு உற்பத்திக்கான வள ஆதாரங்கள் மீது விவசாயிகள் அதிகாரம் பெறுவதற்கான விவசாயப் புரட்சி மிகவும் அவசியம்; இயற்கை வளங்களைப் பாதுகாப்பது முக்கியம். ஊட்டச்சத்தைப் பெறுவதற்காக நாம் உணவை உட்கொள்கிறோம். எனவே, அதை வியாபாரமாக்குவதோ அல்லது மக்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் ஆயுதமாக்கவோ பயன்படுத்தக்கூடாது; மேலும், சர்வதேச அளவில் விவசாயம் மற்றும் உணவு உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்திவரும் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாடுகளை எதிர்ப்பதும் அவசியம். உணவு உற்பத்தியில் பெண்கள் ஆற்றிவரும் முக்கியப் பங்கை அங்கீகரித்து, அடக்குமுறை மற்றும் ஏற்றத்தாழ்வுகளற்ற ஒரு புதிய சமூக உறவுகளை ஏற்படுத்துவது அவசியம் எனவும் உணரப்படுகிறது.[2] தனி மனிதனின் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்புகளுக்கு அப்பாற்பட்டு உணவு உற்பத்திக்கான அதிகாரம் மற்றும் விவசாயிகளின் உரிமைகளைப் புதிய மனித உரிமைகளாகப் பார்க்கவேண்டும். பிரதேசம் சமூகம் என பலருக்கும் தேவைப்படும் ஒரு கூட்டுரிமையாக இதைக் கோரவேண்டும்.[3] உணவுப் பாதுகாப்பிற்கான ஓர் அடிப்படைத் தேவையாக உணவு உற்பத்திக்கான அதிகாரம் உள்ளது.

## உணவுப் பாதுகாப்பு:

ஓர் உறுதியான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்குத் தேவைப்படும் சத்தான உணவைப் போதுமான அளவு எல்லா மக்களுக்கும் எல்லா நேரங்களிலும் எவ்விதப் பொருளாதாரத் தடையுமின்றிப் பெறுவதை உணவுப் பாதுகாப்பு என்கிறோம். இவ்வரையறையின் அடிப்படையில், உணவுப் பாதுகாப்பு என்பதில் பின்வரும் நான்கு பரிமாணங்கள் கண்டறியப்பட்டுள்ளது; உணவு கிடைப்பது, உணவைப் பெறுவதற்கான வசதிகள், உணவைப் பயன்படுத்துவது மற்றும் உணவிற்கு உத்திரவாதத்தை ஏற்படுத்துவது (உலக உணவு மாநாடு *1996*). உணவு கிடைப்பது என்பது உள்நாட்டு உற்பத்தி, இறக்குமதி அல்லது உணவுப் பொருட்களை நன்கொடையாகப் பெறுவதன் மூலமாகப் போதுமான அளவு, தகுந்த உணவு கிடைப்பதை உறுதிப்படுத்துகிறது. உணவைப் பெறுவது என்பது ஒரு சத்துள்ள உணவைப் பெறுவதற்குத் தேவையான வள ஆதாரங்களைத் தனிநபர்கள் அடைவதற்கான உரிமையை வழங்குகிறது. உணவைப் பயன்படுத்துவது என்பதில் சமச்சீரான உணவுகளை உட்கொள்வது மற்றும் உடலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உணவு அல்லாத பிற வசதிகளான சுத்தமான நீர், துப்புரவு மற்றும் ஆரோக்கிய வசதிகளை அடைவதை எடுத்துரைக்கிறது. கடைசியாக உத்திரவாதத்தை ஏற்படுத்துவது என்பதில் உணவு எல்லா நேரங்களிலும் தட்டுப்பாடின்றி கிடைப்பதையும், திடீரென ஏற்படும் பொருளாதாரச் சுற்றுச்சூழல் நெருக்கடிகள் அல்லது பருவகாலங்களில் தோன்றும் உணவுப் பாதுகாப்பின்மையின் விளைவுகளையும் குறிக்கிறது.

## உணவுக்கு உத்திரவாதமின்மை

ஓர் உறுதியான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழவும், இயல்பான உடல், மன வளர்ச்சியைப் பெறுவதற்குத் தேவைப்படும் அளவு போதுமான ஊட்டச்சத்துள்ள உணவை மக்கள் பெறமுடியாத ஒரு சூழ்நிலையைத்தான் உணவிற்கு உத்திரவாதமின்மை என்கிறோம் உணவு சரிவரக்கிடைக்காதது, உணவை

### ஆதாரக் குறிப்புகள்

2 Declaration of the Forum for Food Sovereignty, Nyéléni 2007. www.nyeleni.org/spip.php?article290 என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

3 Claeys, P. (2013). *From food sovereignty to peasants' rights: An overview of La Via Campesina's rights-based claims over the last 20 years.* Paper No. 24 for discussion at "Food sovereignty: A critical dialogue," International Conference, September, 2013. Yale, USA: Program in Agrarian Studies, Yale University. www.yale.edu/agrarianstudies/foodsovereignty/pprs/24_Claeys_2013-1.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

பெறுவதற்கான சக்தி மக்களிடம் இல்லாதது, குடும்பங்களில் உணவு சரிவரப் பகிர்ந்தளிக்கப்படாதது போன்ற பல காரணங்களினால் இப்பிரச்சனை ஏற்படுகிறது. உணவிற்கு உத்திரவாதமின்மை, ஆரோக்கியம் மற்றும் துப்புரவு வசதிகள் சரிவர இல்லாதது, தவறான பராமரிப்பு மற்றும் உணவு உட்கொள்ளும் நடைமுறைகள் அனைத்தும் ஊட்டச்சத்துக் குறைபாடுகளுக்கு முக்கியக் காரணங்களாகும். உணவுக்கு உத்திரவாதமின்மை நாள்பட்ட அளவில் இருந்து பட்டினிக்கும் வழிவகுக்கும். சில சமயங்களில் அவை தற்காலிகமானதாகவும் இருக்கலாம்.[4]

## ஊட்டச்சத்துப் பற்றாக்குறை:

ஊட்டச்சத்துள்ள உணவுகளைக் குறைவாக உட்கொள்வதனால் மற்றும் தொடர்ந்து தொற்றுநோய்களுக்கு ஆளாவதன் விளைவாக உணவிலுள்ள சத்துக்களை உடல் உட்கிரகித்துக் கொள்ள முடியாததனால் ஏற்படக்கூடிய ஒரு பிரச்சனைதான் இந்த ஊட்டச்சத்துப் பற்றாக்குறை (Undernutrition). இதில் வயிற்றுக்குத் தகுந்த உடல் எடையைக் கொண்டிராமல் நோஞ்சானாக இருப்பது, மிகவும் குள்ளமாக இருப்பது மற்றும் வைட்டமின் மற்றும் தாது உப்புக்களின் பற்றாக்குறை என பல அடங்கும்.[5]

## நாள்பட்ட ஊட்டச்சத்துப் பற்றாக்குறை அல்லது பட்டினி:

உடலின் ஆற்றல் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவைப்படும் அளவு உணவை ஒரு வருடத்திற்கு மேலாகப் பெறமுடியாமல் இருக்கும் ஒரு நிலையைத்தான் நாள்பட்ட ஊட்டச்சத்துப் பற்றாக்குறை என்கிறோம். பட்டினி என்பது நாள்பட்ட ஊட்டச்சத்துக் குறைபாடு என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது.[5]

## ஊட்டச்சத்துக் குறைபாடு

நுண்ணூட்டம் மற்றும் பேரூட்டச் சத்துக்களைக் குறைவாக அல்லது அளவுக்கு அதிகமாக மற்றும் சமச்சீரற்ற அளவில் உட்கொள்வதனால், உடலில் ஏற்படும் அசாதாரண நிலைதான் ஊட்டச்சத்துக் குறைபாடு என அழைக்கப்படுகிறது. இதில், ஊட்டச்சத்துப் பற்றாக்குறை, மிதமிஞ்சிய அளவில் ஊட்டச்சத்து காணப்படும் நிலை மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களில் குறைபாடுகள் எனப் பல வகைகள் உள்ளன.

## உணவிற்கான உரிமை:

சமூகத்திலுள்ள ஒவ்வொரு ஆண்-பெண் மற்றும் குழந்தையும் தனியாகவோ அல்லது சமூகத்திலுள்ள மற்றவர்களுடன் சேர்ந்தோ போதுமான உணவை எல்லா நேரங்களிலும், பொருளாதார ரீதியாகப் பெறக்கூடிய அல்லது பெறுவதற்கான வழிவகைகளைப் பெற்றிருக்கும்போதுதான் உணவிற்கான உரிமை என்பது உணரப்படுகிறது. உணவிற்கான உரிமை என்பது ஓர் அடிப்படை மனித உரிமை என 1948இல் ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனத்தில் (United Nations Universal Declaration of Human Rights - UDHR) தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் சரத்து 25-ன்படி நல்ல வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கான உரிமையின் ஓர் அங்கமாக, இவ்வுரிமை அங்கீகரிக்கப்பட்டது. அதன்பின்பு 1999இல் உருவாக்கப்பட்ட சர்வதேச சமூகப் பொருளாதார மற்றும் கலாச்சார ஒப்பந்தத்தின் சரத்து 11ன்படி அவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள நாடுகளின் அரசாங்கங்கள் இவ்வுரிமையை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளன.[6] மேலும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவிற்கான உரிமைப் பிரிவின் சிறப்பு அதிகாரி, உணவிற்கான உரிமை என்பதைப் பின்வருமாறு வரையறுத்துள்ளார். நேரடியாகவோ அல்லது பணம் கொடுத்துப் பெறுவதன் வாயிலாகவோ உணவைத் தடையின்றி ஒழுங்காக மற்றும் நிரந்தரமாகப் பெறுவதற்கான உரிமை இது என்றும், மக்களின் கலாச்சாரப் பாரம்பரியத்திற்குப் பொருத்தமான, போதுமான அளவு மற்றும் தரமான உணவைப் பெறுவதும் அவர்களின் உரிமையாகும். மேலும் உடல் மன ஆரோக்கியத்துடன் தனிநபராக மற்றும் கூட்டாக அச்சமற்று மனித மாண்புடன் வாழ்வதையும் இவ்வுரிமை உறுதி செய்கிறது எனத் தெரிவிக்கிறார்.[7]

## பாலியல்

பாலியல் என்பது மனித வாழ்வின் ஒரு மையப் பொருளாக உள்ளது. இதில் பால், பாலின அடையாளங்கள், பாலின வேலைப் பகிர்வு, பாலியல் அனுபவங்கள், பாலுணர்ச்சி, மகிழ்ச்சி, அந்தரங்கம் மற்றும் இனப்பெருக்கம் எனப் பல விஷயங்கள் உள்ளன. பாலியல் என்பது ஒருவரின் சிந்தனைகள், விருப்பங்கள், பழக்க வழக்கங்கள், மதிப்பீடுகள், நடவடிக்கைகள், அனுபவங்கள் மற்றும் உறவு முறைகள் என்ற பலவழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. பாலியலில் பல பரிமாணங்கள் உள்ள போதும் இவைகள் அனைத்தையும் எல்லா நேரங்களிலும் வெளிப்படுத்துவதோ அல்லது

### ஆதாரக் குறிப்புகள்

4 Food and Agriculture Organisation (FAO). (2006). Food security. Policy Brief, 2, June 2006. Rome, Italy: FAO's Agriculture and Development Economics Division (ESA) with support from the FAO Netherlands Partnership Programme (FNPP) and the EC-FAO Food Security Programme. ftp://ftp.fao.org/es/ESA/policybriefs/pb_02.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

5 Basic definitions from FAO's Hunger Portal www.fao.org/hunger/en/ என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

6 UN Committee on Economic, Social and Cultural Rights (CESCR). (1999). General comment no. 12: The right to adequate food (Article 11 of the covenant) http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G99/420/12/PDF/G9942012.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

7 UN Special Rapporteur on the Right to Food. Retrieved from www.srfood.org/en/right-to-food

உணரப்படுவதோ இல்லை. உயிரியல் உளவியல், சமூகப் பொருளாதாரக் கலாச்சார அரசியல், சட்டம் மற்றும் மனிதக் கோட்பாடுகள் என பல காரணிகள் ஒன்றிணைந்து பாலியல் என்பதன் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.[8]

இனப்பெருக்க நலன், இனப்பெருக்க உரிமைகள், பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் உரிமைகள் குறித்த சொல் விளக்கங்களுக்கு: Ando, M.M. (2009). Definitions, ARROWs for Change, 15(2&3): *19* என்ற புத்தகத்தையும், எல்லோருக்குமான பாலியல் இனப்பெருக்க நலச் சேவைகள் குறித்த சொல் விளக்கங்களுக்கு: Ando, M.M. (2010) Definitions. ARROWs for Change. 16(1): *22* என்ற புத்தகத்தையும் பார்க்கவும்.

ஆதாரக் குறிப்புகள்

8 World Health Organisation (WHO). (2006).Defining sexual health: Report of a technical consultation on sexual health, 28-31 January 2002. Geneva: WHO. www.who.int/reproductivehealth/publications/sexual_health/defining_sexual_health.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

தொகுத்தவர் : **அம்பிகா வர்மா** (Ambika Varma), ஆராய்ச்சியாளர்,
மின் அஞ்சல்: ambikavarma@yahoo.com

# தெற்காசிய நாடுகளிலுள்ள உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கான கொள்கைகள் என்னென்ன; அவைகளில் ஆண்-பெண் சமத்துவம் மற்றும் SRHR குறித்த கண்ணோட்டங்கள் இடம்பெற்றுள்ளதா?

போதுமான உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கான உரிமை என்பது அனைவருக்கும் பொதுவான ஓர் உரிமை என **1948** இல் உருவாக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், **1966**-ல் ஏற்படுத்தப்பட்ட சமூகப் பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்திலும் (ICESCR) இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இதைச் சர்வதேச ஒப்பந்தத்தில் சரத்து **11**-வுடன்[1] இணைத்து இவ்வுரிமைக்கு சட்ட அங்கீகாரம் வழங்குவதற்கு[2] *30* ஆண்டுகளுக்கும் மேல் ஆனது. உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கான உரிமைக்கும் நாம் உயிர்வாழ்வதைப் பாதிக்கக் கூடிய இதர மனித உரிமைகளுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருக்கிறது. உணவிற்கான உரிமை என்பதிலேயே ஊட்டச்சத்திற்கான உரிமையும் அடங்கியுள்ளது. ஏனென்றால், நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாடு, ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நோய்களுக்கு வழிவகுக்கிறது. ஊட்டச்சத்துப் பற்றாக்குறை என்ற இந்த மறைமுகப் பசிப்பிணியினால் உலகம் முழுவதும் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

*2013*-ஆம் ஆண்டிற்கான சர்வதேசப் பட்டினிக் குறீயீடு (Global Hunger Index)[3] *130* நாடுகளுக்குக் கணக்கிடப்பட்டது. அதில் தெற்காசியநாடுகள்[4] தான் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. இக்குறியீட்டின் அடிப்படையிலான தரவரிசைப் பட்டியலில் இந்தியா **63**-வது இடத்திலும், அதனைத் தொடர்ந்து வங்காள தேசம் (**58**-வது) பாகிஸ்தான் (**57**-வது) நேபாளம் (**49**-வது) மற்றும் இலங்கை (*43* வது) ஆகிய நாடுகள் உள்ளன.

கடந்த சிலவருடங்களாக இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் உணவு உற்பத்தியானது, தேவைக்கு அதிகமாவே உள்ளது. அதுபோலவே வங்காளதேசம் மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளின் உணவுப் பற்றாக்குறையின் அளவும் கணிசமாகக் குறைந்து வருகிறது. எனவே தெற்காசியாவில் பல இலட்சக்கணக்கானோர் பட்டினியால் வாடுவதற்கு உணவுப் பற்றாக்குறை என்பது மட்டும் காரணம் அல்ல. உணவுப் பொருட்கள் சரிவர விநியோகிக்கப்படாதது, குறிப்பாக, சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு உணவுப் பொருட்கள் சரிவரக் கிடைக்காதது, பாதுகாப்பான சேமிப்பு வசதிகள் இல்லாததினால் உணவுப் பொருட்கள் வீணாவது மற்றும் உணவுப் பொருட்களின் முன் கணிப்பு வியாபார நடைமுறைகளும் பட்டினிக்குக் காரணங்களாக உள்ளன. மேலும், வறுமை ஒழிப்பு, உணவு மற்றும் விவசாயம், உணவுப் பாதுகாப்புத் தொடர்பான உறுதியான கொள்கை ஏதும் இல்லாததும் இப்பகுதியில் பட்டினி அதிகமாக நிலவுவதற்கு முக்கியக் காரணங்களாகும்.

1 ICESCR ஒப்பந்தத்தின் பிரிவு 11ன்படி போதுமான உணவிற்கான உரிமை என்பது நல்ல வழ்க்கைத் தரத்துடன் வாழ்வது மற்றும் பட்டினியிலிருந்து விடுபடுவதற்கான அடிப்படை உரிமையின் ஒரு பகுதியாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 UN Food and Agriculture Organization (FAO). (2013). *2012 Guidance note: Integrating the Right to Adequate Food into food and nutrition security programmes.* Rome, FAO. www.fao.org/docrep/017/i3154e/i3154e.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

3 Von Grebmer et al. (2013). *2013 Global hunger index. The challenge of hunger: Building resilience to achieve food and nutrition security. Bonn, Washington DC, and Dublin: Welthungerhilfe, International Food Policy Research Institute (IFPRI) and Concern Worldwide.* www.ifpri.org/sites/default/files/publications/ghi13.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

4 GHI கணக்கீட்டில் பூட்டான் மற்றும் மாலத்தீவுகள் இடம்பெறவில்லை காரணம் இந்நாடுகளில் அத் தகவல்கள் கிடைக்கவில்லை.

ஆதாரக் குறிப்புகள்

5 தெற்காசிய நாடுகளில் பூட்டான் மட்டும் ICESCR ஒப்பந்தத்தில் கையொப்பம் இடவில்லை.

6 அடைப்புக்குறிக்குள் உள்ள எண்கள் உணவிற்கான உரிமைச் சட்டத்தின் சரத்து அல்லது பிரிவு எண்களை குறிக்கிறது.

7 இச்சட்டத்தின் சரத்துக்களைப் பெற: www.lawyerscollective.org/wp-content/uploads/2013/09/167830870-National-Food-Security-Act-2013.pdf

*1990*-களின் பின்பகுதிகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி மற்றும் *21*-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நூற்றாண்டு வளர்ச்சி இலக்குகளின் (MDG's) விளைவாக வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் பட்டினி ஒழிப்பு தொடர்பான பல கொள்கைகளையும், திட்டங்களையும் தெற்காசிய நாடுகள் கொண்டு வந்தன. சமீபத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட இக்கொள்கைகளினால் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டறிவதற்கு இன்னும் சில வருடங்கள் ஆகவேண்டும் என்பதனால், அவைகளில் கருத்தாக்கம் எந்த அளவு இருக்கிறது, மேலும் இதில் முக்கியக் கருத்துக்கள் எவ்வாறு எடுத்துரைக்கப் பட்டுள்ளது என்பது குறித்து இக்கட்டுரை ஆய்வு செய்கிறது அதன் மூலம் பல முக்கிய விஷயங்கள் நமக்குப் புலப்படும். குறிப்பாக, அதில் ஆண்-பெண் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் இதர சமூகப் புறக்கணிப்புக்களைக் களைவதற்கும், பெண்களின் முன்னேற்றம் மற்றும் அவர்களின் SRHR மேம்பாட்டிற்கும் இக்கொள்கைகள் எப்படி உதவியாக இருக்கும் என்ற விவரங்கள் தெரியவரும். உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் வறுமையைக் குறைப்பது தொடர்பாக வங்காள தேசம், நேபாளம், இந்தியா ஆகிய மூன்று நாடுகளில் சமீபத்தில் கொண்டு வரப்பட்ட சில சமூகக் கொள்கைகளை இக்கட்டுரையில் மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

## மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்கள்:

வங்காள தேசம், இந்தியா மற்றும் நேபாள நாடுகளின் அரசாங்கங்கள் ஐ.சி.இ.எஸ்.சி.ஆர். (ICESCR) என்ற சர்வதேச ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதன் வாயிலாக உணவு மற்றும் ஊட்டச் சத்திற்கான உரிமைகளை முறைப்படி அங்கிகரித்துள்ளன. அதன்படி இந்நாடுகளிலுள்ள மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதற்கும் மேலும், அவைகள் சரிவரக் கிடைக்கச் செய்வதற்கும் இங்குள்ள அரசாங்கங்கள் கடமைப்பட்டுள்ளன.[5] மேலும், போதுமான உணவிற்கான உரிமையை அதன் குடிமக்களுக்கு வழங்குவதற்கு இம்மூன்று நாட்டின் அரசாங்கங்களும் சட்டரீதியாக கட்டுப்பட்டுள்ளன. வங்காள தேசம் *(15)*[6] இந்தியா *(21,39,41,43,47)* மற்றும் நேபாளம் *(26)*. சமூக உதவித் திட்டத்தின் பயன்கள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில், இந்நாடுகளில் சமீபத்தில் கொண்டு வரப்பட்டுள்ள சமூக மேம்பாட்டுக் கொள்கைகளில் உரிமைகள் என்ற கருத்து வெளிப்படுகிறது.

இந்திய அரசாங்கம் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (National Food Security Act - NFSA) என்ற ஒன்றை *2013*-ஆம் ஆண்டு கொண்டு வந்தது.[7] இச்சட்டத்தின் நோக்கமானது; மனிதனின் வயதுக்குத் தக்கவாறு உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை வழங்குவது, (Life Cycle approach) மக்கள் மனித மாண்போடு வாழத் தேவையான தரமான உணவுப் பொருட்கள் அவர்கள் வாங்கக்கூடிய விலையில் கிடைப்பதை உறுதி செய்வதுமாகும். உணவிற்கான உரிமை என்பதற்கு ஒரு சட்ட அங்கீகாரம் வழங்கி நீதிகோருவதற்கான வாய்ப்புகளையும் இச்சட்டம் உருவாக்கியுள்ளது. இச்சட்டத்திற்குத் துணைபுரியக்கூடிய இதர சில சட்டங்களையும் இந்திய அரசு கொண்டு வந்துள்ளது. அதில் குறிப்பாக, பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், கல்வியுரிமை, மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உத்திரவாத சட்டம் (Mahatma Gandhi National Rural Employment Gurantee Act - MGNREGA) தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் (National Rural Health Mission - NRHM) என்ற சட்டங்களையும் கொண்டு வந்தது. *2001*-ல் கொண்டு வரப்பட்ட தாவர வகைகள் மற்றும் விவசாயிகளின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்திலும் உணவு உற்பத்திக்கான உரிமை என்பது இடம்பெற்றுள்ளது.

நேபாள நாட்டின் உச்சநீதிமன்றத்தில் *2008* ஆம் ஆண்டு ஒரு வழக்கு பதிவானதைத் தொடர்ந்து உணவிற்கான உரிமைச் சட்டம் இயற்றுவதற்கான முயற்சிகளை அந்நாட்டு அரசு எடுத்துவருகிறது. அவ்வழக்கு தொடர்பாக *2010*இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு உணவிற்கான உரிமை என்பது நியாயமான ஒன்று எனத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. வயதானவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்குவது மற்றும் வேலைவாய்ப்பு உத்திரவாதச் சட்டம் (Employment Gurantee Act - EGA) என இரு சட்டங்களை நேபாள அரசு கொண்டு வந்தது. மேலும், குடிமக்களின் உரிமைகளுக்கு உதவுவது என்ற அடிப்படையில் பாலியல் ரீதியாக

சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. வங்காள தேசத்தின் அரசியலமைப்புச் சட்டத்தில் உணவிற்கான உரிமை என்பது இடம் பெற்றுள்ளது. இருப்பினும் அதற்குச் சட்டரீதியான அங்கீகாரம் ஏதும் இதுவரை அளிக்கப்படவில்லை. அதனால் அந்நாட்டு அரசு தனது கடமையை நிறைவேற்றத் தவறினால் நாம் நீதிமன்றத்தை அணுக முடியாது.

### ஆண்-பெண் சமத்துவம் மற்றும் பெண்களைப் பற்றிய குறிப்புகள்:

இந்தியாவின் NFSA மற்றும் MGNREGA ஆகிய இரு திட்டங்களிலும் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. குடும்பத்திலுள்ள மூத்த பெண்ணைக் குடும்பத் தலைவராக (18 வயதிற்கு மேற்பட்டவரை) அங்கீகரித்து அவரது பெயரில் குடும்ப அட்டை வழங்குவதற்கான சிறப்பு அனுமதியை NFSA வழங்கியுள்ளது. MGNREGA பணிகளில் பெண்களின் பங்கேற்பை அதிகரிக்கும் பொருட்டு மூன்றில் ஒரு பங்கு பணியிடங்கள் பெண்களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பணிபுரியும் பெண்களின் குழந்தைகளுக்குக் காப்பக வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் 1976-இல் கொண்டு வரப்பட்ட சமக்கூலித் திட்டத்தின்படி, (கிராம மேம்பாட்டு அமைச்சகம் 2008)[8] ஆணுக்குச் சமமாகக் கூலி பெண்களுக்கு வழங்குவது என்ற வாய்ப்புகளும் இத்திட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பாலியல் ரீதியாக சிறுபான்மையினர் மற்றும் இதர நலிவடைந்த பிரிவினர்களைப் பற்றி இவ்விரு சட்டத்தின் சரத்துக்களிலும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை, பாலின அடையாளங்களின் அடிப்படையில் நடக்கும் பாகுபாடுகளைத் தடுக்கும் பொருட்டு மூன்றாவது பாலினத்தவர் என்ற ஒரு பிரிவை உருவாக்குவதற்கான சட்ட அங்கீகாரத்தை உச்சநீதிமன்றம் சமீபத்தில் வழங்கியுள்ளது.[9] இதன்மூலம் உணவு மற்றும் ஊட்டச் சத்துக்கான உரிமை என்பது இக்குழுவினருக்கும் விரிவுபடுத்தப்படும் என நம்பப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு வங்காள தேசத்தில் தேசிய உணவுக் கொள்கை கொண்டு வரப்பட்டது. அதன் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்று பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட அனைவருக்கும் போதுமான ஊட்டச்சத்துக் கிடைப்பதை உறுதி செய்வதாகும். ஆனால் இக்கொள்கைகளில் பாலின சமத்துவம் பற்றிய குறிப்புகள் வெளிப்படையாக இல்லை. எனவே, பாலியல் ரீதியாக சிறுபான்மையினரை இத்திட்ட நடைமுறைகளில் இலக்கு மக்களாகச் சேர்க்காமல் புறக்கணிக்கப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

### இதர பிரிவினர்கள் பற்றிய குறிப்புகள்:

இந்தியா மற்றும் வங்காள தேசத்தின் கொள்கைகளில் மாற்றுத்திறனாளிகளைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. அதுபோலவே, நேபாள நாட்டின் மாற்றுத்திறனாளிகள் பற்றிய கொள்கையிலும், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரம் போன்றவற்றில் எவ்விதப் பாகுபாடும் இருக்கக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கான உரிமைகள் தொடர்பான எவ்விதக் குறிப்பும் அவற்றில் இடம்பெறவில்லை. இந்தியாவின் NFSA-வானது வாழ்க்கைச் சுழற்றி அணுகுமுறையை (Life cycle approch)பின்பற்றியுள்ளது. அதில் வளரிளம் மற்றும் இளம் வயதினர்களின் உரிமைகள் இடம்பெற்றுள்ளன. வங்காள தேசத்தின் உணவுக் கொள்கையிலும் ஒரு முக்கிய இலக்கு மக்களாக வளரிளம் பருவத்தினர் உள்ளனர். ஆனால், நேபாள நாட்டின் உணவு உற்பத்திக்கான உரிமையில் வளரிளம் பருவத்தினரைப் பற்றிய விவரங்கள் ஏதும் இடம்பெறவில்லை. இருந்த போதிலும் அந்நாட்டின் உணவுப் பாதுகாப்புக் கொள்கை மற்றும் திட்ட அமலாக்கங்களில் வளரிளம் பருவத்தினரையும் சேர்த்துக் கொண்டுள்ளனர்.

### SRHR பற்றிய குறிப்புகள்:

இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மூன்று நாடுகளின் உணவு மற்றும் ஊட்டச்சத்து கொள்கைகளில் SRHR பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை என்றாலும், பெண்களின் ஆரோக்கியம் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பற்றிய விவரங்கள் அதில் இடம்பெற்றுள்ளன. இந்தியாவின் NFSA திட்டத்தில் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் உணவுத் தேவைகளுக்கான வழிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதன்படி, அவர்களுக்கு அங்கன்வாடி மையங்கள்

ஆதாரக் குறிப்புகள்

8 Holmes, R. Sadana, N. & Rath, S. (2011). *An opportunity for change? Gender analysis of the Mahatma Gandhi National Rural Employment Guarantee Act. Project Briefing,53*. London. ODI. www.odi.org.uk/sites/odi.org.uk/files/odi-assets/publications-opinion-files/6301.pdf என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது

9. புதிய அவசரச் சட்டம் குறித்த விவரங்களைப் பின்வரும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் : www.lawyerscollective.org/wp-content/uploads/2014/04/Transgender-judgment.pdf

ஆதாரக் குறிப்புகள்

10 பன்னாட்டு நிறுவனங்களுக்கான வரிகளை நீக்குவது மற்றும் பணக்காரர்களிடமிருந்து வரிகளை வசூலிப்பதன் மூலம் வரிவருமானத்தை அதிகரிக்கலாம். அதன் மூலம் அரசின் வருமானத்தையும் பொது செலவினங்களையும் அதிகரிக்கலாம்.

மூலம் உணவு வழங்கப்படுகிறது. மேலும் மகப்பேறு உதவித்தொகையும் (ஏழாயிரம் ரூபாய்க்கு மேல்) இரண்டு அல்லது மூன்று தவணைகளில் வழங்கப்படுகிறது. இருப்பினும் HIV/AIDS யினால் பாதிக்கப்பட்டவர்களின் உணவுத் தேவைகளுக்கு உதவுதல் பற்றி எவ்வித விவரமும் அதில் இடம்பெறவில்லை. உடல் பருமன் ஏற்படுவதற்கும் பெண்களின் பாலியல் இனப்பெருக்க நலனுக்கும் உள்ள தொடர்புகள் பற்றிய விவரங்கள் NFSAவில் இடம்பெறவில்லை. வங்காள தேசத்தின் உணவுக் கொள்கையில், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பற்றிக் குறிப்புகள் மட்டும் இடம் பெற்றுள்ளது.

இம்மூன்று நாடுகளின் உணவுப் பாதுகாப்புக் கொள்கைகளில் ஏழை மக்களின் பட்டினி மற்றும் வறுமை ஒழிப்பு என்பது முக்கியமான ஒன்றாக மையப்படுத்தப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நலிவடைந்தப் பிரிவினருக்கு பொது விநியோக அமைப்புகளின் (PDS) மூலம் மான்யவிலையில் உணவுப் பொருட்களை வழங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இக்கொள்கைகள் அனைவருக்கும் பொதுவானதாகவும், எல்லோரும் பயன்பெறும் வகையிலும் இல்லை. மேலும் வெளிப்படைத்தன்மை இல்லாதது, மற்றும் பொறுப்புணர்வு பற்றி எதுவும் தெரிவிக்கப்படாததினால் முறைகேடுகளுக்கு இதில் அதிக வாய்ப்பு உள்ளது.

## பரிந்துரைகள்:

வறுமை, ஏற்றத்தாழ்வுகள் மற்றும் உணவிற்கு உத்திரவாதமின்மை ஆகிய மூன்று பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு உறுதியான கொள்கைகள் தேவைப்படுகிறது. மறுபுறம் இக்கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கு அரசியல் ஆர்வமும் கடமையுணர்வும் அவசியமாகிறது. சிறப்புப் பரிந்துரைகள் சில பின்வருமாறு:

*1. சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளில் இந்நாடுகளின் அரசாங்கங்கள் தீவிரமாக ஈடுபட வேண்டும். உணவு உரிமைக்கு உத்திரவாதம் வழங்கும் அதே வேளையில் மக்களின் இதர உரிமைகளைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளையும் அவசியம் மேற்கொள்ள வேண்டும்.* முக்கியமாகக் கல்வி, சுகாதாரம் அதிலும் குறிப்பாக SRHR உரிமைகள், நீர், நிலம், துப்புறவு, இருப்பிடம், சிவில் மற்றும் அரசியல் பங்கெடுப்பதற்கான உரிமைகள் மேம்பட வேண்டும். மேற்சொன்ன பல வகையான உரிமைகளை மதிப்பது, பாதுகாப்பது மற்றும் நிறைவேற்றுவதற்கான கொள்கைகளும் திட்டங்களும் நடைமுறையில் இருக்க வேண்டும். கல்வி, சுகாதாரம், உணவு மற்றும் விவசாயம் போன்ற சமூகப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை அரசாங்கங்கள் அதிகரிக்க வேண்டும். வசதியானவர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிகளை அதிகரிப்பதன் மூலம் இதை நடைமுறைப் படுத்தலாம்.[10] மேலும், சேவைகளை வழங்குவதில் வெளிப்படையான அணுகுமுறையையும் கடமையுணர்வையும் உறுதிப்படுத்தும் வகையில் தக்க கண்காணிப்பு முறைகளையும் அரசாங்கம் கொண்டுவர வேண்டும். குறிப்பாக, நீதித்துறையானது தீர்ப்புகளை உடனடியாக வழங்கவேண்டும்.

*2. உணவு மற்றும் ஊட்டச்சத்திற்கான உரிமைகளை எடுத்துரைக்கும் கொள்கைகள், திட்டங்களில் ஆண்-பெண் சமத்துவம் மற்றும் சமநிலை என்பது முக்கியமான ஒன்றாக இருக்க வேண்டும்.* அனைவருக்கும் சலுகைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும், ஜாதி, வகுப்பு, பாலியல் அடையாளங்கள், கல்வி, வசிப்பிடம் மற்றும் பாலியல் ரீதியாக நலிவடைந்த பிரிவினரைக் குறிப்பாக, இத்திட்டத்தின் இலக்கு மக்களாக மையப்படுத்த வேண்டும். தனித்தனிக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதைத் தவிர்த்து, அவைகள் ஒன்றுக்கொன்று உதவும் வகையில் உருவாக்கப்பட வேண்டும். அப்படி செய்யும் போதுதான் அரசாங்கங்களின் வெளிப்படையான அணுகுமுறையும், கடமையுணர்வும் வெளிப்படும், மேலும் இது ஊழலைத் தடுக்கவும் உதவும்.

*3. உணவு உற்பத்தி மற்றும் விவசாயிகளின் உரிமைகளுக்கு உத்திரவாதம் வழங்குவதுடன், பெண்கள் மற்றும் சிறு விவசாயிகளின் பங்களிப்பையும், அரசு அங்கீகரிக்க வேண்டும்.* விதைகள் மீதான உரிமையைப் பெண் விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அது அவர்களுக்கு அதிகாரத்தை வழங்குவதுடன் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். உள்நாட்டு

விதைகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கும் வழி ஏற்படும். நிலமற்ற விவசாயிகளுக்கு நிலத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான கொள்கைகளையும், அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும், விவசாய நிலங்களையும் காடுகளையும் பெரிய பெரிய நிறுவனங்கள் அபகரித்துக் கொள்வதைத் தடுத்தாக வேண்டும்.

4. வளர்ச்சித் திட்டங்களை மேற் கொள்வதற்குச் சில நாடுகளுக்கு வெளிநாட்டு நிதியுதவி தேவைப் படலாம். அதுபோன்ற சமயங்களில் பெரிய கம்பெனிகள் மற்றும் நன்கொடையாளர்களிடம் மக்களின் பிரச்சனைகளை முதன்மைப்படுத்துவது என்பது மிகவும் முக்கியமாகும். வளர்ச்சியை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை விடுத்து மக்களை மையப்படுத்தும் கொள்கைகளுக்கு மாறுவதற்கு, சிந்தனை மாற்றம் அவசியமாகிறது. அப்போதுதான் நிறைய பயன்கள் கிடைக்கும். உணவு மற்றும் விவசாயத்தை ஒரு போதும் வியாபாரமாக்கக் கூடாது. மேலும் விதைகள் மற்றும் இதர நுகர்பொருட்களுக்குக் காப்புரிமையைப் பெறுவதோ அல்லது கையகப்படுத்துவதோ இருக்கக் கூடாது.

5. பூச்சி மருந்துகளின் உபயோகத்தால் நாம் உட்கொள்ளும் உணவுகளின் தரம் எப்படி பாதிக்கப்படுகிறது என்பதற்கும், அதன் விளைவாக SRHR-ல் ஏற்படும் பாதிப்புகளுக்கும் உள்ள தொடர்புகள் குறித்த ஆதாரங்களைத் திரட்ட வேண்டும். அதனடிப்படையில் பூச்சி மருந்துகளின் விற்பனை மற்றும் உபயோகத்தைத் தடை செய்வதற்கு கடுமையான சட்ட திட்டங்களை அரசு கொண்டு வர வேண்டும். உணவு மற்றும் பொதுச் சுகாதாரம் தொடர்பான பிரச்சாரங்களின் வாயிலாக, உணவுப் பொருட்களிலுள்ள மருந்துகள் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் அதிகரிக்கலாம். தன்னார்வ அமைப்புகள், பள்ளிகள் மற்றும் இதர பொது ஜன ஊடகங்களுடன் இணைந்து இதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

உணவு டீ, காபி, மற்றும் இதர பானங்களின் பாக்கெட்டுகளின் மீது அதிலுள்ள பொருட்கள் குறித்த விவரங்களை அச்சிட்டு ஒட்டுவதைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

6) உணவு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் தொடர்பான கொள்கைகளில் பெண்களின் SRHR பிரச்சனைகள் குறித்த விவரங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் அனைத்துக் கொள்கைகளிலும் இனப்பெருக்க நலன், அதிலும் குறிப்பாக, கர்ப்பம் என்பதை மட்டுமே மையப்படுத்தியுள்ளனர். இப்படி ஒன்றை மட்டுமே மையப்படுத்தும் அணுகு முறையினால் பாலியல், இனப்பெருக்க நலன் என்பதிலுள்ள பல விஷயங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. எனவே பாலியல், கருவுறுதல், மலட்டுத்தன்மை, கருத்தடை மற்றும் இனப்பெருக்க உறுப்புத் தொடர்பான புற்றுநோய்கள் என SRHR-ன் பல பரிமாணங்களை உள்ளடக்கிய விரிவான கொள்கைகள் அவசியமாகிறது. மேலும் அதில் இளம் வயதினர் மற்றும் வயதானவர்களின் SRHR விஷயங்களும் இடம்பெற வேண்டும். முக்கியமாக சேவைகள் அனைவருக்கும் பொதுவானதாகவும், எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வகையிலும் இருக்க வேண்டும்.

7) எல்லாவற்றிற்கும் மேலாக உறுதியான மக்கள் இயக்கம் ஒன்று இதற்கு அவசியம் தேவைப்படுகிறது. விவசாயிகளின் கூட்டமைப்பை, அதிலும் குறிப்பாக, பெண் விவசாயிகளின் அமைப்பைப் பலப்படுத்தி இவ்வியக்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும். பெண்களின் உரிமைகள் SRHR வறுமை ஒழிப்பு மற்றும் உணவு உற்பத்திக்கான உரிமை எனப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ள தன்னார்வ அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அப்போதுதான், சமூக சேவைத் துறையைக் கம்பெனிகளைப் போன்ற அமைப்புகளாக மாற்றுவதற்கு நடைபெற்றுவரும் முயற்சிகளை முறியடிக்கவும், சமூக நீதிக்காக குரல் கொடுக்கவும் முடியும்.

கட்டுரை ஆசிரியர்: **அம்பிகா வர்மா**, (Ambika Varma) ஆராய்ச்சியாளர்,
மின்அஞ்சல்: ambikavarma@yahoo.com

**ஆரோவின் பதிப்பாசிரியர்கள் குழு**

**சிவானந்தி தானேந்திரன்** (Sivananthi Thanenthiran), செயல் இயக்குனர்

**மரியா மெலிண்டா ஆண்டோ** (Maria Melinda Ando), திட்ட மேலாளர் தகவல் மற்றும் கருத்துப் பரிமாற்றம் பிரிவு, ஆரோவின் மாற்றத்திற்காக செய்திமடலின் முதன்மை ஆசிரியர்

**அம்பிகா வர்மா** (Ambika Varma), இணைப்பதிப்பாசிரியர்

**நரிமா அவின்** (Narimah Awin), சிறப்புப்பதிப்பாசிரியர்

**எரிக்கா சேல்ஸ்** (Erika Sales), திட்ட அதிகாரி, வெளியீடுகள் பிரிவு

**கட்டுரைகளைப் படித்து ஆலோசனை வழங்கிய நிபுணர்கள்**

**கிலேர் வெஸ்ட்வுட்** (Clare Westwood), தேட் வேர்ல்டு நெட்வொர்க் (TWN) அமைப்பின் உணவு மற்றும் விவசாயம் தொடர்பான ஆராய்ச்சியாளர்

**கீதாஞ்சலி மிஸ்ரா** (Geetanjali Misra), செயல் இயக்குநர் CREA

**நிஸா ஆண்டா** (Nisha Onta), WOCAN என்ற அமைப்பின் நிர்வாக ஒருங்கிணைப்பாளர்

**டாக்டர் ரேணு ராஜ்பண்டாரி** (Dr. Renu Rajbhandari), WOREC அமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவர், நேபாளம்

**சரோஜினி வி. ரங்கம்,** (Sarojeni V. Rengam), செயல் இயக்குநர், PAN AP

**விரின்டா மர்வா** (Vrinda Marwah), திட்ட ஒருங்கிணைப்பாளர், CREA

**வார்டாரினா** (Wardarina), திட்ட அதிகாரி, APWLD

**இதழ் வடிவமைப்பாளர்கள்**

**சிமிரா** (Chimera Sdn. Bhd.), செய்தி இதழ் வடிவமைத்தவர்

**ஜிம்மார்பா** (Jim Marpa), செய்திப்பக்கங்களை வடிவமைத்தவர்

**அட்டையிலுள்ள புகைப்படத்தை வழங்கியோர்: சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம்** IRRI (IRRI 2008, Flickr Creative Commons)

**தமிழாக்கக் குழு:**

**ஆங்கிலத்தில் வெளிவந்த இச்செய்திமடலை, தமிழில் மொழியாக்கம் செய்து வெளியீடும் தோழமை நிறுவனம்: ரூரல் உமன்ஸ் சோஷியல் எஜிக்கேஷன் சென்டர் – ரூசக்** (Rural Women's Social Education Centre - RUWSEC)

**தமிழ் மொழியாக்க ஒருங்கிணைப்பாளர்:**

**ப. பாலசுப்பிரமணியன் – ரூசக் மற்றும் எரிக்கா சேல்ஸ்,** ஆரோ (P.Balasubramanian, RUWSEC & Erika Sales, ARROW)

**மொழியாக்கம்: ப.பாலசுப்பிரமணியன்,** செயல் இயக்குனர் (P.Balasubramanian, Executive Director, RUWSEC)

**மொழியாக்கத்தை சரிபார்த்தவர்: டி.கே சுந்தரி ரவீந்திரன்** (T.K.Sundari Ravindran, Founder, Secretary, RUWSEC)

**மொழியாக்கத்திற்கு உதவி: N. ஸ்ரீலக்ஷ்மி** (N.Srilakshmi) மற்றும் ரூசக் சகோதரிகள்

**தமிழ் செய்திமடல் வடிவமைப்பாளர் ஜி.வி. சுரேஷ்** (G.V. Suresh)

இச் செய்திமடலின் கருப்பொருளை வடிவமைக்க உதவிய ஆரோவின் திட்டப் பணியாளர்கள், திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர்களான, காயத்திரி நாயர் (Gaayathri Nair), குவாங் டியு ஆங் (Hoang Tu Anh), கைனிங் சாங் (Kaining Zhang), மரியா மெலிண்டோ ஆண்டே (Maria Melinda Ando), ஆங் வாங் வாத்தினி (Ouk Vong Vathiny), ரிஷிதா நந்தகிரி (Rishita Nandagiri), சாமா டோசா (Shama Dossa), சுபா கயஸ்தா (Shubha Kayastha), சிவானந்தி தனேந்திரன் (Sivananthi Thanenthiran), தாரா செட்டி(Tara Chetty), உமா திருவேங்கடம் (Uma Thiruvengadam), ஆகியோர்களுக்கு நன்றி.

AFC Vol. 20 No.1, 2014 என்ற இப்புத்தகத்தின் ஆங்கிலப்பிரதி http://www.arrow.org.my/uploads/20140616121147_v20n1.pdf என்ற முகவரியில் கிடைக்கிறது.

இப்புத்தகம் *2014* ஆம் ஆண்டு மொழியாக்கம் செய்யப்பட்டது.

மாற்றத்திற்காக செயல்படும் ஆரோ (AFC) என்பது ஒரு விஷயத்தை மையப்படுத்தி அது தொடர்பான பல கட்டுரைகளையும் தகவல்களையும் தாங்கி வெளிவரும் ஒரு செய்தி இதழாகும். ஆரோக்கியம், பாலியல் மற்றும் உரிமைகள் தொடர்பாக பல வருடங்களாக இருந்துவரும் மற்றும் புதியதாக உருவாகிவரும் பிரச்சனைகள் குறித்து சர்வதேச அளவில் நடைபெறும் விவாதங்களை உரிமைகள் அடிப்படையில் மற்றும் பெண்களை மையப்படுத்தி ஆய்வு செய்து, ஆசிய-பசிபிக் பகுதியினரின் கண்ணோட்டத்தை வழங்குவதே AFCன் முக்கிய நோக்கமாகும். AFCசெய்திமடல் வருடத்திற்கு இருமுறை ஆங்கிலத்தில் வெளிவருகிறது. ஆசிய பசிபிக் பிராந்தியத்திலுள்ள குறிப்பிட்ட சில மொழிகளில் மொழியாக்கம் செய்தும் இப்புத்தகம் வெளியாகிறது. பெண்களின் உரிமைகள், ஆரோக்கியம், மக்கள்தொகை பாலியல் இனப்பெருக்க நலன் மற்றும் உரிமைகள் குறித்து பணி செய்துவரும் நிறுவனங்கள் மற்றும் மேற்சொன்ன விஷயங்கள் தொடர்பாக சர்வதேச மற்றும் ஆசிய-பசிபிக் பகுதியில் முடிவெடுப்பவர்களுக்காகவும் இச் செய்திமடல் தயாரித்து வெளியிடப்படுகிறது. ஆசிய- பசிபிக் பகுதியிலுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கருத்துக்களுடன், ஆரோவின் தகவல் பரிமாற்ற மையத்தின் தகவல்களையும் சேர்த்து இச் செய்திமடல் உருவாக்கப்படுகிறது.

ஆரோ நிறுவனத்தின் முன் அனுமதியுடன் இச்செய்தி மடலிலுள்ள கட்டுரைகளை நகல் எடுத்து அல்லது மொழியாக்கம் செய்து கொள்ளலாம். ஆரோவின் இதழிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டது அல்லது மொழியாக்கம் செய்யப்பட்டது என்ற விவரம் அதில் அவசியம் இடம்பெற வேண்டும். மேலும் மொழியாக்கம் செய்யப்பட்டதன் நகல் ஒன்றை பதிப்பாசிரியருக்கு அனுப்பவேண்டும். புகைப்படங்களைப் பிரசுரிக்கும் உரிமை கட்டுரை ஆசிரியரையே சாரும். AFC Vol.20 No.1 *2014* என்ற இப்புத்தகத்தின் ஆங்கிலப் பிரதியை ரூசக் மற்றும் ஆரோ நிறுவனத்தின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேலும், மின் அஞ்சல் மூலமாகவும் இலவசமாகப் பெறலாம். அச்சிட்ட AFC புத்தகங்களை ஆசிய- பசிபிக், ஆப்பிரிக்கா, கிழக்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும், தென் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா பகுதியில் வசிப்பவர்கள் குறைவான கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் அமைப்பின் வெளியீடுகளை ஆரோவிற்கு அனுப்பி அதற்கு மாற்றாகவும் AFC யைப் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் பிரதிக்கு afc@arrow.org என்ற முகவரிக்கு மின் அஞ்சல் அனுப்பவும். EBSCO மற்றும் CENGAGE என்ற அமைப்புகள் வழியாகவும் AFC சர்வதேச அளவில் விநியோகிக்கப்படுகிறது.

டேவிட் மற்றும் லூசிலி பேக்காட் பவுண்டேஷன் என்ற அமைப்பின் நிதியுதவியுடன் இச்செய்திமடல் வெளிவருகிறது. இவ்வெளியீட்டில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் அனைத்தும் கட்டுரை ஆசிரியர்களுடையதாகும். பேக்காட் பவுண்டேஷன் மற்றும் அதன் நிர்வாக இயக்குனர்களின் கருத்துக்களை இது பிரதிபலிக்கவில்லை.

போர்ட் பவுண்டேஷன் மற்றும் சிடா ஆகிய இரு அமைப்புகள் ஆரோவின் முக்கியப் பணிகளுக்கு உதவி வருகின்றன.

Sida

உங்களின் கருத்துக்களும் விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன. பின்வரும் முகவரிக்கு நீங்கள் எழுதவும்

**Asian-Pacific Resource and Research Centre for Women (ARROW)**
No.1 & 2, Jalan Scott, Brickfields, 50470 Kuala Lumpur, Malaysia
E-mail: afc@arrow.org.my, arrow@arrow.org.my
Tel.: +603 22739913 / Fax : +603 22739916
Website: www.arrow.org.my
Facebook: The Asian Pacific Resource and Research Centre for Women (ARROW)
Follow us on Twitter : @ARROW-Women
YouTube: youtube.com/user/ARROWomen

**இச்செய்திமடலை தமிழாக்கம் செய்து வெளியிடும் தோழமை நிறுவனத்தை பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்:**
**Rural Women's Social Education Centre - RUWSEC**
No.61, Karumarappakkam Village, Veerapuram Post, Thirukkalukundram (Via), Kancheepuram District, Tamil Nadu, India - 603109. Phone : +91-44-27491254
E-mail: ruwsec@vsnl.com (or) ruwsec.tn@gmail.com
Website: www.ruwsec.org